Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

NAZHIKAI
London

FEBRUARY 2011

# நாழிகை

International Tamil Newsmagazine



இலங்கை:

## அரசியல் அச்சுறுத்தலும் இயற்கை அனர்த்தமும்



Bringing great food to life...
நிருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND®
உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை திறம்பட இயக்கும்!
Niru BRAND®
Quality • Taste • Value
நிருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND®
உங்கள் நிறை உணவுச் சக்கரத்தை நிறைவடையச் செய்யும்!
www.niru.co.uk
SGS SGS
Produced in our ISO 22000
HACCP Certified Factory
Design by • Aambal Magazine • www.aambal.co.uk



Call India
+ MOBILE
1p/min
CALL FROM YOUR EXISTING LANDLINE OR MOBILE
GUARANTEED MINUTES
100% MINUTES
No Connection Charge
No Maintenance Charge
No Hidden Charges
No Expiry Date
Srilanka 5p / Min
Malaysia 1p / Min
Singapore / USA & Canada / Europe ½p / Min
CALL NOW ON : 0800 652 7566 / 0207 132 9999
Or visit www.lycatalk.com
Products issued and Service provided by Lycatel Distribution UK Ltd. By purchasing a LYCATALK top-up voucher you consent to the Terms and Conditions as follows:
Rates shown are available from 0207 access numbers and are applicable when dialled to landlines of the mentioned countries, unless otherwise specified. Calls are charged 'per minute' rounded up in 1 minute increments. No maintenance charge will be applied for this card. No connection fee is applicable for any calls made using this card. Rates and offers are applicable 24/7, are correct as on 28/10/2010 are subject to change without any prior notice; this may be due to circumstances outside the control of Lycatel Distribution UK Ltd such as changes to wholesale prices that it is charged by third party suppliers, changes in marketing strategy, etc.. Charges may vary for some public and/or mobile phones; Lycatel Distribution UK Ltd. recommends that customers check the relevant charges with their mobile provider before using this product. A Toll free access (0800 ....) surcharge of 1 pence per minute will be applicable in additional to the 0207 access charges. Using the service abroad, there may be an additional surcharge of 1 pence per minute. A Payphone surcharge of 15 pence per minute will be applicable if calls are made from a payphone in the U.K. and may vary while using payphone in other countries. LYCATALK may allow/disallow calls to some premium, non-geographic, geographic, international and toll-free numbers if it finds reasonable to do so. Your service provider may charge you for using our access numbers, such as 020 and 0800; we recommend that you check this with your service provider before using this product. As a matter of policy Lycatel Distribution UK Ltd. will not intentionally disconnect any calls upto a threshold of 120 mins. provided that there is credit available for the calls. However it is possible that calls get disconnected due to matters beyond Lycatel Distribution UK Ltd control, e.g. force majeure, carrier fault, technology fault or human error. This service can only be used to terminate voice-based calls. Lycatalk may block any account(s) if they are deemed to be a financial risk due to non-payment of credit amount by wholesalers/retailers/distributors of credit vouchers. Lycatel Distribution UK Ltd. reserve the right to inform you by telephone or any other means of communication of any telecommunication products and/or services related to this product, offered by this company, or any affiliated company. If you do not wish to receive any further information, please send an e-mail stating your name and mobile/phone number to unsubscribe@lycatalk.com or call 020 7132 9999. Customer Services 0207 132 9999 or 0800 652 7566 For all Terms and Conditions visit www.lycatalk.com
TOP-UP ONLINE OR WHERE YOU SEE THIS SIGN (IN SELECTED STORES ONLY)
Bridewell Direct Ltd.
Simply Drinks
epay
Budgens
NFRN
Aleef
Costcutter
Nisa Today's
LONDIS
BOOKER
talk
Lyca

# தீபம்

உலகத் தமிழர்களுக்கு ஒரு தொலைக்காட்சி

# DEEPAM

www.deepamtv.tv

Tel: 0044 (0)208 814 6565




**14** | இலங்கை
**அரசியல் அச்சுறுத்தலும் இயற்கை அனர்த்தமும்**

**16** | இந்தியா - தமிழ்நாடு
**நெருக்கடிகளுள் கருணாநிதி**

**28** | இந்தியா
**சென்னையில் ராகுல் காந்தி எரிச்சலை ஏற்படுத்திய பதில்**

**30** | உலக விவகாரம்
**விக்கிலீக்ஸ் பாரம்பரிய செய்தி துறையின் தோல்வி?**

**32** | உலக விவகாரம் - சூழல்
**வெள்ளப்பெருக்கு 'புவி வெப்பம்' காரணம் அல்ல**

**34** | விளையாட்டு - கிரிக்கெட்
**நிலைகொள்ளும் அழகியல்**


**40** | சிறுகதை
**நிழல்**






**18** | உலக விவகாரம்
**2010இல் உலகம்: ஒரு மீள்பார்வை**




**38** | கலை - இசைவிழா
**சோலையில் புது மலர்கள்**

**42** | சினிமா
**சாத்தியமாகும் ஒரு நேர்த்தி**




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933
Vol: VI, No: 1
**Editor:** S Mahalingasivam
**Published by:**
Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105**
**Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com

**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6
**Tel: 416 613 2770**
**Sri Lanka Agent:**
P S Sundaram & Sons
406 George R de Silva Mawatha Colombo 13
Tel: 4902304/2471250
**Anual Subscription** (12 issues): **UK** £22.00 **Europe** £30.00
**Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# அரசியல் விசுவாசம்

இலங்கையில் யுத்தம் முடிவுற்ற இரண்டு ஆண்டுகளுள் மூன்றாவது தேர்தல் ஒன்று நடைபெறுகிறது. நாட்டின் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, மார்ச் 17ஆம் தேதி வாக்களிப்பு நடைபெறவிருக்கிறது.

சுமார் மூன்று தசாப்தகால யுத்தம் 2009 மே மாதத்தில் முடிவுற்ற பின்னர், 2010 ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலும் ஏப்ரலில் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்றது. ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான வாக்குகள் வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் மிகக் குறைவானதாகவே இருந்தபோது, பாராளுமன்றத் தேர்தலிலும் அரசாங்கம் இப்பகுதிகளில் பெரும் வெற்றியை ஈட்டவில்லை. இம்முறை இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட தாக்கல் செய்த அரசாங்க கட்சியின் வேட்பு மனுக்கள், வட பகுதியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிராகரிக்கப்பட்டுவிட்டன. 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி' என்ற அரசாங்க கூட்டணியின் பதிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பெயர், வேட்பு மனுக்களில் முன்னணி என்பதற்கு பதிலாக 'கூட்டமைப்பு' என்று குறிப்பிடப்பட்டிருந்ததில் இம் மனுக்களை தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார். இதனால், தேர்தலுக்கு முன்னதாக இந்த விவகாரம் மேன்முறையீட்டில் சரிசெய்யப்பட்டாலன்றி, அரசாங்கம் இந்த இரு மாவட்டங்களிலும் இத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இல்லை.

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) யும் அரசுடன் இணைந்தே ஒரே சின்னத்தில் இத் தேர்தலில் போட்டியிடவிருந்ததில் ஈ. பி. டி. பி. யும் இம் மாவட்டங்களில் இத் தேர்தல் வாய்ப்பை இழந்திருக்கிறது.


இதேவேளை, இதேமாதிரியான ஒரு சிக்கலில், கிளிநொச்சி மாவட்டத்தில் தாக்கல்செய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நியமனப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டபோது, கடைசிவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சின்னத்தின்கீழ் அவ் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முன்னதாக, தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவற்றுக்குமிடையே ஒரு தேர்தல் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தபோது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னத்திலேயே போட்டியிடுவதாக ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவையடுத்து, தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஓர் அங்கமான தமிழ் அரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் இவர்கள் போட்டியிட நியமன பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இப்போது, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய இரு கட்சிகளினதும் வீடு, உதய சூரியன் சின்னங்களில் இவர்கள் போட்டியிடுகிறார்கள்.

ஆக, தமிழ்க் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள இந்தக் கூட்டு, இந்த உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு மட்டுமான ஒரு 'தேர்தல் கூட்டே' என்று இக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிலர் தெரிவித்திருக்கிறார்கள். அதேவேளை, தமிழ் மக்களின் எதிர்காலம் கருதிய ஒரு நிரந்தர கூட்டாக செயல்பட சிலர் விருப்பும் நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார்கள்.

சுதந்திரத்துக்குப் பின்னர் சுமார் 25 ஆண்டுகளுக்குப் பின்னர், தமிழ் மக்களிடையே தங்களது அரசியல் அபிலாஷைகளை - உரிமைகள் வெல்ல அவசியமான ஒற்றுமை உணரப்பட்டது. அதன் விளைவான அரசியல் அமைப்பாக உருவாகிய தமிழர் கூட்டணி , பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியது.

அது உருவாகிய பின்னர், தமிழ் மக்கள் தங்கள் அரசியல் நடவடிக்கைகளை வலுவுடன் முன்னெடுக்க முடிந்ததென்பது உண்மை. இதுவே அந்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்பட, ஆயுத போராட்ட இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாதுகாப்பு அரணாகவும் இருந்தது.

ஆக, பின்னர் அந்த கூட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட உடைவும், எய்திய 'பலன்களு'ம் இன்று அங்கு தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுக்க முயலும் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டாய பாடமாகவேண்டும். உண்மையில், இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பான விவகாரம் முன்னரைவிட சிக்கலானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தை வென்ற அரசு, தனக்கென்றொரு நிகழ்ச்சி நிரலுடன் செயல்படுவதாகவே தெரிகிறது. இந் நிலையில், தமிழ் மக்களின் அரசியலை முன்னடத்த நினைக்கும் அரசியல்வாதிகள், அரசியலில் தமது அரசியலுக்கு அப்பால், அந்த மக்களுக்கான அரசியலில் வஞ்சிக்காத ஒரு விசுவாசம் கொள்ளவேண்டும்.



Any Occaison...Or just to impress!
A Prestigious Luxury Experience Through
Gowri's Limousine Services
Here are just a few ideas...
Weddings
Graduations/ Proms
Anniversaries/ Birthdays
Airport Pickup
Social Events
Casino Trips
Night Outs
Visit us at www.gowrilimo.com
(Advanced Booking Recommended)
1551 Keele St, Toronto, On, M6N 3G1
Call Siva 416-657-1106 or 416 242 8884


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

# உலகம்

இலங்கை


## மேன்முறையீட்டில் தோல்வி




முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, அவரது பாராளுமன்ற அங்கத்துவத்தை ரத்துச்செய்து இராணுவ நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல்செய்திருந்த மேன்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடிசெய்திருக்கிறது. இதனால் அவரது பாராளுமன்ற அங்கத்துவத்தை அவர் இழப்பதுடன், வாக்குரிமை உள்பட, அவரின் குடியியல் உரிமைகளையும் அவர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு இழக்க நேர்கிறது.

ஆயுத கொள்வனவு தொடர்பில் கடந்த செப்ரெம்பரில் இராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாக கண்டதில், அவர் தனது பாராளுமன்ற அங்கத்துவத்தை இழக்க நிர்ப்பந்திக்கப்பட்டார். இந் நீதிமன்றம் சட்ட அமைவானதல்ல என்று பொன்சேகாவின் தரப்பில் வாதிடப்பட்டபோது, அரசியல் சட்டத்துக்கு அமைவான சட்ட வலுவை அந்த இராணுவ நீதிமன்றம் கொண்டிருந்ததாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இம் மேன்முறையீட்டின் தீர்ப்பு திரு பொன்சேகாவுக்கு சாதகமாக இருந்திருந்தால், அவரின் இரண்டரை ஆண்டு சிறைத்தண்டை உள்பட, அவரின் இராணுவ அந்தஸ்து, விருதுகள் பறிக்கப்பட்டமை ஆகிய அனைத்தும் ரத்தாக வாய்ப்பாகியிருக்கும்.




அமெரிக்கா

## சவால்களுக்கு ஒபாமா அறைகூவல்

பிளவுபட்டுள்ள அமெரிக்க காங்கிரசில் ஜனநாயக, குடியரசு கட்சிகள் இணைந்து செயல்பட அதிபர் பராக் ஒபாமா உணர்ச்சி ததும்ப, தனது வருடாந்த காங்கிரஸ் உரையில் அழைப்புவிடுத்திருக்கிறார். ‘இணைந்து நாம் முன்னேறுவோம்; அல்லாவிட்டால் இல்லை’ என்று அவர் கூறினார்.

பற்றாக்குறையைக் குறைத்து, இந்தியா, சீனா போன்ற புதிய போட்டியாளர்களின் சவால்களை எதிர்கொள்ளும் விதத்திலான நடவடிக்கைகளில் அவர் அழைப்புவிடுத்தார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உள்நாட்டு செலவினத்தை மட்டுப்படுத்துவதன்மூலம் உள்நாட்டு பற்றாக்குறையை வெல்ல அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்தார்.


கணித, விஞ்ஞான கல்வியில் இந்தியா, சீனா காண்பிக்கும் ஆர்வத்தையும், ஆராய்ச்சிகளிலும் புதிய தொழில்நுட்பத்திலும் இந் நாடுகளின் முதலீட்டையும் ஒபாமா சுட்டிக்காட்டினார்.

அதிபர் பராக் ஒபாமாவின் பேச்சு, அவரது பதவிக்காலத்தின் அடுத்த அரைவாசி காலப்பகுதியை மாத்திரமன்றி, அவரின் அடுத்த பதவிக்காலத்தையும் பற்றியதென அவதானிகள் தெரிவித்தனர்.

கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலையடுத்து, காங்கிரசின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் குடியரசுக் கட்சியும், செனற் சபையில் ஒபாமாவின் ஜனநாயக கட்சியும் பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்றன.

ஆப்கானிஸ்தான்

## பெண்கள் கல்வி கற்க அநுமதி



பெண்கள் கல்வி கற்பதற்கான தடையை நீக்குவதற்கு தலிபான்கள் தயாராகவிருப்பதாகவும் உள்ளூர் மட்டத்தில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் கிராம முதியவர்களுக்குமிடையே இதுதொடர்பில் இணக்கப்பாடுகள் ஏற்படுவதாகவும் லண்டனில் ஆப்கானிஸ்தான் கல்வி அமைச்சர் பாருக் வார்டக் தெரிவித்திருக்கிறார்.

2001இல் கவிழ்க்கப்பட்ட தலிபான் அரசாங்கத்தில் பெண்கள் எவருமே கல்விகற்கவோ, வேலைபார்க்கவோ அநுமதிக்கப்படவில்லை.

இந்தியா

## தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை



தூத்துக்குடி - கொழும்பு கப்பல்சேவை பெப்ரவரி இறுதிப்பகுதியில் ஆரம்பமாகலாமென கப்பல் துறை அமைச்சர் ஜி. கே. வாசன் தெரிவித்திருக்கிறார். ஆரம்பத்தில் வாரத்தில் மூன்று நாள்கள் நடைபெறவிருக்கும் இச் சேவை, பின்னர் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல கோடி ரூபா செலவில் சர்வதேச தரத்திலான நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும் தூத்துக்குடி துறைமுகத்தில் பயணிகள் கூடம் ஒன்றை அமைச்சர் திறந்துவைத்தார். இத் துறைமுகம் 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரத்தை நினைவுகூரும்வகையில் பெயரிடப்படவிருக்கிறது.

கொழும்பு கப்பல்சேவை ஆரம்பமானதும் இரு நாடுகளுக்குமிடையே சுற்றுலா, வர்த்தக துறைகளில் பாரிய அபிவிருத்தி ஏற்படும் என்று நம்பப்படுகிறது. இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையும் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான்

## வலுவடையும் அமெரிக்க எதிர்ப்பு




அமெரிக்க தூதரக உத்தியோகத்தர் ஒருவர் பாகிஸ்தான் பிரஜைகள் இருவர்மீது மேற்கொண்ட தப்பாக்கிச் சூட்டு சம்பவம், பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்புணர்வை மேலும் அதிகரிக்கச்செய்திருக்கிறது.

பாகிஸ்தான் இலக்கத் தகடுடனான கார் ஒன்றில் பயணம்செய்த இந்த உத்தியோகத்தர், தூதரகத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுபவர் என்றும் இராஜதந்திர சிறப்புரிமை எதனையும் அவர் கொண்டிருக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

மோட்டர் சைக்கிளில் வந்த இருவர் தனது காரைக் கடத்த முயன்றதாகவும், பாதுகாப்புக்காக தனது பிஸ்டலால் சுட்டதில் அவர்கள் இருவரும் மரணமானதாவும் அந்த அமெரிக்க உத்தியோகத்தர் தெரிவித்தார். சம்பவத்தின் பின்னர், அந்த உத்தியோகத்தர் தனக்கு துணைக்கழைத்ததில் வேகமாகவந்த இன்னொரு தூதரக உத்தியோகத்தரின் காரில் சிக்குண்டு மற்றுமொருவர் அங்கு மரணமாகியிருந்தார்.


சுடுபட்ட இருவரும் கொள்ளைக்காரர்களாக இருக்கலாமென்றும், சற்று முன்னதாக வங்கியொன்றில் அந்த உத்தியோகத்தர் பணம் விடுவித்துவந்ததை அவர்கள் அவதானித்தார்கள் என்றும் கூறப்பட்டது.

பாகிஸ்தானின் வட மேற்கு பகுதியில் தலிபான்களை இலக்குவைத்து அமெரிக்கா மேற்கொள்ளும் தீவிர விமான தாக்குதல்களும் அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் நடவடிக்கைகளும் பாகிஸ்தானில் அண்மைக்காலங்களில் அமெரிக்காவுக்கு எதிரான உணர்வைத் தோற்றுவித்திருக்கின்றன.

நிலைமையைச் சுமுகமாக பேணும் முயற்சிகளில் வாஷிங்டன் ஈடுபட்டது.

துனிசியா

## இடைக்கால அரசாங்கத்துக்கு எதிர்ப்பு



துனிசியாவில் நாட்டைவிட்டு தப்பி ஓடிய அதிபர் சின் அல்-அபிடின் பென் அலிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் கலவரங்களும் தொடர்கின்றன. பிரதமர் மொஹமட் கனோச்சி, அமைச்சர்கள் பலரை பதவிநீக்கி, புதிய மந்திரி சபையுடன் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ளபோதும் இக் கலவரங்கள் தொடர்கின்றன.

சட்டவிரோதமான முறையில் உடைமைகளையும் சொத்துக்களையும் சுவீகரித்து, பணத்தை வெளிநாடுகளுக்கு மாற்றிவிடுவதாக அதிபர் பென் அலிமீது குற்றஞ்சாட்டப்பட்டு பெரும் கிளர்ச்சிகள் எழுந்தன. ஜனவரி 14ஆம் தேதி பென் அலி சவூதி அரேபியாவுக்கு தப்பி ஓடினார். அதனையடுத்து, துனிசியா அவரைக் கைதுசெய்ய சர்வதேச பிடி ஆணை பிறப்பித்துள்ளது.

பிரதமர் கனோச்சி ஊழல்களை ஒழிக்காது, பென் அலி அரசாங்கத்தில் நீண்டகாலம் அவருக்கு உடந்தையாகவே இருந்தார் என்றும் தெரிவித்து, அவருக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. களைகள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்றுஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டை ஜனநாயக பாதைக்கு கொணர்ந்து, ஆறு மாதங்களில் தேர்தலையும் நடாத்திவிட்டு தாம் விலகுவதாக கனோச்சி உறுதியளிக்கிறார்.

# ‘நீங்கள் தனவான்கள் ஆகாவிட்டாலும் ஞானவான்கள் ஆகுக!’

## மனசாட்சியைத் தேடும் மன்மோகன் சிங்

**(எல்லோரும் பிரதமரைக் கிழிகிழியென்று கிழிக்கிறார்கள். பாவம், அவருக்கு எத்தனையோ வேலைகள். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க அவருக்கு நேரமிருக்குமா?. அதனால், அவர் சார்பாக இங்கே நம் கற்பனை வேலைசெய்கிறது)**



இந்தியா சுதந்திர நாடுன்னா ஒத்துக்க மாட்டேங்கி றீங்க. அவங்கவங்க சுதந்திர மாப் பேசறாங்க; சுதந்திரமா நடந்துக்கி றாங்க. மத்தவங்க சுதந்திரத்திலே தலை யிடறது தப்பு. 'ஏன் தலையிடலே'ன்னு ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் கடிதப் பாணியில் கட்டுரை எழுதியி ருக்கிற வர் கேட்கிறார். எது வேணும்னாலும் கேட்கட்டுமே? பிரதமருக்குக் கடிதம் என்றால் பிரதமரின் முகவரிக்கு அனுப் பிச்சுட வேண்டியதுதானே. இங்கே தினமும் எத்தனையோ கடிதம் வருது. சிலது போற இடத்துக்கு போகுது. சிலது எங்கும் போறதில்லை, சும்மா காணாமப்போயிடுது; அவ்வளவு தான். அப்படி எங்கேயாவது போயி டுமில்லே? நானும் கவலைப்படப்போ றதில்லை. இவர் ஏன் பத்திரிகையில் கடிதம் எழுதணும்? அது என் போஸ்ட் ஆபீசா?

சரி, எழுதறதுதான் எழுதறாரு, அவரு மாநிலத்தைச் சேர்ந்த எத்தனை பேர் முதல்வரை விமரிசனம்செய்யாம, வெறுமனே முகஸ்துதி மட்டும் செஞ்சு எழுதறாங்களே, அப்படி எழுதிட்டுப் போயிடக்கூடாதா? கேள்வி மன் னன்னு நெனப்பு. கேள்விகளா அடுக்கு றாரு. எனக்கு மட்டும் பதில் சொல்லத் தெரியாதா? சொல்லாம இருப்பேனா? சொல்வேன். நிச்சயம் சொல்வேன். ஆனா, சத்தமாச் சொல்லமாட்டேன். யாரு காதிலாவது விழுந்தா வம்பாப் போயிடுமில்ல! இப்போ, இவரு கேட்ட கேள்விகள் எல்லோருக்குமே தெரிஞ்சுபோயிட்டதால, நானும் பதில் சொல்லவேண்டியிருக்கு. எழுத்திலே போட்டுட்டாரே, நானும் எழுத்தி லேயே போட்டுத் தொலையறேன். திட் டணும்னு தோணுது. எனக்கு யாரை யும் திட்டிப் பழக்கமில்லை.

எல்லாம் பிரதமருக்கு தெரிஞ்சு தான் நடந்ததுன்னு யாரோ 'ராஜா'வோ, மந்திரியோ - அவரு இப்ப என்னவா இருக்காரோ, யாருக்குத் தெரியும்? அவர் ஏதோ சொன்னா ராமே, அது பத்தி நீர் உண்டு என்றீரா, இல்லை என்றீரா, கொஞ்சம் உண்டு, கொஞ்சம் இல்லை என்றீரா, ஞாபக மில்லைன்னாவது சொன்னீரான்னு கேட்கிறார். இவருக்கென்ன, சொந் தமா கட்டுரை எழுதறாரு. நாலைஞ்சு பேர்கிட்ட கேட்டுத்தான் ஒவ்வொரு வார்த்தையையும் எழுதணும்னு இருந்தா இப்படி எழுதுவாரா? நான் எதையும் தனியாச் செய்ய முடியா தைய்யா, காலைக் கடன்கள், மாலைக் கடன்கள்தவிர. வழிபாட்டையும் மௌனமா மனசுக்குள்ளதான் செஞ் சுக்கறேன்.

எதிர்க் கட்சிகள் உங்க ராஜிநா மாவை முதலிலேயே கேட்டிருக்க ணும்னு சொல்றாரு. அட, இப்படி விவ ரம் புரியாதவரா இருக்காரே. நான் இரா ஜிநாமா செய்யணும்னு யார் கேட்கமு டியும்? எதிர்க் கட்சிகள் இல்லை ஐயா, கூட்டணிக் கட்சிகளோ, சொந்தக் கட் சியோ கேட்கணும். நீங்க ஒரு கடை யிலே என்னைப்போல வேலை செய்ய றதா வச்சுக்குவம். உங்க கடை முதலா ளிதானே உங்களை இராஜிநாமா செய் யச் சொல்லணும். பக்கத்து கடைக்கா ரர் வற்புறுத்த முடியுமா? இதென் னையா புது நிர்வாகமா இருக்கு?

நான் இடத்தைக் காலி பண்ணினா, உடனே இவங்க வந்து உட்காந்துக்க முடியுமா? என்னோட முதலாளிகள்ள யாராவதுதான் கல்லாவில் உட்கார்ந் துக்குவாங்க. அவங்க நல்ல நேரம் பார்த் துக்கிட்டு இருக்காங்க. அதுக்கு இவங்க ஏன் கவலைப்படணும்? ஹூம், நிர்வாகம்னா என்னன்னே தெரியாத ஜன்மங்கள். வெட்டியா ஏதேதோ கவ லைப்படுதுங்க.

வியைாட்டு ஊழலை விளை யாட்டா எடுத்துக்கிட்டீங்களேன்னு கேட்கிறாரே. அட, பித்துக்குளி, விளை யாட்டை விளையாட்டாத்தான் எடுத் துக்கணும். விளையாடறவங்கதான் அதை சீரியசா எடுத்துக்ணும்; பார்க்கி றவங்க இல்ல. நான் பார்க்கிறவன். விளையாட்டைப் பார்க்க விரும் பாட்டா, வேறபக்கம் திரும்பிடணும். கேள்விகள் கேட்கக்கூடாது. புரியுதா? நான் யாரிட்டையாவது ஏதாவது கேள்வி கேட்கிறேனா? அதுதானையா நிர்வாகம்.

**எனக்கு நாற்காலி மட்டும்தான் இருக்கு; மேஜை இல்லை. அந்த உண்மை உங்களுக்குத் தெரியுமா?**

**கெட்டவர்கள் அவர்கள் பாட்டுக்கு கெட்டவர்களாக இருந்து விட்டுப் போகட்டுமே. நாம் நல்லவர்களாகவே இருப்போம்**

**முந்தியவரை நல்லவராக்குவதே இந்திய ஜனநாயகத் தலைமை. இது வரமோ, சாபமோ; ஆனால், யதார்த்தம்**

இப்படி இவர் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால், எங்கள் பதில் செய லில் இருக்கும். நானும் கூட்டாளிக ளும் அதைச் செய்யமுடியும். வெங்கா யம், தக்காளி விலையை உயர்த்தியது போல, அரிசி விலையை உயர்த்தினால், இட்லி, தோசை விலையை உயர்த்தி னால் அது பற்றித்தானே பேசுவீர்கள்? மற்ற எந்த விஷயம் பற்றியும் கவலைப் பட்டிடாதபடி, எல்லாப் பொருள்க ளின் விலையையும் நாங்கள் ஏற்றிவிடு வோம், ஜாக்கிரதை.

நீர் ஒரு காலத்தில் புதிய பொருளா தாரக் கொள்கைகளின் பிதாவாக இருந் தீரே என்கிறார். நான் என்ன இவர் கிட்ட சர்ட்டிபிக்கேட் கேட்டேனா? இவரோட சார்ட்டிபிக்கேட்டினாலே

எனக்கு என்ன லாபம்? என்னை வேலைக்கு வெச்சவங்களுக்கும் அதனால என்ன லாபம்?

சில மந்திரிங்களை முன்னாலேயே விலக்கியிருந்தா இந்தக் கதி வந்திருக்குமான்னு, ஏதோ என்னைப் பத்திப் பரிதாபப்படற மாதிரி எழுதியிருக்காரு. நான் இவர்கிட்டே பாராட்டு கேட்கா ததுபோல பரிதாபத்தையும் கேட்கலை. நான் சந்தோஷமாத்தான் இருக்கேன். சுதந்திரமாகவும் இருக்கேன். அப்படி இல்லைன்னு நெனச்சுக்க இவர் யாரு? நான் டீதான் சாப்பிடணும், காபி சாப்பிடக்கூடாதுன்னு; சமோசா சாப்பிடக் கூடாதுன்னு யாராவது சொல்றாங்களா? அப்படிச் சொன்னா நான் கேட்டுப்பேனா? பேன்ட் அல்லது பைஜாமா போட்டுக்கொள்வது என் சுதந்திரம். அதை யாருக்கும் நான் விட்டுக்கொடுக்கவில்லை.

குடும்பத்தோட வந்து 'கேம்ப்' போட்ட கூட்டணித் தலைவர் விதிச்ச நிபந்தனைகளை ஏன் ஏத்துக்கிட்டீங்கன்னு கேட்கிறார். வீட்டுக்கு வர்ர விருந்தாளி போர்வை வேணும்னா கொடுக்க மாட்டோமா? அவர் வீட்டுக் குழந்தை நம்மகிட்ட கார் பொம்மை, ரயில் பொம்மை, டெலிபோன் பொம்மை கேட்டா கொடுக்க மாட்டோமா? அதுதானையா வாழ்க்கை. விருந்தோம்பல்னா என்னன்னு தெரியாம இருக்கிற இந்த அசட்டு மனுஷன் கேட்கிற கேள்விக் கெல்லாம் நான் பதில் சொல்லணுமா?

உடனே 'ரெய்டு' பண்ணக்கூடாதா, ஏன் தாமதம்னு கேட்கிறாரு? ஓர் இடத்துக்குத் திருடன் போறதுக்கு முன்னாலேயே போலீஸ்காரன் போகலாமா? என்ன கேள்வி கேட்கிறாரு? நீங்க வேற வேலை பார்த்திருந்தா, இந்தக் கேள்வியெல்லாம் கேட்பமான்னு கேட்கிறார். நீங்க கூடத்தான் வேற ஏதாவது கேள்வி கேட்டா நான் பதில் சொல்லியிருக்க மாட்டேனா? வேற கேள்விகள் கேளுங்க, தாராளமா பதில் சொல்றேன்.

நீங்க திருடலை சார்; மத்தவங்க திருடறாங்களேன்னு சொல்றாரு. என்னைப் பத்தித்தான் நான் கவலைப்பட முடியும். மத்தவங்களைப் பத்திப் பேச நான் என்ன திருடர்களின் தலைவனா? தப்பு, தப்பு, இரண்டாவது வார்த்தை தப்பு. நான் மந்திரிகளில் முக்கியமானவன், பெரியவன். தலை என்று வந்தாலே இப்போதெல்லாம் எங்கள் கட்சியில் ஆண்பாலுக்கு இடமில்லை என்று தெரியாத இவர், என்ன மூத்த பத்திரிகையாளர்?

ஸ்டேட்மென்ட் வாசகங்கள்ளாம் புதுசாத் தயார்பண்ணி வச்சுக்கோங்கனு உபதேசம் செய்யறாரு. எந்தக் காலத்திலே ஐயா நான் சொந்தமா, ஸ்டேட்மென்ட் தயார் பண்ணினேன்? மத்தவங்க பண்ணித் தருவாங்க. அவங்க பத்திரிகைகள்ல வெளியிடறதுக்குன்னு தந்தா தாள்ளே கையெழுத்து போடுவேன். பேசறதுக்குன்னு தந்தா வாசகங்களுக்குக் குரல் கொடுப்பேன். மத்தபடி, அறிக்கை தயாரிக்கிறதெல்லாம் என் வேலை இல்லை. அது, விவரம் தெரிஞ்சவங்க செய்யற வேலை. தயவுசெய்து என்னை அதிலெல்லாம் இழுக்காதீங்க.

மக்கள் கமிட்டி முன்னால ஆஜராகத் தயாரான்னு கேட்கிறார். நான் மாட்டேன்னு சொன்னேனா? என்னிக்கு வேணுமின்னாலும் ஆஜராகத் தயார். கொஞ்சம் முன்னாலேயே சொல்லிட்டிங்கன்னா எங்க ஆட்கள் கேள்விகள் தயாரிச்சு குடுப்பாங்க. பதிலும் தயாரிச்சுக் குடுப்பாங்க. மீட்டிங்ல படிக்கிற மாதிரி, காகிதத்தைப் பார்த்து நான் பதில் சொல்ல நீங்க அநுமதி தரணும். ஒருவேளை என்னைச் சேர்ந்தவங்க சேச்சே, அப்படிச் சொல்றதே தப்பு, என்னை வேலையிலே வச்ருக்கிறவங்க, தயார் பண்ணித் தர்ர பட்டியல்ல இல்லாத கேள்விகளை கேட்டீங்கன்னு வச்சுக்குவம், பதில்சொல்ல நான் மே(லி)டத்தைக் கேட்கணும். அதுக்கு அவகாசம் தரணும். என் செல்போனை உபயோகிக்க அநுமதி தரணும். சரியா? இப்போ, செல்போன் கட்டணம் ரொம்ப ரொம்பக் குறைஞ்சுடுச்சு. ஸ்பெக்ரத்துனாலேதான் அப்படின்னு உங்க பக்கத்திலேயே ரொம்பச் சத்தமாக் குரல் கேட்கிறதனாலே எவ்வளவு நேரம் வேணும்னாலும் நான் செல்போனில் பேச அநுமதி தரணும்.

அப்புறம், இன்னும் சில கேள்விகளும் கேட்டிருக்கிறார். பதவி இருக்கே உமக்கு, நீர் வேலை செய்கிறீரா என்று. எனக்கு நாற்காலி மட்டும்தான் இருக்கு. மேஜை இல்லை. அந்த உண்மை உங்களுக்குத் தெரியுமா? நான் உண்மைகளைச் சொல்ல முடியுமான்னும் கேட்டிருக்கிறார். தத்துவம் பிறந்த தமிழ்நாட்டிலிருந்துகொண்டு இந்தக் கேள்வியை கேட்கலாமா? உண்மை சொல்லுக்கு அடங்காது. அது பிரம்மாண்டம். இருந் தாலும், உங்கள் மொழியிலேயே சொல்றேன், கேட்டுக்கோங்க. 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர். இந்த இரண்டு '...டவர்'களையும் நான் கண்டதில்லை. கேட்டதில்லை. சொன்னதுமில்லை. போதுமா?

நல்லவரா இருக்கிறீரே, கெட்டவர்களை அடையாளம் காட்டக்கூடாதான்னும் கேட்டிருக்கிறார் அந்த ஆசாமி. நல்லவன் நல்லவனாகவே இருக்கவேண்டும். கெட்டவர்களைப் பார்க்கக்கூடாது. அப்படி இருக்க, கெட்டவர்களைப் பற்றி உங்களிடம் பேசலாமோ? கெட்டவர்கள் அவர்கள் பாட்டுக்கு கெட்டவர்களாக இருந்து விட்டுப் போகட்டுமே. நாம் நல்லவர்களாகவே இருப்போம் என்கிற ஞானம் உங்களுக்கு வேண்டாமா? எனக்கு இந்த ஞானம் இருக்கிறது. அதை என் நடவடிக்கைகளிலே நீங்க பார்க்கலாம்.

மனசாட்சி இருக்காதா? இருந்தால் அதனிடம் கேள் என்றும் சொல்கிறார் அந்தப் பத்திரிகையாளர். நான் மனசாட்சியை எப்படிக் கேட்கமுடியும்? அது எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. போனமுறை பதவியில் இருந்தபோது எனக்கு ஆபரேஷன் செய்த டாக்டரைத்தான் கேட்கவேண்டும். பிற்காலத்திலே எனக்கோ மத்தவங்களுக்கோ அது இடைஞ்சலா இருக்கக்கூடாதுன்னு நினைச்சு அவர் எங்கே எடுத்து வைச்சாரோ? ஆபரேஷன் செய்தபோது மயக்கத்தில் இருந்தேனா, அதனால் அந்த டாக்டர் யாருன்னு தெரியலை. தெரிஞ்சா அவர் ஒளிச்சு வச்சிருக்கிற மனசசாட்சியையும் தேடிக் கண்டுபிடிச்சுடலாம். ஆனால், அதையும் நான் தனியே செய்யமுடியாது. தானாகவும் செய்யமுடியாது. மேலிடம்தான் அதையும் செய்ய வேண்டும். அந்தப் பத்திரிகையாளர் கடிதத்தை நேரா எங்கே எழுதணுமோ அங்கே எழுதிடலாமே. முதலாளி யாரோ இருக்க, வேலைக்காரனிடம் ஏன் இத்தனை கேள்விகள்?

தயங்கித் தயங்கி என்மீது எவ்வளவோ குறைகள் சொல்றீங்க. உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். எனக்குப் பிறகு என்னைவிட மோசமானவர் வருவார். அப்போதுதான் என் அருமை உங்களுக்குப் புரியும். முந்திய வரை நல்லவராக்குவதே இந்திய ஜனநாயகத் தலைமை. இது வரமோ, சாபமோ தெரியாது. ஆனால், யதார்த்தம். நான் பாட்டுக்கு டெல்லி வீதிகளில் மாருதி 800 காரை ஓட்டிக்கொண்டு போனபோது எனக்கு அது புரியவில்லை. இப்போது புரிகிறது. உங்களுக்கும் விரைவில் அது நன்றாகப் புரியட்டும். நீங்கள் என்னைத் திட்டினாலும் உங்களை வாழ்த்துகிறேன்: "நீங்கள் எல்லோரும் தனவான்கள் ஆகாவிட்டாலும் ஞானவான்கள் ஆகுக.'' ■



Nalli 80 YEARS SINCE 1928
First and the Finest
Nalli®
பைரவி
* கலெக்ஷன் *
Code No.BH09008
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com
• சென்னை • பெங்களூரு • கோயம்புத்தூர் • தில்லி • ஐதராபாத் • மதுரை • மும்பை • திருச்சி • திருநெல்வேலி • சிங்கப்பூர் • USA

# அரசியல் அச்சுறுத்தலும் இயற்கை அனர்த்தமும்



## தமிழர் விவகாரத்தில் வலுவடையும் உதாசீனம்

தண்டாயுதன்

உதயமாகியுள்ள புத்தாண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 'பிள்ளையார் சுழி'யுடன் அரசாங்கத்துடனான இந்த ஆண்டின் முதல் கட்டப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஆண்டில் ஜூன் மாதம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான முதல் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பித்திருந்தது. அச்சமயம், குழுநிலையில் இரு தரப்பும் பிரதிநிதிகளை நியமித்து, எதிர்கால பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி ஆராயவேண்டிய விடயங்களைப்பற்றிய முடிவுகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே அரச தரப்பில் முன்னாள் பிரதமரும் தற்போதைய அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க, மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் இரா. சம்பந்தன் ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைத்து, அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமிட தீர்மானிக்கப்பட்டது.

எனவே, அரசு தரப்பினதும் தமிழ் தேசிய கூட்டமைப்பினதும் குழுநிலை உறுப்பினர்களே புத்தாண்டின் முதல் வாரத்தில் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இப் பேச்சுக்களின்போது, இனிவரும் காலங்களில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாக இரு தரப்பும் கலந்துரையாடியிருந்தன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், 'அரசுடனான இந்த ஆண்டின் முதலாவது சந்திப்பு என்றவகையில் இப் பேச்சுவார்த்தை முக்கியமானது' என்று தெரிவித்திருந்தார். அத்துடன், வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்றுவது, புனர்வாழ்வளிப்பது சம்பந்தப்பட்ட விடயங்கள் ஒரு புறமும், அரசியல் தீர்வுபற்றிய பேச்சுக்கள் மறுபுறமுமாக ஆராயப்படவேண்டும் என்பதே இரு தரப்பினதும் தீர்மானமாகுமென்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அரசு தரப்பும், வடக்கு - கிழக்கில் பெருமளவு பாராளுமன்ற ஆசனங்களைக்கொண்டுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பும் அரசியல் பேச்சுவார்த்தை

களில் ஈடுபட முன்வந்துள்ள அதேசமயம், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் 'தமிழ் கட்சிகளின் அரங்கம்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்நிலையில், எதிர்கால வடக்கு - கிழக்கு அரசியல் நடவடிக்கைகள் எவ்வளவுதூரம் அப்பிரதேச தமிழ் மக்களுக்கு ஏற்புடையவையாக இருக்கும் என்பதும் கேள்விக்குறியாக இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளின் அரங்கமும் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியிருந்தது. அச்சமயம், வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசிய ஜனாதிபதி ராஜபக்ஷ, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வொன்றைக் கொணர தாம் தயாராக இருப்பதாக கூறியிருந்தார். ஆயினும், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பது, மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அம் மாகாணங்களுக்கு வழங்குவதுபோன்ற பேச்சுக்களுக்கு இடமில்லையென அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள், இலங்கையின் தமிழ் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகவும் தனித்துவமிழந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலைக்கு, தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு சிறந்த தலைமையைக் கொண்டிராத நிலை ஒருபுறமிருக்க, முன்னெப்போதுமில்லாதவாறு வடக்கு - கிழக்கைச் சேர்ந்த சில தமிழ் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் துணைநிற்பதும் முக்கிய காரணமாகிறது. இதன்காரணமாக பேரினவாத போக்கு, வடக்கு - கிழக்கின் அரசியல் நிலைப்பாடுகளைத் தட்டிக்கழிக்கும் போக்கு என்பவற்றில் தென்னிலங்கையின் அரசில் தலைமைத்துவம் முன்னரைவிட உறுதியாகவும் முனைப்பாகவும் இருப்பதையே அவதானிக்கமுடிகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழர்களுக்குத் தமிழர்களே பெரும் எதிரிகளாக இருந்துவந்ததோடு, தமது தலையில் தாமே மண்ணை வாரிக்கொட்டியதே வரலாறாக இருக்கின்றது. கடந்த மூன்று தசாப்தங்களாக ஆயுதமேந்திப் போராட்டத்தில் குதித்தபோதிலும்கூட, ஓர் உறுதியான அரசியல் வெற்றியை பெறமுடியாது போயிருக்கிறது. இதேசமயம், இலங்கைத் தமிழர் பிரச்னையில் கரிசனைகாட்டி, அநுதாபம் கொண்டு தீர்வொன்றைக் காண்பதற்கு முன்வந்த நாடுகளின் உதவி, ஒத்தாசைகளைச் சரிவரப் பயன்படுத்தாதுபோனமையும் கவலைக்குரியதும் மூடத்தனமானதாகவும் அமைகிறது.

இலங்கை சுதந்திரமடைந்து அறுபது ஆண்டுகளைக் கடந்துள்ளது. இந்த அறுபது ஆண்டுகளில் முதல் முப்பது ஆண்டுகளும் அரசியல் ரீதியான தோல்விகளைத் தழுவியிருந்தது. ஆனால், பின்னைய முப்பது ஆண்டுகள் அரசியல் தோல்விகளோடு மட்டும் நின்றுவிடாது, அழிவுகளையும் அவலங்களையும் சந்திப்பதாக அமைந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையடுத்து வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. அம் மாகாணங்களிலே இருந்துவந்த அத்துமீறிய குடியேற்றங்கள் அகற்றப்பட்டன. அத்துடன், எதிர்காலத்தில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அதிகார பரவலாக்கத்தோடு, தமிழ் மக்களது நலன்களை மையமாகக்கொண்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன.

ஆனால், தற்போது எல்லோமே தலைகீழாக மாற்றங்கண்டுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அத்துமீறிய குடியேற்றங்கள் எதிர்காலத்தில் பெருமளவு இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகளும் பலமடைந்தவையாகவே உள்ளன. வடக்கே அரச காணிகள் பற்றி படையினர் துருவி ஆராய்ந்துவருகின்றனர். யாழ்ப்பாண மக்களின் பிரத்தியேகமான தேசவழமைச் சட்டத்துக்கும்கூட களங்கம் ஏற்பட்டுவிடுமோவென எண்ணுமளவுக்கு அரசின் போக்கு கவலையை அளிப்பதாக இருக்கின்றது.

இதேசமயம், வடக்கு பிரதேசத்தில் வன்முறைகள் அதிகரித்திருக்கக் காணப்படுகின்றது. குற்றச் செயல்களின் பின்னணியில் இயங்குபவர்கள் பற்றி மர்மமான தகவல்களே வெளியாகின்றன.

வடபகுதி பாதுகாப்பான பகுதியாக மாற்றங்கண்டுவருகிறதென அரசாங்கம் பறைதட்டிவருகின்றது. ஆனால், கொலை, கொள்ளை என்பவற்றோடு, 'வெள்ளை வான்' கடத்தல் நடவடிக்கைகளும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன. முப்பது வருடகால அசாதாரண நிலையிலிருந்து மீண்டு, ஓர் அமைதிச் சூழலில் வாழமுடியுமென எண்ணிய வடபகுதி மக்களுக்கு வெறும் ஏமாற்றமே கிடைத்திருக்கிறது.

இதேசமயம், கிழக்கில் யுத்தகாலத்தில்கூட இடம்பெற்றிருக்காதவகையில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ள அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்தனர். ஒரே தடவையில் இதுபோன்று பெருந்தொகையான மக்கள் கிழக்கில் இடம்பெயர்ந்திருக்கவில்லை. யுத்த காலத்தில் பகுதிபகுதியாகவே கிழக்குப் பிரதேசங்களில் மக்களின் இடப்பெயர்வு ஆயிரக்கணக்கில் இருந்தது. ஆனால், டிசம்பர் மாத இறுதிப்பகுதிமுதல் பெய்த அடைமழை காரணமாக பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கிழக்கிலங்கை முழுவதிலுமே பெருந்தொகையினராக இடம்பெயர்ந்துள்ளனர்.

எனவே, வடக்கில் பயங்கரவாத அச்சுறுத்தல்களும், கிழக்கில் இயற்கை அனர்த்தமுமாக, தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் பாதிப்புக்குமேல் பாதிப்புகளை சந்தித்தவையாக இருக்கின்றன. இந்த பின்னணியிலேயே மஹிந்த அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு தயாராகிவருகின்றது.

கடந்த இரு வருடங்களில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்கள் என்பவற்றினால் பெரிதும் சலிப்படைந்துபோயுள்ள மக்களுக்கு, உள்ளூராட்சித் தேர்தல் மேலும் சலிப்பை உண்டுபண்ணுவதாக இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்கள்பற்றிக் கருத்து வெளியிட்ட தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க, மக்களின் வாக்களிக்கும் ஆர்வத்தில் தொய்வுநிலை காணப்படுவதாக கூறியிருந்தார். அடுத்தடுத்து தேர்தல்கள் இடம்பெறுவதில் பிரசார கூட்டங்கள், ஆரவாரங்கள் என்று மக்கள் மிகவும் ஆர்வமற்ற போக்கையே தேர்தல்கள் குறித்துக் கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


ஆனால், அரசாங்கத்தின் போக்கு மக்களையோ, நாட்டையோ பொருள்படுத்தியதாக இல்லை. எவ்வளவுதூரம் சகல மட்டங்களிலும் தனது ஆட்சியைப் பலப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அதனை நிறைவேற்றுவதில் மஹிந்த அரசாங்கம் முனைப்பாகவிருக்கின்றது. பலமற்ற எதிர்க்கட்சிகள், பதவிக்கும் பணத்துக்கும் வளைந்து கொடுக்கும் அரசியல்வாதிகள் போன்ற காரணங்களால் மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று தன்னை எந்தவொரு நிலையிலும் சுதாகரித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதில் கவலைக்குரிய விடயமாக தமிழ் அரசியல் கட்சிகளினதும், தமிழ் அரசியல்வாதிகளினதும் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ■

### தேர்தல் நெருங்குகிறது

# நெருக்கடிகளுடன் கருணாநிதி

## நீரா ராடியா ஒலிப்பதிவுகள் ஏற்படுத்தும் தர்மசங்கடம், அழகிரி - ஸ்டாலின் உறவுகளில் விரிசல், ஜெயலலிதா பக்கம் விஜயகாந் தள்ளாத வயதில் தலையிடியாகின்றன

பிங்காட்சன்



பிரதமர் மன்மோகன் சிங் சென்னைக்கு வந்தபோது, முதலமைச்சர் கருணாநிதி அவரை வரவேற்க விமான நிலையம் செல்லாததுமட்டுமல்ல, அதேநேரத்தில் கவிஞர் வைரமுத்துவின் நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டார்

தமிழ்நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. ஆறுமாதங்களுக்கு முன்னர்வரை 'எப்படியும் வெற்றி நமதே' என்று உறுதியாக இருந்தார் முதலமைச்சர் கருணாநிதி. தொடர்ந்து 11 இடைத் தேர்தல் வெற்றிகள் தந்த நம்பிக்கை; இலவச ரிவி, ரூபாய்க்கு ஒரு கிலோ என்று 20 கிலோ அரிசி, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றால் மக்களிடையே ஏற்பட்ட நல்லெண்ணம் ஆகியவை, இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகத்துக்கு (தி. மு. க.) மகத்தான வெற்றியைப் பெற்றுத் தந்துவிடும் என்ற மயக்கத்தில் இருந்தார்.

'2 ஜி ஸ்பெக்ரம்' என்ற பூதம் திடீரென்று கிளம்பி, ஒரே நாளில் அந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட்டது. நவம்பர் மாதம் இந்தியாவின் தலைமைத் தணிக்கை அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் 2ஜி ஸ்பெக்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், அதனால் நாட்டுக்கு ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. 2 ஜி ஸ்பெக்ரம் அதாவது, இரண்டாவது தலைமுறை அலைக் கற்றையை கைத்தொலைபேசி நிறுவனங்கள் பயன்படுத்த உரிமம் வழங்குவதில் ஊழல் நடந்திருப்பது தெரியவந்தது. தொலைத் தொடர்புத்துறை விதிமுறைகளை மீறி, குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு இந்த அலைக் கற்றைய ஒதுக்கீடு செய்தமை; 2001ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட மிகக் குறைந்த விலைக்கே உரிமையை வழங்கியமை போன்றவை தெரியவந்தன. அவ்வாறு உரிமை பெற்றவர்கள், இத் துறையில் அநுபவமோ வேறு தொடர்போ இல்லாதவர்கள். அவர்கள் தாங்கள் பெற்ற உரிமத்தை மறுவாரமே வேறு நிறுவனங்களுக்கு பல மடங்கு இலாபத்துக்கு விற்றுவிட்டனர். நியாயமாக ஏலம்விட்டு, மிக அதிகமாக விலைதருவோருக்கு விட்டிருந்தால் ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா லாபம் கிடைத்திருக்கும். அதற்குப் பதிலாக, யார் முதலில் அணுகுகிறார்களோ அவர்களுக்கு - அதுவும், மற்றவர்களுக்கு போதிய அவகாசம் வழங்காமல் - ஒதுக்கீடு செய்ததில், பெரும் ஊழல் நடந்ததாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனால், இந்தத் துறைக்குப் பொறுப்பான தி. மு. க. அமைச்சர் ஆ. இராசா தன் பதவியை இராஜினாமா செய்ய நேர்ந்தது. அவருடைய வீட்டிலும் அவருடைய தோழர்களின் வீடுகளிலும் மத்திய புலனாய்வுத் துறை அதிரடிச் சோதனைகளை நடாத்தியது. ஆ. இராசா கருணாநிதியின் துணைவி இராசாத்தி அம்மாளுக்கும், அவருடைய மகள் கனிமொழிக்கும் நெருக்கமானவர். கடைசிவரை அவர் இராஜினாமா செய்ய மறுத்துவந்தார். கனிமொழி பொறுப்பேற்று நடாத்தும் 'சென்னை சங்கமம்' என்ற நாட்



Nazhikai Newsmagaine inner pages 03 02 11 lay 3 Thursday



படம்: 'கலைமாமணி' யோகா

டுப்புற கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் கிறிஸ்தவ பாதிரி ஜகத் கஸ்பரின் 'தமிழ் மையம்' அலுவலகமும் சோதனைக்கு உள்ளானது.

இந்த நேரத்தில், கருணாநிதிக்கும் தி. மு. க. வுக்கும் சங்கடம் ஏற்படுத்தும் இன்னொரு நிகழ்வும் நடந்தது. நீரா ராடியா என்ற மேலிடத்துத் தொடர்புப் பெண்மணியின் தொலைபேசி உரையாடல்களின் ஒலிப்பதிவு வெளியானது. ரத்தன் டாடா, அம்பானி ஆகியோர் ஆ. இராசாதான் தொலைதொடர்புத்துறை அமைச்சராகவேண்டும் என்பதில் காட்டிய ஆர்வம் வெளிப்பட்டுவிட்டது. இவர்கள் இருவருமே அலைக் கற்றை ஒதுக்கீடுபெற்று, கைத்தொலைபேசிகளை இயக்குபவர்கள். முன்பு இத் துறைக்குப் பொறுப்பாகவிருந்த தயாநிதி மாறன் மீண்டும் அந்தத் துறைக்கு வந்துவிடக்கூடாதே என்ற அவர்களின் கருத்தும் முயற்சியும் வெளிப்பட்டுவிட்டன.

நீரா ராடியாவிடம் கனிமொழி தனக்கு எப்படியாவது அமைச்சர் பதவியை வாங்கி கொடுக்கும்படி கெஞ்சியது, தயாநிதி மாறனைப்பற்றி அவர் தெரிவித்த எதிர் மறையான கருத்துக்கள், ஆ. இராசா அப் பதவியைப் பெறுவதில் கனிமொழி காட்டிய ஈடுபாடு, அக்கறை ஆகியவை இந்த ஒலிப்பதிவுகள் மூலம் வெளியாகி, பத்திரிகைகளிலும் மற்றைய செய்தி ஊடகங்களிலும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

நீரா ராடியாவிடம் ஆ. இராசா தனக்கு எப்படியாவது தொலை தொடர்புத் துறையை (பணம் காய்க்கும் மரமல்லவா?) பெற்றுத் தரும்படி கெஞ்சுகிறார்.

இன்னோர் ஒலிப்பதிவில், இராசாத்தி அம்மாளே நீரா ராடியாவுடன் பேசுகிறார். கருணாநிதியின் குடும்பச் சண்டையும் ஊழலும் இன்று பட்டி தொட்டிகளில் எல்லாம் பரவிவிட்டது.

தி. மு. க. வின் பெயரைக் காப்பாற்ற இராசாவைக் கட்சியைவிட்டே வெளியேற்றவேண்டும் என்று கருணாநிதியின் மகன் அழகிரியும் ஸ்டாலினும் வலியுறுத்துகிறார்கள்.

அமைச்சர் பூங்கோதையை பதவியிலிருந்து அகற்றவேண்டும்; கனிமொழி பொறுப்பேற்றுள்ள சென்னை சங்கமம் நிகழ்ச்சி இந்த ஆண்டு நடத்தப்படக்கூடாது என்று அழகிரி வலியுறுத்தினார். ஆனால், கருணாநிதி அவற்றுக்கு செவிசாய்க்கவில்லை. சென்னை சங்கமம் நடந்தது. அதுமட்டுமல்ல, அதற்குக்கு கருணாநிதி தன் சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளார். அழகிரி கோபமாக இருக்கிறார்.

இந்த நிகழ்வுகளால் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணியில் விரிசல் எற்பட்டது உண்மையே. சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தி பலமுறை சென்னை வந்திருந்தார். ஒருமுறைகூட கருணாநிதியைச் சந்திக்கவில்லை. காங்கிரசில் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் உள்பட பல தலைவர்கள் கருணாநிதி ஆட்சியைக் கடுமையாகத் தாக்கி விமர்சிக்கிறார்கள். இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் சென்னைக்கு அண்மையில் வந்த போது, முதலமைச்சர் அவரை வரவேற்க விமான நிலையம் செல்லவேண்டும் என்ற மரபை கருணாநிதி மீறினார். வரவேற்கச் செல்லாததுமட்டுமல்ல, அதேநேரத்தில் கவிஞர் வைரமுத்துவின் நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டார்.

காங்கிரசுடனான கூட்டணி உறவு முறிந்துவிடுமோ என்ற பேரச்சம் எழுந்ததும் மறுநாள் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார். நல்லவேளையாக கூட்டணி தொடரும் என்ற அறிவிப்பு காங்கிரஸ் தரப்பிலிருந்து வெளியாகிவிட்டது.

மறுபக்கம், ஜெயலலிதா விஜயகாந்துடன் கூட்டணி வைக்கும் நிலையை எட்டியுள்ளார். கடந்த தேர்தல்களில் சுமார் 10 விழுக்காடு வாக்குகளைப் பெற்ற விஜயகாந் கட்சியின் வாக்குகளையும் சேர்த்தால் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ. இ. அ. தி. மு. க.) ஆட்சியைக் கைப்பற்றிவிட முடியும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தேர்தல் நெருங்குகிறது. தி. மு. க. வில் நிலவும் கோஷ்டிச் சண்டைகள்; அழகிரி - ஸ்டாலின் உறவுகளில் தெரியும் விரிசல்கள்; வாரிசுச் சண்டை; நடிகர்கள் விஜய், அஜித் போன்றவர்கள் அ. இ. அ. தி. மு. க. வை நெருங்கிவருவது; இராஜாத்தி அம்மாள், கனிமொழி, நீரா ராடியா ஒலிப்பதிவுகள் ஏற்படுத்தியுள்ள தர்ம சங்கடம்; இராசாவின்மீது படிந்துள்ள ஊழல் கறை; இவையெல்லாம் தள்ளாத வயதில் கருணாநிதிக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளன. ■



## 2010இல் உலகம்: ஒரு மீள்பார்வை

# அனர்த்தங்கள் அவலங்கள் கலவரங்கள்

மாலி

**ஜனவரி:** உலக பெருமை ஒன்றைத் தன தாக்கி, விண்ணுயரும் 200 மாடிகளுடனான உலகின் அதிஉயர் கட்டடத்தை டுபாய், ஜனவரி 4ஆம் தேதி, மிகுந்த கோலாகலத்துடன் திறந்து வைத்தது. அதுவரை உலகில் உயரமானதாகவிருந்த தாய்வானின் 'தைப்பே 101' கட்டடத்தைவிட 300 மீற்றர்கள் உயரமான இக் கட்டடம், 828 மீற்றர் (2,717 அடி) உயரமானது. கடன் நெருக்கடிகளுக்குள்ளாகும் டுபாயின் 1.5 பில்லியன் டொலர் செலவிலான இவ் விண்கோபுரம், அதன் புகழ்ச் சின்னமாக மிளிருமா அல்லது இது அதன் கடைசிப் பேருவகையா என்ற கேள்வியையும் எழுப்பி புதிய ஆண்டு தொடங்கியது.

கரிபியன் நாடான ஹெயிற்றியில் ஜனவரி 12இல் ஏற்பட்ட பூகம்பம் ஆயிரக்கணக்கானோரைப் பலிகொண்டது. 200 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட, சத்திவாய்ந்த இப் பூகம்பத்தில் அதிபர் மாளிகையிலிருந்து, சேரிக் குடிசைகள் வரை சேதமுற்றன.

கடும் மழையும் புயல் காற்றுமாயிருந்த வேளையில் ஜனவரி 25ஆம் தேதி, பெய்ரூட் விமான நிலையத்திலிருந்து 90 பேருடன் புறப்பட்ட எதியோப்பியன் எயர்லைன்ஸ் விமானம், புறப்பட்ட சிறிது நேரத்தில் கடலில் வீழ்ந்து சிதறியது. அடிஸ் அபாபாவுக்கு புறப்பட்ட இந்த பொயிங் 737-800 விமானம், அது புறப்பட்ட ஐந்து நிமிடங்களில் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்புகளை இழந்தது.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் உறவுக்காரரான 'கெமிக்கல் அலி' என்று அழைக்கப்பட்ட அலி ஹசன் அல்-மஜித்துக்கு ஜனவரி 25ஆம் தேதி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. கலப்ஜா கிராமத்தில் 5 ஆயிரம் குர்திய மக்கள் விஷவாயுவினால் கொல்லப்பட்ட விவகாரத்தில் இவருடைய பங்கு தொடர்பில் இவருக்கு இத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஈராக் - ஈரான் யுத்தத்தில் 180 ஆயிரம் குர்தியர்கள் கொல்லப்பட்டபோது, அதிலும் பொறுப்புடையவர்களில் ஒருவாராக இவர் கருதப்பட்டார்.

**பெப்ரவரி:** ஹெயிற்றி பூகம்பத்தின் சில வாரங்களில் அங்கிருந்து குழந்தைகளைச் சட்டவிரோதமாக கொண்டுசெல்ல முயன்றதான குற்றச்சாட்டில், 10 அமெரிக்க மிஷனரிமார் பெப்ரவரி 4ஆம் தேதி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். பூகம்பத்தில் அநாதைகளானவர்கள் என்று தெரிவித்து 33 சிறுவர்களை பஸ் ஒன்றில் கொண்டுசெல்கையில் ஹெயிற்றி அதிகாரிகளால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இச் சிறுவர்கள் அநாதைகள் என்பதற்கோ அல்லது இவர்களை நாட்டை விட்டு வெளியேகொண்டுசெல்வதற்கோ இவர்களிடம் ஆதாரம் எதுவும் இருக்கவில்லையென்று ஹெயிற்றி அதிகாரிகள் தெரி

வித்தபோது, தங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியும் சிறந்த எதிர்காலமும் கிட்டும் என்ற நம்பிக்கையில் தமது பிள்ளைகளை இவர்களிடம் ஒப்படைத்ததாக சில பெற்றோர் தெரிவித்தனர்.

தலிபான்களின் முக்கிய இராணுவ தளபதி முலா அப்துல் கானி பராடர் கராச்சியில் பெப்ரவரி 15இல் பிடிபட்டார். 2001இல் ஆப்கானிஸ்தான் மீதான நடிவடிக்கை ஆரம்பித்ததிலிருந்து பிடிபட்ட மிக முக்கியமான நபர் இவர். இவர் பிடிபட்ட மூன்று தினங்களில் மேலும் இரு சிரேஷ்ட தலிபான் தலைவர்கள் பாகிஸ்தானில் கைதாயினர்.

பாலஸ்தீன தீவிரவாத ஹமாஸ் இயக்க தளபதி மஹ்மூட் அல்-மாபோ கொலை தொடர்பிலான சந்தேக நபர்கள் அனைவருக்கும் ஜனவரி 17ஆம் தேதி டுபாய் பொலிசார் சர்வதேச பிடி ஆணை பிறப்பித்தனர். டுபாய் உல்லாச ஹோட்டல் ஒன்றில் இவர் கொல்லப்பட்டார். இக்கொலை தொடர்பில் இஸ்ரேல்மீது ஹமாஸ் குற்றம் சுமத்தியபோது, டுபாய் பொலிசார் தம்மால் அதனை நிராகரிக்க முடியவில்லை என்று தெரிவித்தனர். ஈரானிய உதவியுடனான ஆயுதங்களை காஸாவில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு கடத்துவதில் மாபோ முக்கிய பங்கு வகித்ததாக இஸ்ரேல் பாதுகாப்பு பிரிவு தெரிவித்ததை ஹமாஸ் உறுதிப்படுத்தியது.

பெப்ரவரி 24ஆம் தேதி ஸ்பெயினின் தென் பிராந்தியத்தில் ஏற்பட்ட பெருமழையில், அன்டலூசிய மாகாணத்தின் பெரும்பகுதி நீரில் மூழ்கியதுடன், ஆயிரத்து 500 பேருக்குமேல் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.


பெப்ரவரி 27ஆம் தேதி அதிகாலை சிலியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பசிபிக் பிராந்தியத்தில் சுனாமி எச்சரிக்கையையும் இது ஏற்படுத்தியது.

மார்ச்: *1992 - 95 காலப்பகுதியில் பொஸ்னிய யுத்த நடவடிக்கைகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் ரடோவன் கரடிச் மீதான சர்வதேச குற்ற விசாரணைக் குழுவின் விசாரணைகள் மார்ச் முதலாம் தேதி மீண்டும் ஆரம்பமாயின. இனப்படுகொலை தொடர்பான இரு குற்றச்சாட்டுகள் உள்பட, தன்மீதான 11 யுத்த குற்றச்சாட்டுகளையும் மறுத்த கரடிச், நீதிமன்றத்தில் தாமே தமக்காக வாதிட தீர்மானித்தார். "என்னை அல்ல, ஆனால் கடந்த 500 ஆண்டுகளாக துன்புற்ற பொஸ்னிய ஹேர்சகோவினாவின் ஒரு சிறிய இனத்தின் பெருமையை நியாயப்படுத்தவே நான் இங்கு நிற்கிறேன்'' என்று தனது ஆரம்ப உரையில் கரடிச் கூறினார். பொஸ்னியாவில் சேர்பிய மக்களின் நடவடிக்கைகள் நீதியானதும், புனிதமானதும் என்றும் அவர் தெரிவித்தார்.

மார்ச் 7ஆம் தேதி ஈராக் பொதுத் தேர்தல் தினத்தில், பாக்தாத்தில் வெடித்த இரண்டு குண்டுகளில் குறைந்தது 38 பேர் கொல்லப்பட்டனர். தேர்தலில் 62 வீதமான ஈராக்கியர்கள் வாக்களித்ததாக தெரிவிக்கப்பட்டபோது, பாக்தாத்தில் 53 வீதமானவர்கள் மட்டுமே வாக்களித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. அல்கைடா இயக்கத்துக்கு ஆதரவான ஈராக் இஸ்லாமிய தேச இயக்கம் விடுத்த எச்சரிக்கையை மீறி ஈராக்கியர்கள் வாக்களித்தனர். 325 பாராளுமன்ற ஆசனங்களுக்கு 86 குழுக்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 200 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். முன்னாள் பிரதமர் மாலிக் தலைமையிலான கூட்டணி 89 ஆசனங்களையும், தீவிரவாத ஷியா இயக்கம் 70 ஆசனங்களையும், குர்திய கட்சிகள் 43 ஆசனங்களையும் பெற்றதாக இறுதி முடிவுகளில் அறிவிக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளை ஏற்க மறுப்பதாகவும் நீதிமன்றத்தில் ஆட்சேபணை மனு தாக்கல் செய்யப்போவதாகவும் மாலிக் தெரிவித்தார்.


மொஸ்கோவில் 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற முதல் பயங்கரவாத நடவடிக்கையாக, மார்ச் 29ஆம் தேதி இரு பெண் தற்கொலைக் குண்டுதாரிகள் இரண்டு நிலக்கீழ் ரயில் நிலையங்களில் ஏறத்தாழ ஒரே நேரத்தில் வெடிக்கவைத்த குண்டுகளில் குறைந்து 39 பேர் கொல்லப்பட்டனர். பெரும்பான்மை முஸ்லிம்களைக்கொண்ட கோகஸஸ் பிராந்திய பிரிவினைவாத குழு இத் தாக்குதல்களைத் திட்டமிட்டதாக உரிமை கோரியது.

ஏப்ரல்: *பல ஆண்டுகளின் பின்னர் ஏப்ரல் 6ஆம் தேதி இந்தியாவின் மாவோயிச தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தது 73 பொலிசார் கொல்லப்பட்டனர். வெடிகுண்டுகளை வெடிக்கவைத்தும், அடர்ந்த மலைக் காடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடுகளிலும் இவர்கள் கொல்லப்பட்டார்கள். சட்டிஸ்கார் மாநிலத்தில் நிகழ்ந்த இத் தாக்குதல், இந்தியாவின் பல பாகங்களிலும், குறிப்பாக பின்தங்கிய கிராம பகுதிகளில் மாவோயிஸ்டுகளின் பலம் வலுவடைவதை வெளிப்படுத்தியது. நாட்டின் 630 மாநிலங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியில் சுமார் 8 ஆயிரம் வரையிலான தீவிரவாதிகள் இருப்பதாக நம்பப்படுகிறது. வறிய விவசாயிகளினதும் நிலங்களற்ற தொழிலாளர்களதும் உரிமைகளுக்காக தாம் போராடுவதாக தெரிவிக்கும் மாவோயிஸ்டுகள், தங்கள் செல்



ஹெயிற்றி பூகம்பத்தில் அதிபர் மாளிகையிலிருந்து, சேரிக் குடிசைகள் வரை சேதமுற்றன

'ஐந்நூறு ஆண்டுகளாக துன்புற்ற பொஸ்னிய ஹோ்சகோவினாவின் ஒரு சிறிய இனத்தின் பெருமையை நியாயப்படுத்தவே நான் இங்கு நிற்கிறேன்'





ஈராக் பொதுத் தேர்தல் தினத்தில், பாக்தாத்தில் வெடித்த இரண்டு குண்டுகளில் குறைந்தது 38 பேர் கொல்லப்பட்டனர்

போலிஷ் அதிபர் லெச் கக்சின்ஸ்கி பயணம் செய்த விமானம் பனிப் புகாரில் மோதி விபத்துக்குள்ளானதில் அவரும் அவரது மனைவியும் உள்பட, போலிஷ் அரச பிரமுகர்கள், இராணுவ அதிகாரிகளும் பலர் கொல்லப்பட்டனர்



வாக்கை இந்தியாவின் கிழக்கு, தெற்கு, மத்திய பகுதிகளில் விஸ்தரிக்கவும் முயல்கின்றனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததான ஆயுத ஒழிப்பு ஒப்பந்தமொன்றில் ஏப்ரல் 8ஆம் தேதி கைச்சாத்திட்ட அமெரிக்காவும் ரஷ்யாவும், இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பர நல்லுறவை இது ஏற்படுத்துவதோடு, அணுவாயுதங்களில் ஆவல் கொள்ளும் நாடுகள்மீது அத்தகைய முயற்சிகளைத் தவிர்ப்பதற்கான வற்புறுத்தல்களை வலுவடையச் செய்வதற்கும் உதவுமென நம்பிக்கை தெரிவித்தன. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடெவும் பராக்கில் வைபவரீதியாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். முன்னைய பனிப்போர் வைரிகளான இரு நாடுகளும் அணுவாயுதங்களை அடுத்த ஏழு ஆண்டுகளுள் 30 வீதம் ஒழிப்பதற்கு இவ்வொப்பந்தம் வழிசமைக்கிறது.

தாய்லாந்தில் புதிய தேர்தலுக்கு வற்புறுத்தி ஒருமாத காலமாக நடைபெற்றுவந்த ஆர்ப்பாட்டங்களில் சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களுடன் ஏப்ரல் 10ஆம் தேதி ஏற்பட்ட மிகப் பெரும் மோதலில் தாய்லாந்து படையினர் ரப்பர் குண்டுகளையும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசியதில் 8 பேர் பலியானதுடன், நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். சிவப்புச் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் எறிகுண்டுகள், துப்பாக்கிகள், பெற்றோல் குண்டுகள் சகிதம் படையினரைத் திருப்பித் தாக்கியதில் கலவரம் எழுந்தது.

போலிஷ் அதிபர் லெச் கக்சின்ஸ்கி பயணம் செய்த விமானம் கடும் பனிப் புகாரில் மோதி விபத்துக்குள்ளானதில் அவரும் அவரது மனைவியும் உள்பட, போலிஷ் அரச பிரமுகர்கள், இராணுவ அதிகாரிகளும் பலர் கொல்லப்பட்டனர். சோவியத் படைகளால், அருகில் உள்ள காட்டுப் பகுதியில் போலிஷ் அதிகாரிகள் படுகொலைசெய்யப்பட்ட 70ஆவது ஆண்டு நினைவு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக சென்றவேளையில் இச் சம்பவம் மேற்கு ரஷ்யாவின் ஸ்மொலென்ஸ் அணித்தாக நிகழ்ந்தது. 1940 இல், ஸ்ராலினின் இரகசிய பொலிஸ்படை சுமார் 22 ஆயிரம் பேர் அடங்கிய போலிஷ் அதிகாரிகள், கல்விமான்களைச் சுட்டுக் கொலை செய்திருந்தது. கக்சின்ஸ்கியின் சடலத்தைத் தாங்கிய பேழை, ஸ்மொலென்ஸ் விமான நிலையத்தில் இராணுவ மரியாதைகளுடன் வைக்கப்பட்டிருந்த வேளையில் ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின் அதில் கலந்துகொண்டார்.

ஏப்ரல் 15ஆம் தேதி ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலையில் கிளம்பிய பெரும் சாம்பர் புகார், பிரிட்டிஷ் வான் பாதையை தடைசெய்யப்பட்ட வலையமாக்கியதில் பல்லாயிரக்கணக்கான விமான பயணிகள் ஸ்தம்பிதமாயினர். அடுத்தடுத்த தினங் களில் இந்த சாம்பர் புகார் மேலை ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவி, பெரும் போக்குவரத்து நெருக்கடியைத் தோற்றுவித்தது.

மெக்சிக்கோ குடாவில் 36 மணித்தியாலங்கள் தீப்பற்றி எரிந்த பிரிட்டிஷ் பெற்றோலிய ஆழ்கடல் எண்ணெய்க் கிணற்றின் கடல் மேல் நிலையம் ஏப்ரல் 22ஆம் தேதி கடலுள் மூழ்கியது. 116 பேர் பணியாற்றிய இந் நிலையம் 20ஆம் தேதி தீ விபத்துக்குள்ளானது. 115 பேர் அங்கிருந்து தப்பியபோது, 17 பேர் காயங்களுடன் ஹெலிக்கொப்டர்களில் மீட்கப்பட்டு, நியூ ஓர்லீன்ஸ் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். 11 பேர் காணாமல்போயினர். கடலின் அடியில் 5 ஆயிரம் அடி ஆழத்தில் இந் நிலையம் அமிழ்ந்தபோது, கிணற்றிலிருந்து 5 மைல் நீளத்துக்கு எண்ணெய் சிந்தியமை கண்டுபிடிக்கப்பட்டு, அதனை உலரவைத்து, கட்டுப்படுத்தி, துப்புரவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அழிவுக்குப் பொறுப்பான பிரிட்டிஷ் பெற்றோலியம் இதற்கான நஷ்ட ஈட்டைச் செலுத்தவேண்டும் என்று அதிபர் ஒபாமா அறிவித்தார்.

மே: நடைபாதை வியாபாரி ஒருவர் தெரிவித்த ஒரு சந்தேக தகவலில் நியூயோர்க், ரைம்ஸ் சதுக்கத்தில் வாகனம் ஒன்றைச் சோதனையிட்ட பொலிசார், பாரிய குண்டு ஒன்றைச் செயலிழக்கச் செய்தனர். சதுக்கத்தில் அனைவரும் வெளியேற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையில், பாரிய மனித அழிவை எற்படுத்தியிருக்கவல்ல சம்பவம் இது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். விளையாட்டு சாதன வாகனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இக் குண்டு, பல்வேறு நாசகார வெடிபொருள்களைக் கொண்டிருந்ததாக பொலிஸ் வெடிகுண்டு நிபுணர்கள் தெரிவித்தனர். 2001 செப்ரெம்பர் 11இல், நியூயோர்க் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதிலிருந்து நியூயோர்க் நகரம் தொடர்ந்தும் மற்றொரு தாக்குதலுக்கான விழிப்பு நிலையிலேயே இருந்துவருகிறது.

2008 மும்பாய் தாக்குதல் தொடர்பில், பாகிஸ்தான் பிரஜையான முகமட் அஜ்மல் காசப் 86 குற்றச்சாட்டுகளில் மும்பாய் நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்டார். இந்தியாவுக்கு

எதிரான யுத்தம், கொலை ஆகிய குற்றச்சாட்டு களும் இதில் அடங்கும். 166 பேர் கொல்லப் பட்ட இத் தாக்குதலில் காசப் மாத்திரமே உயிர் தப்பிய ஒரேயொரு துப்பாக்கிதாரியாவர். ஏகே-47 ரக துப்பாக்கியுடன், தோழில் ஒரு பையையும் சுமந்து கசாப் மும்பாய் பிரதான ரயில் நிலையத் தில் நடந்து திரிவது பாதுகாப்பு கமெராக்களில் பதிவாகியிருக்கிறது. நெரிசல் மிகுந்த அந்த ரயில் நிலையத்தில் 60 பேர்வரை சுட்டுக்கொல்லப்பட் டனர். 10 பாகிஸ்தானிய துப்பாக்கிதாரிகள் மூன்று தினங்களாக நிகழ்த்திய முற்றுகை தாக்கு தலில் ரயில் நிலையம் தவிர, முப்பாயின் முக்கிய அடையாளச் சின்னங்களான தாஜ் ஹோட்டல், யூத கலாசார மையம் ஆகியவற்றிலுமாக பல வெளிநாட்டவர்களும், ரயில் பயணிகளும் பலர் உயிரிழந்தனர்.

பிக்காசோவின் ஓவியம் ஒன்று சாதனை ஒன்றைப் படைத்து, 106.5 மில்லியன் டொலருக்கு கிறிஸ்ரி ஏலத்தில் மே 5இல் விற்பனையானது. 1932இல் ஒரே தினத்தில் வரையப்பட்ட பிக்காசோவின் காதலியின் ஓவியம் இது.

மே 6ஆம் தேதி பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான கன்சர் வேட்டிவ் கட்சி கூடுதல் வெற்றிபெற்ற கட்சியாகவிருந்தபோதும், தனித்து ஆட்சியமைப்பதற் கான பலத்தைப் பெறத் தவறியது. ஆறு தினங்களின் பின்னர் லிபரல் ஜனநாயக கட்சியுடனான கூட்டு அரசாங்கம் ஒன்றின் பிரதமராக கன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர் டேவிட் கமரோன் பிரதமராக பதவியேற்றார். 1945இக்குப் பின்னர் பிரிட்டனில் ஏற்பட்ட முதலாவது கூட்டு அரசாங்கம் இதுவாகும். லிபரல் ஜனநாயக கட்சித் தலைவர் நிக் கிளெக் துணைப் பிரதமரானார்.

திரிப்பொலி விமான நிலையத்தில் தரையிறங்க முனைகையில் லிபியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம்செய்த 103 பேர் பலியாயினர். மே 12 ஆம் தேதி நடந்த இவ் விபத்தில் 8 வயதான டச்சு சிறுவன் ஒருவன் மாத்திரம் உயிர் தப்பினான். யோகனஸ்பேர்க்கிலிருந்து லிபிய தலைநகருக்கு பயணித்த இந்த எயர்பஸ் ஏ 330-200 விமானத்தில் பயணித்தவர்களில் பெரும்பாலானோர் டச்சு பிரஜைகள்.

மே 31ஆம் தேதி, காஸாவுக்கு பயணமான மனிதாபிமான உதவிக் கப்பல்களை இஸ்ரேலிய கமாண்டோக்கள் இடைமறித்து, கப்பலிலிருந்த குறைந்தது 10 பாலஸ்தீன ஆதரவாளர்களை இரத்த வெள்ளத்தில் கொன்றமை, இஸ்ரேலை இராஜதந்தர நெருக்கடிகளுக்கு உள்ளாக்கியது. மே 30 ஆம் தேதி உதவி பொருள்களையும் சர்வதேச உதவியாளர்களையும் ஏற்றிக்கொண்டு, காஸாவில் இஸ்ரேல் விதித்திருந்த தடையை மீறி, சைபிரஸ் அருகே சர்வதேச கடல் எல்லையில் சென்றுகொண்டிருந்த கப்பல்கள் இடைநிறுத்தப்படும் என்ற எச்சரிக்கையையும் இஸ்ரேல் விடுத்திருந்தது. ஆறு கப்பல்கள் துருக்கி கொடிகளைத் தாங்கிச் சென்றபோது இடம் பெற்ற இச்சம்பவம், இஸ்ரேலின் நீண்டகால முஸ்லிம் நட்புநாடான துருக்கியுடன் இராஜதந்திர கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

மே 28ஆம் தேதி கிழக்கு பாகிஸ்தான் நகரான லாகூரில் சிறுபான்மை முஸ்லிம் பிரிவினரின் வழிபாட்டுத் தலங்கள் இரண்டின்மீது துப்பாக்கிதாரர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 30 பேர் வரை கொல்லப்பட்டனர். வெள்ளிக்கிழமை தொழுகை முடிவுற்ற வேளையில், அஹ்மாடி பள்ளிகள்மீது துப்பாக்கித் தாக்குதல்களும் கைக்குண்டு வீச்சுகளுமாக தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட இந்த சிறுபான்மை முஸ்லிம் மத பிரிவினர் முஸ்லிம்கள் அல்லர் என்று பாகிஸ்தான் பிரகடனம் செய்திருந்தபோது, பாகிஸ்தானிய தலிபான்கள் இத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாமென சந்தேகிக்கப்பட்டது. முஸ்லிம் நாடான பாகிஸ்தான், தங்களது மத உரிமைகளை மட்டுப்படுத்துவதாக 40 லட்சம் அஹ்மாடி மதத்தவர்கள் உணர்கிறார்கள்.

**ஜூன்:** பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஜூன் 3ஆம் தேதி ஏற்பட்ட தீ விபத்தில் 40 பேர் வரை கொல்லப்பட்டு, நூறுக்கும் அதிகமானோர் காயமுற்றனர். இரவு 10 மணிக்கு மின்சார மாற்றி ஒன்றில் ஏற்பட்ட தீ, பின்னர் குடிமனைகளுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் பரவியது.

பதவியேற்ற ஒன்பது மாதங்களில் யப்பானிய பிரதமர் யுகியோ கற்றோயமா ஜூன் முதலாம் தேதி தனது ராஜினாமாவை அறிவித்தார். செயல் திறனற்ற, தயக்கம் நிறைந்தவர் என்று கருதப்பட்ட அவர், பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற எண்ணம் பெரிய அளவில் வெளிப்பட ஆரம்பித்ததையடுத்து அவர் இதனை அறிவித்தார். யப்பானில் கடந்த நான்கு ஆண்டுகளில் பதவி விலகிய நான்காவது பிரதமர் இவர்.

செவ்வாய்க் கிரகத்துக்கு 520 நாள் பரீட்சார்த்த பயணம் ஒன்றை மேற்கொண்டு, ஆறு பேர் ஜூன் 3ஆம் தேதி புறப்பட்டனர். தாமாக



இந்தியாவில் மாவோயிச தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தது 73 பொலிசார் கொல்லப்பட்டனர்

பிக்காசோவின் ஓவியம் சாதனை ஒன்றைப் படைத்து, 106.5 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்பனையானது





வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததான ஆயுத ஒழிப்பு ஒப்பந்தமொன்றில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடெவும் பராக்கில், வைபவரீதியாக கைச்சாத்திட்டனர்

முன்வந்த 3 ரஷ்யர்களும் இத்தாலி, பிரான்ஸ், சீனா ஆகிய நாட்டவர்கள் ஒவ்வொருவருமான இவர்கள் ஒவ்வொருவருக்கும் விண்கலத்தில் 3 சதுர மீற்றர் இடம் அவர்கள் நடமாடி பணிபுரிவதற்காக வழங்கப்பட்டது.

ஈரானில் அதிபர் மஹ்மூட் அஹ்மடினெஜாட் மீண்டும் ஆட்சிக்கு வந்த, சர்ச்சைக்குரிய ஜனாதிபதி தேர்தலின் ஓராண்டு நிறைவு நாளான ஜூன் 12ஆம் தேதி, தெஹ்ரான் வீதிகளில் பாதுகாப்புப் படைகள் மிகப் பெருமளவில் குவிக்கப்பட்டன. எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்கப்பட்டு, எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் பெருமளவு எதிர்க்கட்சி ஆதரவாளர்கள், தோற்கடிக்கப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர் மிரோசென் முசாவிக்கு ஆதரவாக வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

தனித்து, படகில் உலகைச் சுற்றிவரப் புறப்பட்ட 16 வயது கலிபோர்ணிய சிறுமி அபிகைல் சன்டர்லான்ட், இந்து சமுத்திரத்தில் அவரது படகு பெரும் அலைகளில் சிக்கி சேதமுற்றதில், ஜூன் 26ஆம் தேதி தரைக்கு மீண்டார். ஜூன் 11ஆம் தேதி, இந்து சமுத்திர தென் பிராந்தியத்தில் அவருக்கு மேலாக பறந்துசென்ற அவுஸ்திரேலிய விமானமொன்று அவருடன் தொடர்புகொண்ட பின்னர், பிரெஞ்சு மீன்பிடிப் படகு ஒன்றினால் அவர் மீட்கப்பட்டார். அதன் பின்னர், பிரெஞ்சு கடற்படைப் படகு ஒன்றில் அவர் பிரெஞ்சு தீவு ஒன்றில் அவரது சகோதரருடன் இணைந்தார்.

**ஜூலை:** கொங்கோ ஜனநாயக குடியரசின் கிழக்கு பிராந்தியத்தில் ஜூலை 2ஆம் தேதி எண்ணெய் லொறி ஒன்று குடைசாய்ந்து தீப்பற்றியதில் 230 பேர் உயிரிழந்தனர். வீடுகளிலும், உலக கிண்ண உதைபந்தாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கொட்டகை நிறைந்த சினிமா ஒன்றிலும் தீ பற்றியது. லொறியிலிருந்து வெளியேறிய எண்ணெயை திருட முற்பட்டபோதும் சிலர் இறந்ததாக தெரிவிக்கப்பட்டது. 196 பேர் இச் சம்பவத்தில் காயமுற்றனர்.

ஜூலை 9ஆம் தேதி பாகிஸ்தான் - ஆப்கான் எல்லைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒரு தற்கொலைக் குண்டுதாரி தன்னை வைடிக்கவைத்ததில் 56 பேர் கொல்லப்பட்டனர். 80 பேர் காயமுற்றனர். இப் பகுதியில் தலிபான் தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதல்களைப் பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தியிருந்தனர்.

பனிப்போருக்குப் பின்னரான மிகப் பெருமளவு ஒற்றர்கள் பரிமாற்றம் ஜூலை 9 ஆம் தேதி ஒஸ்ரியாவில் இடம்பெற்றது. ரஷ்யாவும் அமெரிக்காவும் 14 முகவர்களைப் பரிமாற்றம் செய்துகொண்டன. உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக நியூயோர்க்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட 10 ரஷ்ய முகவர்களும், ரஷ்யாவில் சிறைவைக்கப்பட்டு, ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடேவினால் மன்னிப்பு வழங்கப்பட்ட நான்கு அமெரிக்கர்களும் வியன்னா விமான நிலைய தளத்தில் பரிமாறப்பட்டனர்.


ஜூலை 11ஆம் தேதி, உல்லாச பயணிகளும், விஞ்ஞானிகளும் உள்ளூர்வாசிகளும் ஆவலுடன் காத்திருக்க, மிக அரிதான பூரண சூரிய கிரகணத்தில் பிரான்சின் பொலினேசியாவில் இருள் கவிந்தது.

சீனாவின் மத்திய, தென் பிராந்தியங்களில் பெய்த அடைமழையில் ஏற்பட்ட மண்சரிவிலும் வெள்ளத்திலும் 700 பேருக்கு மேல் உயிரிழந்தனர். தென் சீனாவில் மழை காலத்தில் வெள்ளம் ஏற்படுவது பொதுவானதேயெனினும், சில பகுதிகளில் சில தசாப்தங்களின் பின்னர் ஏற்பட்ட அழிவு இதுவாகும்.

ஈரானில் கல்வீசி மரண தண்டனை நிறைவேற்றப்படவிருந்த பெண் ஒருவருக்கு ஆதரவு தெரிவித்து, லண்டனிலும் பேர்ளினிலும் ஜூலை 24ஆம் தேதி ஊர்வலங்கள் இடம்பெற்றன. பாலியல் குற்றம் புரிந்ததற்காக சஹீனா முகம்மடி அஷ்ரியானிக்கு இத் தண்டனை விதிக்கப்பட்டது. கல்வீச்சு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்த ஈரானிய நீதித்துறை, இந்த முடிவு ஆர்ப்பாட்டங்களின் நிமித்தமாக எடுக்கப்படவில்லையென்றும் இத் தண்டனை பிறிதொருவேளை நிறைவேற்றப்படலாமென்றும் தெரிவித்தது. கொலை, விபசாரம், கற்பழிப்பு, ஆயுத திருட்டு, போதைவஸ்து கடத்தல் என்பன 1979இல் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியையடுத்து அமுல்படுத்தப்பட்ட இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்கீழ் மரண தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

2010 உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் ஸ்பெயின் வெற்றிபெற்றது. தென் ஆபிரிக்காவில் 32 நாடுகள் பங்குபற்றிய 64 போட்டிகள், நான்கு வாரங்கள் நடைபெற்றன. ஸ்பெயினுக்கும் நெதர்லாந்துக்குமிடையே ஜூலை 11ஆம் தேதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் எவரும் வெற்றிபெறாத நிலையில் ஆட்ட நேரம் நீடிக்கப்பட்டபோது, 129ஆவது நிமிடத்தில்

2010 உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் ஸ்பெயின் வெற்றிபெற்றது



'கோல்' ஒன்றை ஈட்டிய ஸ்பெயின், 1 - 0 கோல் கணக்கில் வெற்றியை ஈட்டியது.

**ஓகஸ்ற்:** 2001 செப்ரெம்பர் 11 தாக்குதலில் நிர்மூலமான உலக வர்த்தக மையத்துக்கு அருகே இஸ்லாமிய கலாசார மையம் ஒன்றையும் மசூதி ஒன்றையும் நிர்மாணிக்கும் திட்டம் தொடர்பான வாதத்தில் ஓகஸ்ற் மாதம் அமெரிக்கா முழுவதும் சூடுகண்டது. அல்கைடா தீவிரவாதிகளின் 9/11 தாக்குதலில் உயிரிழந்த சுமார் 3 ஆயிரம் பேரினது குடும்பங்கள் இந்த இடத்தை நினைவிலிருத்த விரும்பமாட்டா என்று கருதும் குழுக்கள், கலாசார நிலையமும் வழிபாட்டிடமுமாக 13 மாடிகளில் அமையும் இந் நிர்மாண திட்டத்தை பலமாக எதிர்க்கின்றன. ஆனால், மசூதிக்கு ஆதரவானவர்கள், இது முற்றிலும் மத சுதந்திரம் தொடர்பானது என்கிறார்கள். அரசியல்வாதிகள், மதவாதிகள், மக்கள் குழுக்களுக்கிடையே நாடு முழுவதிலும் இது விவாதத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இந் நிர்மாணத்துக்கு ஆதரவு தெரிவித்தபோது, ஜனாதிபதி வேட்பாளர் சாரா பாலின் உள்பட, குடியரசுவாதிகள் பலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். 60 வீதமான அமெரிக்கர்கள் இக் கலாசார மைய நிர்மாணத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் வரலாற்றில், பருவமழை ஏற்படுத்திய பெரு வெள்ளத்தில் சுமார் 2 ஆயிரம்பேர் உயிரிழந்தனர். இரண்டு லட்சம் வீடுகள்வரை சேதமுற்று அழிக்கப்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டது.

ஓகஸ்ற் 9ஆம் தேதி நாகசாகி அணுகுண்டு வெடிப்பின் 65ஆவது நினைவுதினத்தை யப்பான் அனுஷ்டித்தது. பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும், உயிர்தப்பிய முதியவர்களும், பிரமுகர்களும், சுமார் 60 நாடுகளின் பிரதிநிதிகளுமாக நாகசாகியின் அமைதி பூங்காவில் நிறைந்திருந்தவர்கள், குண்டுவெடித்த உள்ளூர் நேரம் முற்பகல் 11:02 மணிக்கு ஒலித்த மணியொலியில் தலை சாய்த்து ஒரு நிமிடம் மௌனம் செலுத்தினர். ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இக் குண்டுவெடிப்பில் உயிரிழந்து, கதிர் வீச்சு நோய்களுக்கும் பின்னர் உள்ளாயினர்.

**செப்ரெம்பர்:** பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ரோனி பிளேயர் டப்ளின் புத்தகசாலை ஒன்றில் தனது வாழ்க்கைச் சரிதை நூல்களுக்கு கையொப்பமிடச் சென்றவேளையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்மீது முட்டைகளையும் செருப்புக்களையும் வீசியதில் மூவர் கைதாயினர். எனினும், இவை எதுவும் பிளேயர்மீது படவில்லை. சுமார் 200 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். வட அயர்லாந்துமீது பிரிட்டனின் கட்டுப்பாட்டையும், ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் பிரிட்டன் இணைந்து கொண்டதையும் எதிர்க்கும் ஐரிஷ் தேசிய குழு இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

செப்ரம்பர் 16ஆம் தேதி பிரிட்டனுக்கு விஜயம்செய்த போப் பெனடிக்ற் அரச மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். மகாராணியும் கணவர் எடின்பரோ கோமகனும் மகாராணியின் ஸ்கொட்லாந்து வாசஸ்தலமான 'ஹொலிறூட்'டில் பாப்பாண்டவரை வரவேற்றனர். கிளாஸ்கோ நகர் அருகே தேவாலயம் ஒன்றில் திறந்தவெளி ஆராதனை ஒன்றையும் அவர் நடாத்தினார்.

ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின் ஓகஸ்ற் 5ஆம் தேதி ரஷ்யாவின் தானிய ஏற்றுமதி அனைத்தையும் இரத்துச்செய்வதாக அறிவித்தார். 130 ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வரட்சியையும் காட்டுத் தீயையும் காரணம்கூறி இதனை அவர் அறிவித்தார். பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் ரஷ்யாவில் உணவுப் பொருள்களின் விலை பெருமளவில் உயர்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். எண்ணூறுக்கும் அதிகமாக ஏற்பட்ட காட்டுத் தீயில் 52 பேர் உயிரிழந்தனர்.

**ஒக்ரோபர்:** ஒக்ரோபர் முதலாம் தேதி நைஜீரியா அதன் 50ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியபோது, இரண்டு இடங்களில் வெடித்த கார்க் குண்டுகளில் எட்டுப்பேர் கொல்லப்பட்டு, பலர் காயமுற்றனர். அதிபர் குட்லக் ஜொனதனும் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள், வெளிநாட்டு பிரமுகர்கள் ஆகியோரும் கலந்துகொண்ட பேரணிக்கு அருகே இக் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. குண்டுகள் வெடிப்பதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக நைஜீரியாவின் மிகப்பெரும் தீவிரவாத குழு நைகர் டெல்ரா, குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதை அறிவித்து, சுதந்திரதின கொண்டாட்டங்களில் மக்களைக் கலந்துகொள்ளவேண்டாம் என்றும் அறிவித்திருந்தது.

பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானிலுள்ள 'நேட்டோ' படையினருக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுசென்ற 20 டிரக்கு



மெக்சிக்கோ குடாவில் 36 மணித்தியாலங்கள் தீப்பற்றி எரிந்த பிரிட்டிஷ் பெற்றோலிய ஆழ்கடல் எண்ணெய்க் கிணற்றின் கடல் மேல் நிலையம் கடலுள் மூழ்கியது

பாகிஸ்தான் வரலாற்றில், பருவமழை ஏற்படுத்திய பெரு வெள்ளத்தில் சுமார் இரண்டாயிரம்பேர் உயிரிழந்தனர்





பிரிட்டனில், லிபரல் ஜனநாயக கட்சியுடனான கூட்டு அரசாங்கம் ஒன்றின் பிரதமராக கன்சர்வேட்டிவ் கட்சி தலைவர் டேவிட் கமரோன் பதவியேற்றார்

களை ஒக்ரோபர் 6ஆம் தேதி பாகிஸ்தானில் துப்பாக்கிதாரிகள் தாக்கி, தீவைத்தனர். ஆப்கானிஸ்தானிலிருந்து வந்து, நேட்டோ ஹெலிக்கொப்டர்கள் தொடர்ந்து நடாத்திய திடீர்த் தாக்குதல்களில் ஆத்திரமுற்ற பாகிஸ்தான் அதிகாரிகள், ஆப்கானிஸ்தானுக்கான நேரடி விநியோக பாதையை மறித்து, உணவு டிரக்குகள் வேறு பாதையூடாக, பெரிதும் வெளிப்படையாகவே செல்வதற்கு நிர்ப்பந்தித்தனர். இச் சம்பவங்கள் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பல தடவைகளில் பதற்றநிலையைத் தோற்றுவித்து, இரு நாடுகளினதும் நீண்டகால நட்பில் கறையையும் ஏற்படுத்துவதாகியது.

வட கொரியாவில் ஒக்ரோபர் 10ஆம் தேதி நடைபெற்ற பாரிய இராணுவ அணிவகுப்பில், அங்கு பதவிக்கு வரவிருக்கும் புதிய தலைவர் அறிமுகப்படுத்தப்பட்டார். நோயுற்றிருக்கும் ஆட்சியாளர் கிம் ஜொங் - இல்லின் இளைய புதல்வரான கிம் ஜொங் - உன், தந்தைக்கு அருகில் மேடையின் நடுவே நின்று, ஆளும் உழைப்பாளர் கட்சியின் 65ஆவது ஆண்டு நிறைவு வைபவ அணிவகுப்பை ஏற்றார். உலகின் மிகப் பெரும் இராணுவமொன்றின் முக்கிய பொறுப்பில் கிம் ஜொங் - உன்னின் இந்த தேசிய 'அரங்கேற்றம்', ஒரு வாரிசு மாற்றத்தை அறிவிப்பதாக அவதானிகள் தெரிவித்தனர். இளம் கிம் அவரது குடும்பத்தின் மூன்றாவது தலைமுறைத் தலைவராவார். ஒரு மாதத்துக்கு முன்னர் இராணுவ ஜெனரல் ஒருவராகவும், முக்கிய அரசியல் பதவியொன்றிலும் இவர் நியமிக்கப்பட்டார். அதுவரை, சுவிற்சர்லாந்தில் கல்வி கற்றவர் என்பதைத் தவிர, அதிகமாக எதுவும் இளம் கிம்மைப்பற்றி அறியப்பட்டிருக்கவில்லை.

வட கொரியாவில் நடைபெற்ற பாரிய இராணுவ அணிவகுப்பில், அங்கு பதவிக்கு வரவிருக்கும் புதிய தலைவர் அறிமுகம் செய்யப்பட்டார்



இரண்டு மாதங்களுக்கு மேலாக சிலி சுரங்கமொன்றில் சிக்குண்டிருந்த 33 தொழிலாளர்கள், ஈற்றில் ஒக்ரோபர் 13ஆம் தேதி, விசேடமாக அமைக்கப்பட்ட மீட்புக் கூண்டு ஒன்றின்மூலம் மீட்கப்பட்டனர். சிலியின் அற்ரகமா பாலைவனப்பகுதியின் தங்க, செப்பு சுரங்கத்தில் 69 தினங்கள் இவர்கள் வெப்பமும் ஈரலிப்புமான நிலையில் அடைபட்டிருந்தனர். 17 தினங்கள்வரை இவர்கள் இறந்துவிட்டதாகவே கருதப்பட்டபோது, இவர்கள் உயிருடன் இருப்பதும் மீட்கப்பட்டதுமான செய்திகள் உலகளாவிய ஆவலை ஏற்படுத்தின.

ஒக்ரோபர் 13இல் லெபனானுக்கு விஜயம் செய்த ஈரானிய அதிபர் மஹ்மூட் அஹ்மடினெஜாட் இஸ்ரேல் விவகாரத்தில் ஈரான் எப்போதும் பெய்ரூட்டின் பக்கம் நிற்கும் என்று தெரிவித்தார். ஈரானிய அதிபர் ஒருவர் லெபனானுக்கு மேற்கொண்ட இந்த முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தில், அஹ்மடினெஜாடை் விமான நிலையத்திலிருந்து வழிநெடுகிலும் ஆயிரக்கணக்கான ஷியா முஸ்லிம்கள் அரிசியும் பூக்களும் தூவி வரவேற்றனர்.

அமெரிக்க உதவி நிறுவனம் ஒன்றுக்கு ஆப்கானிஸ்தானில் பணியாற்றுகையில் தலிபான்களால் கடத்தப்பட்ட பிரிட்டனின் லின்டா நோர்குரோவ், முன்னர் கருதப்பட்டதுபோல் அவரைச் சிறைபிடித்தவர்களின் தற்கொலைக் குண்டிலல்லாமல், அமெரிக்காவின் மீட்பு முயற்சியிலேயே அமெரிக்க எறிகுண்டில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் ஒக்ரோபர் 11இல் தெரிவித்தார்.

ஐரோப்பாவைத் தாக்கும் நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் முயற்சியில், ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பது உள்பட, பிரெஞ்சு அரசாங்கம் அறிமுகப்படுத்தும் கடும் நடவடிக்கைகளையும் பொருளாதார சீர்திருத்தங்களையும் எதிர்த்து, ஒக்ரோபரில் பிரான்ஸ் முழுவதிலும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நாட்டின் பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவுடன், அதிபர் நிக்கொலஸ் சாக்கோஸி இவற்றை வாபஸ்பெற வற்புறுத்துவதில் தொழிற் சங்கங்கள் முயற்சித்தன.

ஒக்ரோபர் 25இல் இந்தோனேசிய தீவுகள் பலவற்றைத் தாக்கிய சுனாமியில் 400க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காணாமல்போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. சில இடங்களில் 80 வீதமான வீடுகள் சேதமுற்று, ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

**நவம்பர்:** அமெரிக்க காங்கிரஸ் தேர்தலில் குடியரசுவாதிகளிடம் தோல்விகண்டதில் பலமிழந்த அதிபர் பராக் ஒபாமா, அவர்களுடன் ஒரு பொது வேலைத்திட்டத்தைக் காணப்போவதாக உறுதி தெரிவித்தார். தனது கசப்பான பொருளாதார நடவடிக்கைகளுக்கு தாம் பொறுப்பேற்பதாகவும் அவர் தெரிவித்தார். 1928க்குப் பின்னர் குடியரசுக்குக் கட்சிக்கு கிடைத்த மிகப்பெருமளவு எண்ணிக்கையான

60 ஆசனங்களை அவர்கள் வென்றனர். 1948இல் ஜனநாயக கட்சி 75 ஆசனங்களைப் பெற்றிருந்தது. வேலையின்மையை 9.6 வீதத்தால் குறைத்து, 2012இல் இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆதரவை அதிபர் ஒபாமா கோரவிருந்தவேளையில், தேர்தல் முடிவுகள் அவரது நிர்வாகத்தில் ஓர் இடைக்கால திருத்தத்துக்கு நிர்ப்பந்தித்தன.

459 பயணிகளுடன் சென்ற அவுஸ்திரேலியாவின் குவான்ரஸ் எயர்வேய்ஸ் விமானம், எஞ்சின் ஒன்றை நிறுத்தி, சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்துக்கு திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. உலகின் மிகப் பெரியதான எயர்பஸ் ஏ - 380 விமானம், சிங்கப்பூரிலிருந்து வெளிப்பட்ட சிறிதுநேரத்தில் இயந்திரக் கோளாறுக்கு உள்ளானது. விமானம் சிங்கப்பூர் திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதற்கு முன்னதாக, விமானத்திலிருந்து உடைந்து வீழ்ந்த உதிரிப் பாகங்களை உள்ளூர்வாசிகள் பார்வையிடுவதை இந்தோனேசிய உள்ளூர்த் தொலைக்காட்சிகள் காண்பித்தன.

மியன்மாரில் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற முதலாவது தேர்தல் வாக்களிப்பு நவம்பர் 7ஆம் தேதி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் நடைபெற்றது. இராணுவ ஆதரவுடனான கட்சிகளின் இலகுவான வெற்றியை உறுதிப்படுத்தி நடைபெற்றாலும், பாராளுமன்ற அரசியல்போன்றதான ஒரு தோற்றத்தை இது ஏற்படுத்தவதாய் அமைந்தது. இத் தேர்தல் மேலைநாடுகளின் பொருளாதார தடையை முடிவுக்கு கொண்டுவரமாட்டாதெனினும், பர்மா என்று அழைக்கப்பட்ட முன்னாள் பிரிட்டிஷ் கொலனியில் இயற்கைவாயு போன்ற வளங்களில் பெருமளவு முதலீடுகளை சீனா மேற்கொண்டுவரும் வேளையில், ஆசியாவில் மியன்மாரின் தனிமைப்படுத்தலைக் குறைப்பதற்கு இது வழிசமைக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

பிரிட்டனில் பல்கலைக்கழக கட்டண அதிகரிப்பை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது, நவம்பர் 10ஆம் தேதி ஆர்ப்பாட்டக்காரர்கள் லண்டனில் கன்சர்வேட்டிவ் கட்சி தலைமையக சாளர கண்ணாடிகளை நொருக்கி சேதப்படுத்தினர். இதில் ஏற்பட்ட கலவரங்களில் 8 பேர் காயங்களுடன் மருத்துவசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். பொலிசாரும் பலர் காயமுற்றனர். சுமார் 50 ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைமையக கூரையில் ஏறி முட்டைகளை வீசினர். வருடத்துக்கு மூன்று மடங்கு அதிகமாக, 9 ஆயிரம் பவுணுக்கு கல்விக் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

லண்டன் புறநகர்ப்பகுதி வீடு ஒன்றைத் துப்புரவாக்குகையில் கண்டுபிடிக்கப்பட்ட சீன பூச்சாடி ஒன்று நவம்பர் 11ஆம் தேதி 43 மில்லியன் பவுண்களுக்கு ஏலத்தில் விற்பனையானது. ஆசிய கலைப்பொருள் ஒன்று ஏலமிடப்பட்ட மிகப்பெரும் தொகை இதுவாகும். 1740 காலப்பகுதி பூச்சாடி இதுவென கருதப்படுகிறது.



இரண்டு மாதங்களுக்கு மேலாக சிலி சுரங்கமொன்றில் சிக்குண்டிருந்த 33 தொழிலாளர்கள், ஈற்றில் விசேடமாக அமைக்கப்பட்ட மீட்புக் கூண்டு ஒன்றின்மூலம் மீட்கப்பட்டனர்

கடந்த 21 ஆண்டுகளில் பெருமளவு காலம் தடுப்புக் காவலிலேயே வைக்கப்பட்டிருந்த மியன்மாரின் ஜனநாயக குரலான ஆங் சன் சூகிய், நவம்பர் 13ஆம் தேதி விடுதலைசெய்யப்பட்டார். பெரும் விமர்சனத்துக்குள்ளான பொதுத்தேர்தல் நடைபெற்ற சில தினங்களில் இவர் விடுதலைசெய்யப்பட்டார். பல்லாயிரக்கணக்கான அவரது ஆதரவாளர்கள் அவரது இல்லத்தைச் சூழ்ந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அவரது விடுதலையை உலகத் தலைவர்கள் பலரும் வரவேற்றபோது, அங்கு அரசியல் கைதிகளாக மதிப்பிடப்படும் 2 ஆயிரத்து 100 பேரும் விரைவில் விடுவிக்கப்படவேண்டும் என்றும் இவர்கள் வற்புறுத்தினர்.

2011இல் தங்களது திருமணத்தைப் பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமும் கேற் மிடில்ரோனும் நவம்பர் 16ஆம் தேதி பகிரங்கமாக அறிவித்தனர். வில்லியத்தின் தாயார் டயானாவின் வைரங்கள் பதித்த நீலக்கல் நிச்சயதார்த்த மோதிரத்தை கெனியாவில் நிகழ்ந்த நிச்சயதார்த்தத்தில் கேற் மிடில்ரோனுக்கு வில்லியம் அணிவித்திருந்தார். 28 வயதினரான இவர்களது திருமணம் 2011, ஏப்ரல் 29ஆம் தேதி வெஸ்ற்மின்ஸ்ரர் அபே தேவாலயத்தில் நடைபெறுகிறது.

நவம்பர் 23ஆம் தேதி, தென் கொரிய தீவான ஜென்பயொங்மீது வட கொரியா மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களில் கட்டடங்கள் பல தீப்பற்றி எரிந்தன. இதன் விளைவாக மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். தென் கொரியா மேற்கொண்ட பதில் தாக்குதலில் ஒரு மணிநேரம் பரஸ்பரம் தாக்குதல்கள் நீடித்தன.

உலகின் மிகப் பெரியதான எயர் பஸ் ஏ - 380 விமானம், சிங்கப்பூரிலிருந்து வெளிப்பட்ட சிறிதுநேரத்தில் இயந்திரக் கோளாறுக்கு உள்ளானது





பிரிட்டனுக்கு
விஜயம்செய்த
பாப்பரசர் அரச
மரியாதைகளுடன்
வரவேற்கப்பட்டார்

இரு நாடுகளுக்குமிடையே பல வருடங்களின் பின்னர் ஏற்பட்ட மோதல் இதுவாகும்.

டசம்பர்: லண்டனில், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் உரையாற்றுவதற்காக வந்திருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக, அவர் தங்கியிருந்த ஹோட்டலின் முன்னர் டிசம்பர் 2ஆம் தேதி பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இலங்கையில், இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நிகழ்ந்ததாகக்கூறப்படும் யுத்த குற்றங்கள் தொடர்பில் அவர்மீது விசாரணை நடத்தக் கோரி இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 'மிகப்பெருமளவு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை எதிர்பார்ப்பதால் உரையை சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் நடாத்த இயலாதென கருதுவதாக' தெரிவித்து, ஒக்ஸ்போர்ட் ஒன்றியம் அன்றைய உரையை இரத்துச்செய்தது. கடும் குளிரும் பனிப் பொழிவும் இங்கிலாந்தை மோசமாக பாதித்திருந்தவேளையில் இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்ந் தது

விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ், சுவீடனில் அவருக்கு எதிராக இரு பெண்கள் தொடுத்திருந்த பாலியல் முறைப்பாடுகளுக்காக சர்வதேச பிடியாணை விடுக்கப்பட்டிருந்ததில் டிசம்பர் 7ஆம் தேதி லண்டனில் கைதுசெய்யப்பட்டார். லண்டன் நீதிமன்றம் முதலில் அவருக்கு பிணை மறுத்தபோது, டிசம்பர் 8ஆம் தேதி அவர் 3 லட்சத்து 10 ஆயிரம் டொலர் பிணையில் விடுவிக்கப்பட்டு, லண்டனைவிட்டு வெளியேறாதிருக்க உத்தரவிடப்பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்காக, அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ், சுவீடனுக்கு நாடு கடத்தப்படாமென எதிர்பார்க்கப்பட்டது. 39 வயதான அசாஞ் இக் குற்றச்சாட்டுக்களை மறுத்தார். அவரது விக்கிலீக்ஸ் இணையத்தளம் இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான அமெரிக்க இராஜாங்க இரகசியங்களில் ஒரு பகுதியை வெளியிட ஆரம்பித்ததிலிருந்து கடுமையான கண்காணிப்புக்கு உள்ளானார்.

லண்டனில், பல்கலைக்கழக கட்டண அதிகரிப்பை எதிர்த்து டிசம்பர் 10ஆம் தேதி மாணவர்கள் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இளவரசர் சார்ள்சும் அவரது மனைவி கமிலாவும் பயணம் செய்த கார் தாக்குதலுக்குள்ளானது. கண்ணாடிகள் நொருங்கி, கார்மீது மைப்பூச்சுக்கள் ஏற்பட்டபோதும் எவரும் காயமுறவில்லை. பல்கலைக்கழக கல்வி கட்டணத்தை ஆண்டுக்கு 9 ஆயிரம் பவுண்களாக உயர்த்தும் அரசின் தீர்மானம் பாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தினத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது. நாடு முழுவதிலுமிருந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட இவ் வார்ப்பாட்டம், பாராளுமன்ற சதுக்கத்துக்கு அப்பாலும் பல இடங்களுக்கு பரவியிருந்தது. பாராளுமன்ற சதுக்கத்தில் கலகமடக்கும் பொலிசாரும் வரவழைக்கப்பட்டிருந்தபோது, 12 பொலிசாரும் 43 ஆர்ப்பாட்டக்காரர்களும் காயமுற்று, 34 பேர் கைது செய்யப்பட்டனர். கன்சர்வேட்டிவ் - லிபரல் ஜனநாயக கட்சி கூட்டு அரசாங்கத்தின் கால் பங்கு பெரும்பான்மையுடன் சட்டமூலம் நிறைவேறியது. அரசாங்கத்தில் பெருமளவு லிபரல் எம். பி. க்களும் இரண்டு கன்சர்வேட்டிவ் எம். பி. க்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

லண்டன்
புறநகர்ப்பகுதி வீடு
ஒன்றைத் துப்
புரவாக்குகையில்
கண்டுபிடிக்கப்பட்ட
சீன பூச் சாடி ஒன்று
43 மில்லியன்
பவுண்களுக்கு
ஏலத்தில்
விற்பனையானது.
ஆசிய கலைப்பொருள்
ஒன்று ஏலமிடப்பட்ட
மிகப்பெரும் தொகை
இதுவாகும்






லண்டனில்,
ஒக்ஸ்போர்ட்
பல்கலைக்கழக
மாணவர்
ஒன்றியத்தில்
உரையாற்றுவதற்காக
வந்திருந்த இலங்கை
ஜனாதிபதி மஹிந்த
ராஜபக்ஷவுக்கு
எதிராக, அவர்
தங்கியிருந்த
ஹோட்டலின்
முன்னர் பெரும்
ஆர்ப்பாட்டம்
இடம்பெற்றது

சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!

Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service

## Debt Problems?

call us for **confidential** and **expert** advice



## Free Consultation

to solve your financial problems

# Mortgage 4US

Independent Financial Advisers

**Karthigesu Sivanesan** MBA BSc Eng FPC
Independent Financial Adviser
**Mobile:** 07775 578 552

**Tim Drakes** MSci CEFA CEMAP
Independent Financial Adviser
**Mobile:** 07515 891 295

**020 7386 0924**
**www.mortgage4usltd.com**
6 Barton Road, London W14 9HD

FSA

Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.

## சென்னையில் ராகுல் காந்தி

## இலங்கை விவகாரம்:

# எரிச்சலை ஏற்படுத்திய பதில்



**'பட்டத்து இளவரசருடன்' ஒரு பிரத்தியேக உரையாடல்**

அரவிந்தன்

டிசம்பர் மாதத்தின் மூன்றாம் வாரத்தில் ராகுல் காந்தி தமிழகம் வரப்போவதை எல்லோரையும் போல நானும் செய்தித்தாள் மூலமாகத்தான் அறிந்துகொண்டேன். ஆனால், தோழி ஜோதியிடமிருந்து வந்த கைபேசி அழைப்பு அதே செய்தியைச் சொன்னபோது ஆச்சரியம் அடைந்தேன். ஜோதி இளைஞர் காங்கிரசில் இருக்கும் விஷயம் சட்டென்று நினைவுக்கு வந்ததும் ஆச்சரியம் விலகியது. ஆனால், என்னிடம் ஏன் சொல்ல வேண்டும் என்ற கேள்வி முளைத்தது. "அறிவுஜீவிகளைச் சந்திக்க ராகுல் விரும்புகிறார்" என்று சொன்னதும், ஆச்சரியம் அதிகரித்தது. அப்படியானால் என்னை ஏன் அழைக்க வேண்டும்? ஜோதி விடுவதாக இல்லை. "சரி. ஓர் எழுத்தாளன், இதழியலாளன் என்ற முறையில் நான் அழைக்கப்பட்டதாக நினைத்துக்கொள்கிறேன்" என்று சொன்னேன். ஜோதிக்கு அதில் எந்தப் பிரச்னையும் இல்லை. இளைய பாரதத்தின் பிரதிநிதியாகச் சித்தரிக்கப்படும் இளவரசரைச் சந்திக்க மானசீகமாக ஆயத்தமாகத் தொடங்கினேன்.

இளைஞனாக அரசியலில் நுழைந்த ராஜீவ் காந்தியின்மீது அளவற்ற அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்த என் தந்தையாரின் நினைவு ஒருகணம் வந்துபோனது. அவர் இப்போது உயிருடன் இருந்திருந்தால் ராகுலைச் சந்திக்க விரும்பியிருப்பார் என்று தோன்றியது. எனக்கு யார் மீதும் நம்பிக்கை இல்லை என்பதால், மனத்தில் எந்த எதிர்பார்ப்பும் திரளவில்லை. இத்தகைய சந்திப்புகள், சம்பந்தப்பட்ட பிரமுகரின் பொதுவாழ்வு பிம்பத்தைக் குறிப்பிட்ட விதத்தில் கட்டமைக்கும் முயற்சிகளுக்கு வலு சேர்ப்பதாகவே அமையும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. அதிகபட்சம் தமிழக அறிவுவாதிகளின், இதழியலாளர்களின் குரல்களை ராகுல் கேட்கலாம். அவர்களது அக்கறைகள் குறித்த அடையாளங்கள் அவருக்குத் தட்டுப்படலாம். அரசியல்வாதிகளின் குறுக்கீடு இல்லாமல் இருந்தால் தமிழக மக்களின் ஆதங்கங்களில் ஒரு சிலவற்றையாவது அவர் காதில் போடலாம். பட்டத்து இளவரசருக்கு இதுபோன்ற அனுபவங்கள் கிடைப்பது அவசியம்தானே.

இதுபோன்ற சாத்தியப்பாடுகள் குறித்த சபலங்கள் ஒருபுறம் இருக்க, நண்பர்களைச் சந்திக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணமும், தாஜ் கன்னிமரா ஹோட்டலில் உணவு சிறப்பாக இருக்கும் என்ற அநுபவமும் ராகுல் சந்திப்பு பற்றிய உற்சாகத்தைக் கூட்டின. தாஜ் ஹோட்டலில் பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகளுக்குப் பிறகு உள்ளே நுழைந்தால், கிட்டத்தட்ட எல்லாமே தெரிந்த முகங்களாக இருந்தது ஆச்சரியம் அளித்தது. சொல்லப்போனால், இலக்கியக் கூட்டம்போலவே இருந்தது. தேவிபாரதி, குவளைக்கண்ணன், கடற்கரை, தளவாய் சுந்தரம், ஞாநி, முரளீதரன், அய்யனார், கவிதா, மாலன், ரோஹிணி, நாசர், சங்கீதா ஸ்ரீராம் ஆகியோரைப் பார்த்ததும் ராகுல் பற்றிய நினைவு மறந்துபோனது. 2ஜி அலைக்கற்றையிலிருந்து புத்தகக் கண்காட்சிவரை பல விஷயங்களைப் பற்றி அரட்டை அடிக்க ஆரம்பித்தோம்.

எல்லா அரசியல்வாதிகளையும்போல ராகுலும் தாமதமாகவே வந்தார். ஒரு மணிநேரம் தாமதம் என்பது சகித்துக்கொள்ள முடியாததாக இருந்தது. தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகக் கிளம்பிவிடலாமா என்றுகூடப் பேசிக்கொண்டோம். 'ரொம்பத்தான் பிகு பண்ணாதீர்கள். அரசியலில் இதெல்லாம் சகஜம் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்று ஒரு நண்பர் இடித்துவிட்டுப் போனார். அபிராமி ராமநாதன், இயக்குநர் லிங்குசாமி, நடிகை ரேவதி என்று சினிமா

உலகைச் சேர்ந்த பலரும் வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட நூறு பேருக்குமேல் இருக்கலாம். சமூக செயல்பாட்டாளர்கள், மனித உரிமைப் போராளிகள், அரசு சாராத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்று எலோரும் வந்திருந்தார்கள். அது ஒரு கலந்துரையாடலாக இருக்கும் என்று ஜோதி சொன்னது நினைவுக்கு வந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடல் எப்படிச் சாத்தியம்? அரசியல் தவிர்த்த பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களைச் சந்திக்க ராகுல் விரும்பியிருந்தால் அவர்களைத் தனித்தனிப் பிரிவாகச் சந்தித்திருக்கலாம். எதற்கு இப்படி ஒரு கூட்டாஞ்சோறு? இந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி இந்தியாவைப் பற்றித் தனக்கிருக்கும் கனவை எங்களிடம் பகிர்ந்துகொள்ளப்போகிறாரோ?

கூட்டம் தொடங்கியது. அரசியலைப் பற்றிக் கேட்கவேண்டாம் என்றார் ராகுல். பாலம் என்னும் (வளர்ச்சி அரசியலுக்கான) இதழின் ஆசிரியர் நாராயணன் முதலில் பேசினார். குடிப் பழக்கத்தால் வரும் சமூகக் கேடுகள், பாதாள சாக்கடைகளைச் சுத்தம் செய்வதில் இன்னமும் மனிதர்களை ஈடுபடுத்திவரும் அவலம் என்று பல முக்கியமான விஷயங்களில் அவர் அவையின் கவனத்தை ஈர்த்தார். தன்னை ஓரின சேர்க்கையாளர்களின் பிரதிநிதி என்று அறிமுகப்படுத்திக்கொண்ட அநிருத்தன் வாசுதேவன், ஓரின சேர்க்கையாளர்கள், ஈரின சேர்க்கையாளர்கள், அரவாணிகள் ஆகியோரின் பிரச்னைகளைக் கவனப்படுத்தினார். கல்வித் துறைப் பிரச்னைகளைப்பற்றி வேறொருவர் பேசினார். ராகுல் அனைத்தையும் கவனமாகக் கேட்டார். எல்லாவற்றிலும் தன் சொந்தக் கருத்தைச் சொன்னார். தீவிரமான கவலைகளை வெளிப்படுத்திய கல்வியாளரைப் பார்த்து, நீங்கள் அரசியலுக்கு வாருங்கள், மாற்றம் காண உங்கள் பங்கைச் செலுத்துங்கள் என்றார். இளைஞர் காங்கிரஸ் ஜனநாயகபூர்வமாக நடக்கும் விதம் பற்றியும் விரிவாகச் சொன்னார். அரசாங்கத்தின் மூலமாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறேன் என்றார். சினிமா உலகின் பிரதிநிதிகள் சிலர் திருட்டு 'விசிடி' போன்ற பிரச்னைகள் பற்றி விரிவாகப் பேச ஆரம்பித்தார்கள். நீங்கள் டில்லிக்கு வந்து என்னைப் பாருங்கள் என்று சொல்லி, அந்தப் பேச்சை முடித்துவைத்தார்.


அதன் பிறகுதான் நிகழ்ச்சியின் முக்கியமான கேள்வி எழுந்தது. இலங்கைக்குச் சென்று அங்குள்ள நிலவரத்தை நேரடியாகக் கவனித்து செய்திக் கட்டுரைகள் எழுதிவரும் கவிதா முரளீதரன் ('த வீக்' வார இதழ்) இலங்கைப் பிரச்னை பற்றிக் கேள்வி எழுப்பினார். குறிப்பாக அங்கு தற்போதுள்ள நிவாரண முகாம்களின் அவல நிலையையும் நிவாரணப் பணிகளின் கடுமையான போதாமைகளையும் அவர் சுட்டிக்காட்டினார். இதுவரை அலட்டிக்கொள்ளாமல் இருந்த ராகுலிடத்தில் சட்டென்று ஒரு பதற்றம் தொற்றிக்கொண்டதை உணர முடிந்தது. இந்திய அரசு தன்னால் முடிந்ததைச் செய்துவருவதாகச் சொன்ன அவர், இந்திய அரசின் முயற்சியால் நடைபெறும் பணிகள் பற்றிய பட்டியலைப் படித்தார். இலங்கைப் பிரச்னை பற்றிய கேள்விகளை வேறு எதையும்விட அதிகமாகவும் உறுதியாகவும் ராகுல் எதிர்பார்த்தார் என்பது, அவர் பட்டியலைத் தயாராக எடுத்துவந்திருந்ததிலிருந்து தெரிந்தது. இன்னொரு நாட்டின் விவகாரத்தில் தலையிடுவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் ராகுல் பேசினார். மூத்த பத்திரிகையாளர் ரி. என். கோபாலன், இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியா என்ன செய்தது என்று கேள்வி எழுப்பினார். வேறுசிலரும் குறுக்கிட்டுப் பேசினார்கள். இந்திய அரசின் சார்பில் பிரணாப் முகர்ஜி அங்கு சென்று வந்ததையும் அரசின் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கைகளையும் வரிசையாகக் குறிப்பிட ஆரம்பித்தார் ராகுல். இதுபோன்ற விவாதங்களில் குரல் எழுப்புவதில் எனக்கு அதிக நம்பிக்கையோ ஈடுபாடோ கிடையாது என்றாலும், நாங்கள் அப்படிச் சொன்னோம், இப்படிப் பேசினோம் என்ற ரீதியில் ராகுல் பதில் தந்தது எரிச்சலை ஏற்படுத்தியது. என்ன சொன்னீர்கள் என்பது முக்கியமல்ல, என்ன செய்தீர்கள் என்பது முக்கியம் என்று சொன்னேன். என்ன செய்திருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள் என்று ராகுல் எதிர்க் கேள்வி எழுப்பினார். பொருளாதாரத் தடை விதித்திருக்கலாமே என்றார் பத்திரிகையாளர் மாலன்.

அதற்குள் பலரும் குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தார்கள். காலச்சுவடு பொறுப்பாசிரியர் தேவி பாரதி, காமன் வெல்த் போட்டிகளின் தொடக்க விழாவுக்கு ராஜபக்ஷவை ஏன் அழைத்தீர்கள் என்று கேட்டார். நான் அழைக்கவில்லை என்று ராகுல் கும்பிடு போட்டார். ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி, அவரை எப்படி உங்கள் அரசு அழைக்கலாம் என்று கேள்வி எழுப்பிய தேவி பாரதி, இலங்கை அரசின் அட்டூழியங்கள் பற்றியும் இந்திய அரசின் செயலின்மை குறித்தும் தன் கருத்துக்களைச் சற்று விரிவாகவே முன்வைத்தார். அவர் தமிழில் பேசியதால் அவர் பேச்சை ஆங்கிலத்தில் சொல்ல ஓரிரு நண்பர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால், தொடர்ந்து பலரும் பேச ஆரம்பித்ததில் குழப்பம் நிலவ, எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கூட்டத்தை முடித்துக்கொண்டார் ராகுல். ஆக, சுமுகமாகத் தொடங்கிய கூட்டம் இலங்கைப் பிரச்னை குறித்த சலசலப்புடன் முடிந்தது என்று சொல்லலாம்.

கூட்டம் முடிந்தபின் பலரும் ராகுலுடன் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். சிலர் கையோடு எடுத்துவந்திருந்த கோரிக்கைப் பட்டியலைக் கொடுத்தார்கள். எல்லோரும் இருந்து, தேநீர் அருந்திவிட்டுத்தான் போகவேண்டும் என்று அன்பாக ஓர் அறிவிப்பு ஒலித்தது. மணி ஒன்று. மதியம் ஒரு மணிக்குத் தேநீர் வழங்கும் விருந்தோம்பலை எண்ணி வியந்தபடி மீண்டும் அரட்டைக் கச்சேரிகளைத் தொடங்கினோம். வெளியில் காத்திருந்த செய்தித் தொலைக்காட்சிகளின் நிருபர்கள், சினிமா பிரமுகர்களைச் சூழ்ந்துகொண்டு, உள்ளே நடந்தது என்ன என்று ஆவலோடு விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நாசர், ரோஹிணி, லிங்குசாமி, ரேவதி ஆகியோர் இருந்த இடங்களில் ஒளிப்படக் கருவிகள் பளிச்சிட்டபடி இருந்தன.

ராகுலுடனான விவாதம் குறித்து எந்த எதிர்பார்ப்பும் இல்லாததால் ஏமாற்றம் எதுவுமில்லாமல் தாஜ் ஹோட்டலிலிருந்து கிளம்பினேன். இதுபோன்ற கலந்துரையாடல்கள் பற்றிய அவநம்பிக்கையை அதிகரிக்கச் செய்ததுதான் இந்தக் கூட்டத்தின் முக்கியமான விளைவு என்று தோன்றியது. ஆனாலும், இலங்கைத் தமிழர் பிரச்னையில் ராகுல் பதற்றமடைந்தது முக்கியமான விஷயமாகப்பட்டது. ராகுலின் அவஸ்தை இந்தப் பிரச்னையில் காங்கிரசின் செயலின்மை குறித்த ஒப்புதல் வாக்குமூலமாகவே தெரிந்தது. ■

அதிகார மையங்களின் இருண்ட பிரதேசங்களில் அரங்கேறும் வல்லமைமிக்க உரையாடல்களை, நகர்வுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்ததுதான் விக்கிலீக்ஸுக்கு கிடைத்த முக்கியத்துவதுக்குக் காரணம்




செய்தி ஊடகங்கள் தமது கடமையிலிருந்து வழுவும்போது ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப விக்கிலீக்ஸ் போன்ற ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. விக்கிலீக் ஸின் வெற்றியை அதன் குறைகளை மீறி - இந்தச் சூழலிலேயே பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது

உலக விவகாரம்

# விக்கிலீக்ஸ்

# பாரம்பரிய செய்தித் துறையின் தோல்வி?

**'பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்பது, உண்மைகளை மூடிமறைக்கப் பயன்படும் உத்தி**


யாழினி

கடந்த ஆண்டில் செய்தி ஊடகங்களிலும் பொது மக்களிடத்திலும் பெருமளவு விவாதத்துக்குள்ளான சொற்கள் 'விக்கிலீக்ஸ்', 'ஜூலியன் அசாஞ்' என்பவையாகவே இருந்திருக்கும். வெறும் சந்தையாக மாறிக்கொண்டிருந்த சர்வதேச செய்திஊடக வெளியில் தனது ஆவணங்கள் மூலம் புலிப் பாய்ச்சல் நிகழ்த்தி, சர்வதேச சமூகத்தை நிமிர்ந்து உட்கார வைத்திருக்கிறது விக்கிலீக்ஸ்.

விக்கிலீக்ஸை உருவாக்கிய ஜூலியன் அசாஞ், 'ரைம்' சஞ்சிகையின் 2010ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக வாசகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேவேளை, பாலியல் குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். புகழ் வெளிச்சத்தின் இரண்டு எதிரெதிர் நிலைகளையும் ஒருசில வார இடைவெளியில் அனுபவத்திருக்கிறார் ஜூலியன் அசாஞ். இதற்குக் காரணம், விக்கிலீக்ஸ்.

2006இல் தொடங்கப்பட்ட போது, விக்கிலீக்ஸ் எந்த பெரிய எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், தொடங்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள்ளாகவே கிட்டத்தட்ட 1.2 மில்லியன் ஆவணங்கள் விக்கிலீக்ஸிடம் குவிந்திருந்தன. இந்த ஆவணங்களில் எதையும் தாம் தேடிச்சென்று வாங்கவில்லை என்கிறது விக்கிலீக்ஸ். "பெயர் குறிப்பிடப்படாத நபர்கள் ஆவணங்களை அனுப்புவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நாங்கள் அவற்றைத் தேடிப் போவதில்லை" என்கிறது.

அதிகார மையங்களின் இருண்ட பிரதேசங்களில் அரங்கேறிக்கொண்டிருக்கும் வல்லமைமிக்க உரையாடல்களை, நகர்வுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்ததுதான் விக்கிலீக்ஸுக்கு கிடைத்த முக்கியத்துவதுக்குக் காரணம். மிகவும் சக்திவாய்ந்ததாகக் கருதப்படும் மேலைநாட்டு ஊடகங்கள் செய்யவேண்டிய விஷயங்களை விக்கி



ஜூலியன் அசாஞ்

லீக்ஸ் செய்தது. இதுவே இதன் புகழுக்கும் சர்ச்சைக்கும் காரணம்.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் நடந்த போரில் அமெரிக்காவின் செயல்பாடுகள், போர்க் கைதிகளைத் துன்புறுத்தப் பயன்படுத்தப்பட்ட 'குவான்ரனாமா குடா' சிறைச்சாலை பற்றிய ரகசியங்கள், கெனியாவில் நடந்த அரசு ஆதரவுப் படுகொலைகள் போன்ற, பல அழுக்கு ரகசியங்களை உலகத்தின் பார்வைக்கு கொண்டுவந்தது விக்கிலீக்ஸ். அது வெளியிட்ட ஆவணங்கள் சர்வதேச சமூகத்தில் பல அதிர்ச்சிகளை அடுத்தடுத்துக் கிளப்பின.

இதுவரை எந்தப் பாரம்பரிய பத்திரிகையும் செய்யமுடியாத ஒரு செய்தித்துறைப் புரட்சியை இணையம் வாயிலாக நான்கே ஆண்டுகளில் விக்கிலீக்ஸ் செய்திருக்கிறது. அதிர்ச்சிகரமான பல விஷயங்களை வெளியிட்டதன்மூலம் பல அரசாங்கங்களின் வெறுப்பையும் சம்பாதித்திருக்கிறது. தன்மீதான பாலியல் புகார்கூட அரசியல் சதி என்றேதான் சொல்கிறார் ஜூலியன்.

விக்கிலீக்ஸின் இந்த மாபெரும் வெற்றிக்கு பொதுவாக செய்திஊடக உலகில் உள்ள வெற்றிடம் காரணம் என்று சொல்லலாம். மேற்குலக ஊடகங்கள் பொதுவாக நடுநிலையானவையாகக் கருதப்பட்டாலும், அவை அரசாங்கங்களைப் பெரிதாக விமர்சிப்பதில்லை. விக்கிலீக்ஸ் வெளியிட்ட பல ஆவணங்கள் அரசாங்கங்களைக் கேள்விகளுக்கு உள்படுத்துபவை. அதிகாரத்தின் கோர முகத்தை அம்பலப்படுத்தும் தகவல்கள் அடங்கியவை.

கெனியா படுகொலைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்ததற்காக 2009ஆம் ஆண்டின் சர்வதேச மன்னிப்புச்சபை விருது விக்கிலீக்ஸுக்கு கிடைத்தது. பிரேசில், வெனிசூலா, ரஷ்யா போன்ற நாடுகளும் ஐ. நா. சபையும் விக்கிலீக்ஸுக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவித்திருக்கின்றன. சர்வதேச அளவில் ஜூலியன், கருத்து சுதந்திரத்துக்கான ஒரு குறியீடாகப் பார்க்கப்படுகிறார்.

விக்கிலீக்ஸ் எந்த அளவுக்குப் பாராட்டப்படுகிறதோ அதே அளவு விமர்சனங்களையும் சந்தித்துக்கொண்டிருக்கிறது. "சட்டத்தையும் மதிப்பதில்லை; தனிநபர்களின் உரிமைகளையும் மதிப்பதில்லை" என்பது விக்கிலீக்ஸ்மீது வைக்கப்படும் பொதுவான குற்றசாட்டு. ஆவணங்களை எந்த சரிபார்த்தலும் இல்லாமல் வெளியிடுவதாகவும் விக்கிலீக்ஸ்மீது குற்றச்சாட்டு உண்டு. தவிர, விக்கிலீக்ஸால் பாதிக்கப்பட்ட பல நாடுகளின் தலைவர்கள் அதைக் கடுமையாக கண்டித்திருக்கிறார்கள். அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட், விக்கிலீக்ஸ் தரும் தகவல்கள், "பொறுப்பற்றனவாகவும் சட்டவிரோதமானவையாகவும் உள்ளன" என்று குற்றம் சாட்டினார். பிரான்ஸ், ஈரான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளும் விக்கிலீக்ஸைக் கண்டித்திருக்கின்றன. விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்கா குறித்த ஆவணங்கள் பற்றி கருத்து தெரிவித்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்டன், "அவை அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கைகள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தின் மீதான தாக்குதல்" என்று சொல்லியிருக்கிறார். அமெரிக்காவின் பாதுகாப்புக்கு விடப்பட்ட சவாலாகவும் விக்கிலீக்ஸ் பற்றிக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள் அமெரிக்க தலைவர்கள். விக்கிலீக்ஸை ஒரு சர்வதேச தீவிரவாத அமைப்பாகவும் அறிவிக்கவேண்டும் என்று ஒரு சாரார் குரல் கொடுத்து வருகிறார்கள்.

இவை அனைத்துமே எதிர்பார்க்கக்கூடிய எதிர்வினைகள்தாம். மனித உரிமை மீறல்களையும் அத்துமீறல்களையும் தங்கள் செயல்பாடுகளின் அங்கமாகக் கொண்டிருந்தவர்களுக்கு, அவை அம்பலப்படுவது தொந்தரவைத் தருவதில் ஆச்சரியம் இல்லை. 'பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்ற பூச்சாண்டி, உண்மைகளை மூடிமறைக்கப் பயன்படும் உத்தி என்ற விளிப்புணர்வு இன்று பரவலாக ஏற்பட்டுவிட்ட நிலையில், யாரும் இதைக் கேட்டு விசனமுற தயாராக இல்லை. செய்தி ஊடகங்கள் தமது கடமையிலிருந்து வழுவும்போது ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப விக்கிலீக்ஸ் போன்ற ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. விக்கிலீக்ஸின் வெற்றியை - அதன் குறைகளை மீறி - இந்தச் சூழலிலேயே பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது. சர்வதேச செய்தி ஊடகம் வலுவான நடுநிலைப் பார்வையோடு இயங்கிவந்திருக்கிறது என்றால், விக்கிலீக்ஸ் பெரும்பாலான மக்களால் ஒரு தேசவிரோத, மக்கள் விரோதச் செயல்பாடாகவும், பரபரப்புக்காக இயங்கும் அமைப்பாகவும் பார்க்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கும்.

விக்கிலீக்ஸின் வெற்றி, செய்தி ஊடகத்தில் ஒரு நேர்மையான, சுதந்திரமான குரலின் தேவையையே உரக்கச் சொல்கிறது. விக்கிலீக்ஸின் வெற்றி, பாரம்பரிய செய்தி ஊடகத்தின் பெரும் தோல்வி. ■



அவுஸ்திரேலியா

உலக விவகாரம் | சூழல்

## வெள்ளப்பெருக்கு:

# ‘புவி வெப்பம்’ காரணம் அல்ல

### வெள்ளத்துக்கு காரணமான கடும் மழை, அவுஸ்திரேலிய கடற் பிராந்தியத்தில் உயர்வடைந்த வெப்பத்தினால் ஏற்பட்டிருந்தாலும் ‘புவி வெப்பமாதல்’ அதற்குக் காரணம் அல்ல விஞ்ஞானிகள் கருதுகின்றனர்

சாரங்கன்

கிழக்கே அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்து, இடையில் இலங்கையிலும் மேற்கே பிரேசிலிலும் ஏற்பட்ட பெரு வெள்ளம், பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளது. ஏறத்தாழ, சம காலத்தில் இவ் வெள்ளம் ஏற்பட்டது.

‘நாட்டில் பலத்த செலவினத்தை ஏற்படுத்திய இயற்கை அழிவு இது’ என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட பெருவெள்ளம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நத்தார் பண்டிகையையடுத்து பிறிஸ்பேனுக்கு வடக்கே தொடங்கிய அடைமழையுடன் இது ஆரம்பித்தது. குயின்ஸ்லாந்து மாகாணத்தில் 70 நகரங்கள் பாதிப்புற்றன. பின்னர், இது விக்ரோறியா மாகாணத்தையும் அச்சுறுத்தியது. 30 பேர்வரை உயிரிழந்து, பலர் காணாமல்போயிருந்தார்கள்.

இலங்கையில், டிசம்பர் 26ஆம் தேதி ஆரம்பித்த அடைமழை, மத்திய, கிழக்கு மாகாணங்களில் மட்சரிவையும் பெரு வெள்ளத்தையும் ஏற்படுத்தியது. மட்டக்களப்பு மாவட்டம் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. ஒரு லட்சம்



இலங்கை



பிரேசில்

பேர்வரை பாதிப்புற்ற இவ் வெள்ளத்தில், 40 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. 25 ஆயிரம் வீடுகள்வரை முற்றாக சேதமுற்று, 4 லட்சம் ஏக்கர் பயிர் நாசமுற்றுள்ளது. அண்மைக் காலத்தில் பதிவாகிய பெரும் மழைவீழ்ச்சியென்றும் அறிவிக்கப்படுகிறது.

பிரேசிலில் நான்கு தசாப்தங்களின் பின்னரான கடும் மழையில் ஏற்பட்ட மண் சரிவில் 400 பேர்வரை றியோவை அணித்த மலைப்பகுதிகளில் உயிரிழந்துள்ளனர். புதுவருடத்தில் ஆரம்பித்த கடும் மழை, இரண்டு வாரங்கள்வரை தொடர்ந்தது.

இவ் வெள்ளங்களுக்குக் காரணமான கடும் மழை, அவுஸ்திரேலிய கடற் பிராந்தியத்தில் இந்தப் பருவ காலத்தில் உயர்வடைந்த வெப்பத்தினால் ஏற்பட்டதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், இந்த வெப்பநிலை அதிகரிப்பு மனிதன் உருவாக்கும் 'புவி வெப்பத்தால்' ஏற்பட்டதா?

பசுமைவாதிகள் வெப்பமாதல்தான் காரணம் என்னும்போது, விஞ்ஞானிகள் சிலர் இதனை மறுக்கின்றனர். இந்த வெள்ளத்துக்கு 'புவி வெப்பமாதல்' காரணம் அல்ல என்கின்றனர்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை இயற்கையில் கடலில் ஏற்படும் சூடாதலும் குளிராதலுமான வட்டத்தில், பூமத்திய ரேகையில் கிழக்கு பசிபிக் கடலில் ஆரம்பித்து, உலகைச் சுற்றிவரும் உஷ்ண நீரோட்டம், வழமைக்கு மாறாக அதிகரித்த வெப்பத்தைக் கொண்டிருந்ததன் விளைவுதான் பிரிஸ்பேன் வெள்ளம் என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், அதேவேளை இதேமாதிரியான பாரிய வெள்ள பாதிப்பு அவுஸ்திரேலிய கிழக்குக் கரையை முன்னரும் பாதித்திருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டில் இரு தடவைகளிலும், பின்னர், மிக அண்மைக் காலத்தில் 1974இலும் இத்தகைய வெள்ளம் அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முன்னர் ஏற்பட்ட இந்த வெள்ளங்கள் மனிதன் ஏற்படுத்திய புவி வெப்பத்தால் ஏற்பட்டிருக்கவில்லை. அத்துடன், இத்தகைய தனித்த மோசமான காலநிலை நிகழ்வுகளை புவி வெப்பமாதலுடன் காரணம்காட்டுதல் சாத்தியமானதல்ல என்று காலநிலை மாற்றத்தை அவதானிக்க நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞானிகள் குழுவும் ஒப்புக்கொள்கிறது. இந்த தசாப்தத்தில் இத்தகைய நிகழ்வுகள் மிக அரிதானவையாகவே இருந்ததில், புவி வெப்பமாதலை இதில் உண்மையில் காரணங்கூற முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். அத்துடன், 21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தின் புவி வெப்பமாதல் வீதம் 20ஆம் நூற்றாண்டில் அவதானிக்கப்பட்ட வெப்பமாதல் வீதத்தை விட குறைவானதாகவே இருந்திருக்கிறது.

உலக காலநிலை மாற்றத்தை அவதானிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அரசாங்கங்களுக்கிடையேயான அமைப்புக் குழு (ஐ.பி.சி.சி.) நிலக்கரி பயன்படுத்துகையும் வளிமண்டலத்தில் காபனீரொக்சைட் அதிகரிப்பும் ஆயிரம் ஆண்டுகளில் புவி வெப்பமாதலை 3 பாகை செல்சியஸ் அதிகரிக்கச்செய்கிறது என்று தெரிவிக்கிறது ஆனால், இக்கூற்று மிகைப்படுத்தப்பட்டது என்றே கருதும் சில விஞ்ஞானிகள், அப்படியெனினும்கூட, அதில் நிலக்கரி பாவனை ஏற்படுத்தும் அதிகரிப்பு அரை பாகை செல்சியஸாகவே இருக்குமென்றும் கூறுகின்றனர். அதிலும், ஆயிரம் ஆண்டு காலத்தில், இந்த நூற்றாண்டில் ஏற்படும் அதிகரிப்பு மிகச் சொற்பமானதாகவே இருக்குமென்றும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், அண்மைக்கால ஆராய்ச்சிகளில், கடந்த 10 ஆயிரத்து 500 ஆண்டுகளில், 9 ஆயிரத்து 100 ஆண்டுகள் தற்போதுள்ளதைவிட 3 பாகை செல்சியஸ் அதிகரித்த வெப்பநிலையைக் கொண்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. அவுஸ்திரேலியாவில் பசுமைப் பிரசாரகர்கள் கூறுவதுபோல், ஏழு லட்சம் கடற்கரை வீடுகள் கடலில் மூழ்கும்வகையில் கடலின் நீர்மட்ட அதிகரிப்பும் பயங்கரமான விதத்தில் ஏற்படவில்லை என்றும் இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

1993இல் மேற்கொள்ளப்பட்ட சரியான செய்மதி அளவீடுகளின்படி, ஒரு நூற்றாண்டில் கடல் மட்டம் சுமார் ஓர் அடி உயர்வது அறியப்பட்டிருக்கிறது.




விளையாட்டு

டெஸ்ட் கிரிக்கெட்

# நிலைகொள்ளும் அழகியல்

## விரைவு ஆட்டங்கள் அசைத்துவிடவில்லை

அரவிந்தன்

ஒரு நாள் ஆட்டங்கள் பிரபலமடையத் தொடங்கிய போது, இனி டெஸ்ட் போட்டிகளின் நிலை அவ்வளவுதான் என்று சொன்னார்கள். 20-20 போட்டிகள் வந்தபோதும் அதையேதான் சொன்னார்கள். விரைவு உணவுபோல, மூன்று மணிநேர சினிமாபோல, கால்பந்து முதலான ஆட்டங்கள்போல விறுவிறுப்பாக நடக்கும் மூன்று மணிநேரப் பரபரப்புக்குமுன், ஐந்து நாள் ஆட்டம் எடுபடாது என்று சில பண்டிதர்கள் ஆரூடம் சொன்னார்கள். சூறாவளிபோலத் தாக்கிய 20 ஓவர் போட்டிகள் டெஸ்ட் கிரிக்கெட்டை அடித்துச் சென்றுவிடுமோ என்று மரபார்ந்த கிரிக்கெட்டின் காதலர்கள் பயந்தார்கள். ஆனால், கிரிக்கெட்டின் செவ்வியல் வடிவமான டெஸ்ட் போட்டியின் மதிப்போ, வசீகரமோ குறையவில்லை என்பதைக் கடந்த ஈராண்டுகளில் நடந்துவரும் போட்டிகள் நிரூபிக்கின்றன. அதுவும், அண்மையில் நடந்து முடிந்த 'ஆஷஸ்' (அவுஸ்திரேலியா - இங்கிலாந்து) டெஸ்ட் தொடர், தென் ஆபிரிக்கா - இந்தியா டெஸ்ட் தொடர் ஆகியவை, டெஸ்ட் போட்டிகளின் வசீகரம் கூடியிருப்பதை உணர்த்தியிருக்கின்றன.

அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டுப் போகும் விரைவு உணவுகள் விரைவான வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும், தலைவாழை இலை போட்டுப் பரிமாறப்படும் விஸ்தாரமான உணவு, தன் சுவையையும் வசீகரத்தையும் இழந்துவிடவில்லை. உடனடி காப்பி வந்தபிறகும் வடிகட்டியில் பொறுமையாக இறங்கும் 'பில்டர்' காப்பிக்கான மதிப்பும் வசீகரமும் குறைந்துவிடவில்லை. வாழ்வின் எல்லா அம்சங்களையும்போலவே கிரிக்கெட்டும் காலத்துக்கேற்ப மாறிவருகிறது. ஒரு காலத்தில் இரண்டு இன்னிங்ஸ்களும் முடியும்வரை, எத்தனை நாளானாலும் ஆடப்பட்டுக் கொண்டிருந்த கிரிக்கெட், பின்னர் ஆறு நாள்களுக்குள் ஆட்டத்தை முடித்துக்கொள்ளவேண்டும் என்ற வரையறைக்கு உள்பட்டது. ஆறு, பின்னர் ஐந்தாயிற்று. இடையில் விடப்பட்டுவந்த ஓய்வு நாள் ரத்து செய்யப்பட்டது. எகிறு பந்துகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. மைதானத்தில் இருக்கும் நடுவர்கள் சொல்வதே இறுதி என்ற நிலை இன்றும் தொடர்ந்தாலும், தீர்ப்பு வழங்கும் விஷயத்தில் தொழில்நுட்பத்தின் உதவி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'ரன் அவுட்', 'ஸ்ரம்பிங்' முதலான தருணங்களில் தொழில்நுட்ப உதவியுடன் மூன்றாவது நடுவர் தரும் முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஒரு நாளில் குறைந்தது இத்தனை ஓவர்கள் போடப்படவேண்டும் என்னும் விதிகளும், விதிமீறல்களுக்கு அபராதமும் வழங்கப்படுகின்றன. இப்படி எத்தனையோ மாற்றங்கள் இருந்தாலும் மரபார்ந்த டெஸ்ட் போட்டியின் அடிப்படைக் குணம் மாறவில்லை. அதன் அழகியல் சிறப்பும் அது தரும் பரவசமும் மாறவில்லை.

ஆஷஸ் போட்டியும் தென் ஆபிரிக்க - இந்திய போட்டிகளும் டெஸ்ட் கிரிக்கெட்டின் மகிமையைப் பறைசாற்றுகின்றன. முதல் போட்டியில் சமன்செய்த அவுஸ்திரேலியா, அடுத்த போட்டியில் தோற்றாலும் பேர்த் மைதானத்தில் வீறுகொண்டு எழுந்து இங்கிலாந்தை இன்னிங்ஸ் தோல்விக்கு ஆளாக்கியது. இங்கிலாந்தின் சவால் வலுவிழந்துபோகுமோ என்று தோன்றியபோது, அடுத்த டெஸ்டில் இங்கிலாந்து வசதியான வெற்றியைப் பெற்று 2-1 என்று முன்னிலை பெற்றது. இந்த வெற்றி, ஆஷஸ் கிண்ணம் இம்முறை அவுஸ்திரேலியாவுக்கு இல்லை என்பதையும் உறுதிசெய்தது. ஏற்கனவே இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் போட்டியில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணி, இந்தத் தொடரில் தோற்றால்தான் கிண்ணம் அவர்கள் கையை விட்டுப் போகும். ஆனால், நான்கு டெஸ்டுகள் முடிந்த நிலையில் இங்கிலாந்து முன்னிலை பெற்றிருந்ததால் ஐந்தாவது டெஸ்டில் வென்றாலும் ஆஸி.யால் தொடரைச் சமன் செய்யத்தான் முடியும் என்ற நிலை. சமன் செய்தால் கிண்ணத்தைத் திரும்பப் பெறமுடியாது என்பதால் நான்காவது டெஸ்டிலேயே ஆஸி.யின் கனவு தகர்ந்தது என்று சொல்லலாம். ஆட்டத்தில் தன் பிடியை இழந்து தவிக்கும் ஆஸி. அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்குக்குக் கை விரலில் அடியும் பட்டதால் அவரால் விளையாட முடியாமல் போனது. ஐந்தாவது டெஸ்டில் இன்னிங்ஸ் தோல்விகண்டு ஆஸி. அணி பெரும் சரிவைக் கண்டது. சர்வதேச தர வரிசையில் முதல் முறையாக ஐந்தாம் இடத்துக்குச் சறுக்கியது.

டெஸ்ட் ஆட்டங்களின் முதல்வனாக, நெடுங்காலம் கம்பீரமாக உலவி வந்த அவுஸ்திரேலிய அணிக்கு என்ன ஆயிற்று? ரிக்கி பொண்டிங்கும் ஆஸி.யின் பிற கிரிக்கெட் ஜாம்பவான்களும் சொல்வதுபோல, ஸ்டீவ் வா, ஷேன் வார்ன், கிளென் மெக்ரா, மத்யூ ஹேடன், கில் கிறிஸ்ற், ஜஸ்ரின் லேங்கர் ஆகிய மாபெரும் திறமைசாலிகள் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் ஓய்வு பெற்றதுதான் காரணம் என்று பரவலாக நம்பப்படுகிறது. இதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால், இதுவே முழு உண்மையும் அல்ல. ஷேன் வார்ன் ஆடிக்கொண்டிருந்தபோதே பல போட்டிகளில் ஆஸி. மண் கவ்வியிருக்கிறது. மெக்ரா தன் உச்சத் திறனோடு ஆடிக்கொண்டிருந்த சமயத்தில்கூட ஆஸி. அணி பல போட்டிகளில் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. உதாரணமாக, 2003-04 ஆண்டில் இந்திய அணி ஆஸி.யில் சுற்றுப் பயணம் செய்தபோது இவர்கள் அத்தனை பேரும் அணியில் இருந்தார்கள். ஆனாலும், இந்தியாவால் டெஸ்ட் தொடரை சமன்செய்ய முடிந்தது. பிரிஸ்பேணில் தோல்வியின் விளிம்பிலிருந்து மீண்டு வந்து சமன்செய்ய இந்திய அணியால் முடிந்தது. சிட்னியிலும் அடிலெய்டிலும் இந்திய அணி அபாரமாக ஆடியது. கடைசி டெஸ்டை சமன்செய்ய அப்போதைய கப்டன் ஸ்டீவ் வா (அவருக்கும் அது கடைசி டெஸ்ட்) கடுமையாகப் போராடவேண்டியிருந்தது. அதுபோலவே, தென் ஆபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை ஆகிய அணிகளும் சர்வ வல்லமை பொருந்திய ஆஸி.க்குப் பல சமயங்களில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால், ஆஸி. அணி நெருக்கடியில் சிக்கும்போதெல்லாம் யாராவது ஒருவர் அணியைக் காப்பாற்றிவிடுவார். முன்னிலை துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்களைக் குவிக்காதபோது, கடைநிலை ஆட்டக்காரர்கள் அந்தப் பணியை ஏற்றுக்கொள்வார்கள். ஒரு முறை (1999-2000 தொடர்) பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் 100 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்களை இழந்து ஆஸி. அணி தத்தளித்தது. ஆனால், அடம் ஹில் கிறிஸ்டும் பந்து வீச்சாளர் ஷேன் வார்னும் அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். அந்தப் போட்டியில் ஆஸி. வென்றது. அதுபோலவே, பங்களாதேஷுக்கு எதிரான ஒரு போட்டியில் (2004) ரிக்கி பொண்டிங் தலைமையிலான அணி தடுமாறியபோது,



பந்து வீச்சாளர் கில்லெஸ்பி தன் துடுப்பாட்டத்தின் மூலம் அணியைக் காப்பாற்றினார். முன்னிலைப் பந்து வீச்சாளர்களுக்கு விக்கெட் விழாதபோது, மைக்கேல் கிளார்க் போன்ற பகுதி நேரப் பந்து வீச்சாளர்கள் முக்கியமான விக்கெட்டுகளை வீழ்த்தி, அணிக்குக் கைகொடுத்திருக்கிறார்கள். இதுபோல பல நிகழ்வுகளைச் சொல்லலாம்.

திறமைசாலிகள் எல்லா அணிகளிலும் இருக்கிறார்கள். ஆனால், அணியில் உள்ள ஒவ்வொருவரும் அணியின் வெற்றிக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு செயல்படும்போது அவர்களின் தனித் திறன் கணிசமாக உயர்கிறது. இந்த அணுகுமுறைதான் ஆஸி.யின் கூடுதல் பலம். தவிர, வெற்றியின்மீது அவர்களுக்கு இருக்கும் அசாத்தியமான வெறி, எம்மை வெல்ல யாராலும் முடியாது என்ற மிதமிஞ்சிய தன்னம்பிக்கை ஆகியவையும் அவர்கள் இரத்தத்தில் ஊறியிருக்கின்றன. இவையும் ஆஸி. அணி பல ஆண்டுகள் முதலிடத்தில் இருப்பதற்குக் காரணங்களாக அமைந்தன.

ஆனால், காலப்போக்கில் இந்த அம்சங்கள் மெல்லமெல்ல மற்ற அணிகளுக்கும் தொற்றிக்கொண்டன. இங்கிலாந்துபோன்ற அணிகளில் புதிய திறமைசாலிகள் இடம்பெற்றார்கள். இந்தியாபோன்ற அணிகளில் ஆட்டக்காரர்கள் தங்கள் திறமைக்கு நியாயம் செய்யும் வகையில் ஆடிவருகிறார்கள். அதே சமயத்தில் ஆஸி. அணியில் திறமையாளர்கள் குறையத் தொடங்கினார்கள். இந்த எல்லாக் காரணங்களும் சேர்ந்து ஆஸி.யின் ஆதிக்கத்துக்கு வேட்டு வைத்துவிட்டன.

ஆனால், இன்றும்கூட ஆஸி. அணியைப் புறக்கணித்துவிட முடியாது. அடி மேல் அடி வாங்கிக்கொண்டிருக்கும் இதே அணிதான் பாகிஸ்தான் அணியைச் சென்ற ஆண்டில் மூன்று டெஸ்ட்களிலும் மண்ணைக் கவ்வ வைத்தது. இதே அணிதான் இந்தியாவில் ஒரு டெஸ்ட் போட்டியைக் கிட்டத்தட்ட வெல்லும் நிலையில் இருந்தது. வி. வி. எஸ். லட்சுமணனின் அற்புதமான துடுப்பாட்டமும் கொஞ்சம் அதிருஷ்டமும் சேர்ந்துதான் இந்தியாவால் வெல்லமுடிந்தது. ஆஷஸ் தொடரிலும் பெர்த்தில் ஆஸி. பெற்ற வெற்றி சாதாரண வெற்றி அல்ல. இன்னிங்ஸ் வெற்றி. முதல் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் சரியாக ஆடாவிட்டாலும் இரண்டாவது இன்னிங்ஸில் சுதாரித்துக்கொண்டது. ரிக்கி பொண்டிங், மைக்கேல் கிளார்க் ஆகிய இருவரது ஆட்டங்களும் திறன்மிகு நிலையில் இல்லாதது அணிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. டக் பொலிஞ்சர், மிட்செல் ஜோன்சன்

போன்ற வேகப் பந்துவீச்சாளர்கள் இந்தத் தொடரில் சோபிக்காதது, அல்லது இங்கிலாந்து துடுப்பாட்டக்காரர்கள் மிகச் சிறப்பாக ஆடியது ஆஸி.யின் வெற்றிவாய்ப்பைப் பறித்துவிட்டது. பொண்டிங், கிளார்க், ஜோன்சன், பொலிஞ்சர் ஆகிய நால்வரில் இருவர் தங்கள் ஆட்டத்தின் திறன்மிகு நிலையை எட்டினால்கூட ஆஸி. அணி மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும்.

அணித் தலைவர் பொண்டிங் மோசமாக ஆடுவதும், பந்து வீச்சின் பலவீனமும் சேர்ந்து ஆஸி.யைத் தலை குனிய வைத்திருக்கிறது. அண்மைக் காலங்களில் ஆஸி. அணித் தலைவர்கள் எவரும் எதிர்கொள்ளாத நெருக்கடியை பொண்டிங் எதிர்கொண்டிருக்கிறார். தலைவன் பலவீனமாக இருப்பதும், அணியின் பலவீனமாகத் தலைவனை எதிரணியினர் அடையாளம் காண்பதும் களத்தில் மிக எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியன. ஆஸி.யின் மிகப் பெரிய பிரச்னையே இதுதான். ஒன்று, பொண்டிங் தேறி வரவேண்டும். அல்லது, அவர் தலைமைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இரண்டில் ஒன்று நடக்காவிட்டால் ஆஸி. அணி இந்த நெருக்கடியை இப்போதைக்குக் கடக்கமாட்டாது.

மறுபுறம், டெஸ்ட் தர வரிசையில் இந்தியா தன் முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியா முதலிடம் பெற்றபின் அது ஆடிய பெரும்பாலான ஆட்டங்கள் இந்திய மண்ணில் நடந்தவை. எல்லா ஆட்டங்களும் துணைக்கண்டத்து ஆடுகளங்களில் நடந்தவை. எனவே, இந்தியாவின் முதன்மை நிலை கடுமையான சோதனைக்கு ஆளாகவில்லை என்றே சொல்லலாம். இதனாலேயே தென் ஆபிரிக்க மண்ணில் அதன் ஆட்டம் எப்படி இருக்கும் என்ற கேள்வி பெரிதாக எழுந்தது. அதற்கேற்றாற்போல, முதல் போட்டியின் முதல் நாளில் துடுப்பாடிய இந்தியா 131 ஓட்டங்களுக்குள் சுருண்டது. டேல் ஸ்டெயின், மோர்னி மார்க்கல் ஆகியோரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய துடுப்பாட்டக்காரர்கள் சரிந்தனர். இந்தியாவின் திறமையின்மீது எப்போதும் ஐயம் கொள்ளும் விமர்சகர்களின் முகங்களில் மந்தகாசப் புன்னகை அரும்பியது.

அன்றைய நாளில் எந்த அணி ஆடியிருந்தாலும் 200 ஓட்டங்களைத் தாண்டியிருக்க முடியாது என்பதே அன்றைய ஆடுகளத்தின் நிலை என்பதை வசதியாக மறந்துவிட்டு, பலரும் எள்ளி நகையாடத் தொடங்கினார்கள். ஆனால், அடுத்த இன்னிங்ஸிலும் அதற்கடுத்து ஆடிய நான்கு இன்னிங்ஸ்களிலும் இந்தியா தென் ஆபிரிக்காவின் வேகப் பந்துக் கணைகளைத் திறமையாகவே எதிர்கொண்டு ஆடியது. இரண்டாவது போட்டியை வென்றது. அதில் தென் ஆபிரிக்க அணியை ஒரு முறை 150 ஓட்டங்களுக்குள் சுருட்டியது குறிப்பிடத்தக்கது. மூன்றாவது போட்டியின் பெரும் பகுதியில் இந்தியாவே ஆதிக்கம் செலுத்தியது. தொடரைச் சமன்செய்து முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டது. மூன்றாம் போட்டியின் நான்காம் நாளில் கூடுதல் தீவிரமும் சிறிது அதிருஷ்டமும் இருந்திருந்தால் இந்தியா அந்தப் போட்டியையும் தொடரையும் வென்று சாதனை படைத்திருக்கும். இந்த மாற்றம் விமர்சகர்களின் முகங்களில் தோன்றிய புன்னகையை மங்கச் செய்தது. இனியும் இந்தியாவைச் சொந்த ஊரில் மட்டும் சூரப் புலிகள் என்று சொல்லிவிடமுடியாது என்பதை உலக கிரிக்கெட் விமர்சகர்கள் உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த மாற்றம் சும்மா வந்துவிடவில்லை. அல்லது, யாரோ ஒருவர் அல்லது இருவரின் உழைப்பால் வந்துவிடவில்லை. அணியின் அனைத்து உறுப்பினர்களும் ஏதேனும் ஒரு தருணத்தில் அணியின் வெற்றிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். ஜாகீர் கானும் ஹர்பஜன் சிங்கும் தொடர்ந்து விக்கெட்டுகளை வீழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இஷாந்த் ஷர்மா சில நெருக்கடியான கட்டங்களில் முக்கியமான விக்கெட்டுகளை வீழ்த்தி, அணிக்குப் பெரும் ஆறுதலைத் தந்தார். உணர்ச்சிவசப்படும் ஸ்ரீஷாந்தும் சில சமயங்களில் பெரும் பங்காற்றியிருக்கிறார். தென் ஆபிரிக்காவில் நடந்த இரண்டாவது டெஸ்டில் அவர் எடுத்த விக்கெட்டுகள் மிகவும் முக்கியமானவை. குறிப்பாக, ஜாக் காலிஸுக்கு அவர் வீசிய எகிறு பந்து ஓர் அற்புதம். வீரேந்திர சேவாக், கௌதம் காம்பீர், ராகுல் திராவிட், சச்சின் ரெண்டுல்கர், லட்சுமணன், மகேந்திர சிங் தோனி ஆகியோர் வெவ்வேறு தருணங்களில் முக்கியமான பங்காற்றியிருக்கிறார்கள். இந்தியா இப்போதுதான் ஓர் அணியாக உணரத்தக்க வகையில் ஆடிவருகிறது. அனைவரும் பொறுப்பேற்கிறார்கள். ஆஸி.யின் கில்லெஸ்பி, ஜோன்சன் ஆகியோரைப் போல ஹர்பஜன், ஜாகீர், இஷாந்த் ஆகிய பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்டத்திலும் சில சமயம் முக்கியமான பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார்கள்.

இந்தியா முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டது மட்டுமன்றி, டெஸ்ட் போட்டிகள் மீதான ஆர்வம் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் கூடுவதற்கும் தன் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. டெஸ்ட் போட்டிகளின் அழகு, நுட்பம், அதில் நிகழும் ஏற்ற இறக்கங்கள், பந்துக்கும் துடுப்புக்கும் இடையிலான போராட்டம் ஆகியவற்றை இந்தியா ஆடும் போட்டிகளில் அநுபவிக்கமுடிகிறது. குறிப்பாக, தென் ஆபிரிக்க அணிக்கெதிரான போட்டிகளில் டெஸ்ட் போட்டியின் தீவிரத்தையும் பரவசத்தையும் அநுபவிக்க முடிந்தது. மூன்றாவது டெஸ்டின் மூன்றாம் நாள் காலையில் டேல் ஸ்டெயின் சச்சினுக்கு வீசிய ஓவர்கள் டெஸ்ட் போட்டியின் பொன்னான தருணங்கள். அவ்வளவு துல்லியமான அளவில் அத்தனை வேகத்தில் அவரால் வீசமுடிந்தது ஓர் ஆச்சரியம் என்றால், வீசிய பந்துகளில் பாதிக்கும் மேல் 'ஸ்விங்' ஆனது அதைவிடப் பெரிய ஆச்சரியம். சச்சினின் அநுபவம், திறமை, கவனம், கொஞ்சம் அதிருஷ்டம் எல்லாம் சேர்ந்துதான் அவரது விக்கெடைக் காப்பாற்றின. சச்சினும் ஹர்பஜனும் சேர்ந்து காற்றை இந்திய அணியின் பக்கம் திருப்பினார்கள். அதைத் தொடர்ந்து இந்தியப் பந்து வீச்சாளர்கள் 140க்குள் 6 விக்கெட்டை வீழ்த்தி, அந்தக் காற்றை மேலும் வலுவாக வீசச் செய்தார்கள். ஆனால், காலிஸ், மார்க் பவுச்சர், டேல் ஸ்டெயின் ஆகியோரின் துடுப்பாட்டம் இந்தியாவின் சாதகத்தை மழுங்கச் செய்தது. இந்தியாவின் கைக்கு எட்டிய வெற்றி கை நழுவிப் போனது. சம நிலையுடன் திருப்திப் பட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. தீவிரமாகப் போரிடப்பட்ட ஓர் அற்புதமான தொடர், சம நிலையில் முடிவுக்கு வந்தது இரு அணிகளின் தகுதிக்கும் நியாயம் செய்வதாகவே இருந்தது.

ஆஷஸ் தொடரிலும் தென் ஆபிரிக்க - இந்தியத் தொடரிலும் ஆடப்பட்ட போட்டிகள் கிரிக்கெட்டின் சாதனைகளின் எல்லைகளை விஸ்தரிப்பதுடன் அதன் அழகையும் மதிப்பையும் கூட்டுவதற்குப் பங்காற்றியிருக்கின்றன. இந்தத் தொடர்கள், டெஸ்ட் கிரிக்கெட்தான் அசல் கிரிக்கெட் என்ற உண்மையை அழுத்தமாகப் பறைசாற்றுகின்றன. ■


SOLD
RED CARPET
Thinking of
Buying or Selling
Real Estate
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......
Real Estate Service
வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
* 20 Years Real Estate Experience
* Multi Award Winner
Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6



டி. எம். கிருஷ்ணா



சுதா ரகுநாதன்

கலை | இசைவிழா

# சோலையில் புது மலர்கள்

## வழமைபோலவும், வழமையில் மாற்றங்களுடனும் முன்னணி கலைஞர்கள்

பிங்காட்சன்

வழக்கம்போல இம்முறையும் இசைவிழா நடந்துமுடிந்துவிட்டது. பட்டங்கள், விருதுகள் என்று தேடித் தேடிக் கொடுத்து முடித்தாகிவிட்டது. பல அரங்குகளில் தலைமை வகித்துப் பிரமுகர்கள் பேசி ஓய்ந்துவிட்டனர். அரைத்த மாவை அரைத்தபடி, உருப்படியான கருத்துக்கள் எதுவுமில்லை.

வழக்கம்போல வயதானவர்களே அதிகம் - அதுவும் குறிப்பிட்ட சில கச்சேரிகளுக்கு மட்டும். அதிகமாக, புதிய இளைஞர்கள் அற்புதமாகப் பாடினார்கள். ஆனால், கேட்பதற்கு இருபதுபேர்கள் மட்டுமே இருந்தனர்.

கன்டீன்களில் கூட்டம்; வடையும் ஊத்தப்பமும் இசையைவிட அதிகமாக விமர்சிக்கப்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன், காலஞ்சென்ற இசைமேதை செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் என்னிடம் கூறினார்: “நேற்று ரி. வி. யில் இசை நிகழ்ச்சி கேட்டேன்; ஒரே இரைச்சல். கேட்கமுடியவில்லை. ஸ்வரங்களைப் போஷித்து, அன்புடன் தடவிக் கொடுத்துப் பாடவேண்டும் - இரைச்சல் கூடாது.''

இன்று முன்னணியில் இருக்கும் ரி. எம். கிருஷ்ணா செம்மங்குடியிடம் இசை பயின்றவர். சிறந்த கலைஞர். ஆனால், இம்முறை தன் குருவின் கருத்தை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டார் போலும் - ஒரே இரைச்சல் ஆர்ப்பாட்டம். இம்முறை இசைவிழாவில் பாடப்போவதில்லை என்று அறிவித்திருந்த ரி. எம். கிருஷ்ணா, கடைசியில் மனதை மாற்றிக் கொண்டு, ஓரிரிடங்களில் பாடினார். ஒவ்வோர் இடத்திலும் இரைச்சல் அதிகம்.

இம்முறை மட்டுமல்ல, எப்பொழுதுமே அருணா சாயிராமின் இசையைக் கேட்க ரசிகர்கள் ஓடோடி வருவது வழக்கம். அரங்குகள் நிரம்பி வழியும்.

அற்புதமான இசைப் பாரம்பரியம் இவருடையது. பிருந்தா - முக்தாவிடம் இசை பயின்றவர். அந்த வழியைப் பின்பற்றி, சுத்தமாகப் பாடிவந்தவரைக்கும் கேட்க ஆளில்லை.

பாணியை மாற்றிக்கொண்டார். அமைதியான பாணியை ஒதுக்கிவிட்டு, ஆர்ப்பாட்ட சங்கீத உத்திகளில் இறங்கினார். காளிங்க நர்த்தனத்தை (கண்ணன் நச்சு நாகத்தை அடக்கி, நடனமாடுவதை) விளக்கும் ஊத்துக்காடு வேங்கட கவியின் பாடலைப் பாடும்போது, “உஸ்... உஸ்...'' என்று பாம்பு சீறுவதுபோல ஓசை எழுப்புவார்; அரங்கம் சிலிர்த்து எழும்.

“என்னகவி பாடினாலும் உந்தன் உள்ளம் இரங்கவில்லை...'' என்று, மேலே முருகனை நோக்கிக் கைதூக்கிப் பாடுவார் (ஒரு காலத்தில் மதுரை சோமு பாடிப் பிரபலமாக்கிய பாட்டு).



பாரத் கலாச்சார் தொடக்க வைபவத்தில் கலைஞர்கள், புரவலர்கள் டாக்டர் (திருமதி) வை. ஜி. பார்த்தசாரதி, டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோர்

படம்: யோகா

"குறும்புக்காரக் கண்ணா...'' என்று நாட்டுப் பாடல் மெட்டில் பாடி, அரங்கில் கண்ணனின் லீலைகளைக் கண் முன் நிறுத்துவார். மராட்டிய அபங்கங்களை இந்துஸ்தானி இராகங்களில் பாடிக் குதிப்பார். ஆனால், இம்முறை மியூசிக் அக்கடெமியில் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, அடக்க மாக, அமைதியாக, ஆர்ப்பாட்ட உத்திகள் எதுவுமின்றிப் பாடினார். அரங்கம் கைதட்டி வரவேற்றது.

சஞ்சய் சுப்பிரமணியம் மற்றுமொரு மகத்தான கலைஞர். தமிழ்ப் பாடல்களை - அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, முத்துத்தாண்டவர் பாடல்களை அதிகமாகப் பாடிவருகிறார். இடைஞ்சலான குரல் என்றாலும், ஆழ்ந்த இசை ஞானம்; கற்பனை. கிருஷ்ணகான சபா கச்சேரியில் அனைவரையும் கட்டிப்போட்டுவிட்டார், .

இவருக்கு கர்வம் பிடித்தவர் என்ற பெயர் வந்துவிட்டது. அது, வித்யா கர்வம் எனலாம். இசைக்கு பக்தி தேவையில்லை என்பது இவருடைய கருத்து.

பக்தியுடன் கலந்து ஒலிக்காத இசை, நீடித்து மக்களைக் கவர்ந்திழுக்காது என்றே பல இசை வல்லுநர்கள் கூறிவந்துள்ளனர். மறைந்த எம். டி. ராமநாதன், இராமபிரான் குறித்து விருத்தம் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தார் ('சீதா களத்ரம்...' என்று துவங்கும் விருத்தம்). சாவேரியில் அந்த விருத்தத்தின் வரிகளைப் பாடியபொழுது கண்ணீர் பெருகியது - அவரால் பாடமுடியவில்லை. கேட்டுக்கொண்டிருந்த மக்களும் இராமபிரானைக் கண்ணால் கண்டதுபோல அழுது கரைந்துகொண்டிருந்தனர். இது, நான் கண்ணாரக் கண்ட ஒன்று.

நிகழ்ச்சி முடிந்தபிறகு அவரிடம் பணிவுடன் சென்று பாராட்டினேன். "பிரபுவைப் பற்றி (இறைவனைப் பற்றி) பாடறோம் - பின்ன எப்படி இருக்கும்?'' என்றார் அடக்கத்துடன்.

வழக்கமாக, மந்தகதியில் பாடுபவர் என்று பெயரெடுத்துவிட்ட பம்பாய் ஜெயஸ்ரீ, இம்முறை விறுவிறுப்பாக பாடினார். வழக்கம்போல உணர்ச்சி பாவத்துடன் பாடினார்.

சுதா ரகுநாதன் ரசிகர்களை ஏமாற்றவில்லை. சில அரங்குகளில் தனது குரு எம். எல். வசந்தகுமாரியை நினைவூட்டினார் - எம். எல். வி. ஓர் இசைச் சூறாவளியாகத் திகழ்ந்தவர்.

கச்சேரியில் சூடுபிடிக்க அரைமணி நேரம் ஆகும். அதன் பின், சண்டமாருதம்தான். ஆண் பாடகர்கள்கூடத் தொடுவதற்கு அஞ்சும் இசைப் பிடிகளை அநாயாசமாகப் பாடிவிடுவார். புதுப்புதுக் கற்பனைகள் - அடாடா, அவரைப்போன்ற கலைஞரை எப்போது காண்போம்? - ஏக்கம்தான் விஞ்சுகிறது.

ரஞ்சனி - காயத்திரி கச்சேரிக்குச் சென்றால் ஏமாற்றம் அடையமுடியாது. கச்சிதமான இனிய ஒருங்கிணைந்த பாட்டு, காயத்திரியின் கற்பனை வளம், இராக ஆலாபனை, மாற்றி மாற்றிப் பாடுகின்ற முறை - ஒருகணம் கூட விறுவிறுப்புக் குறையாத பாட்டு.

இவர்கள் அற்புதமாக வயலின் வாசிப்பார்கள். இம்முறை வயலின் இசை நிகழ்ச்சியும் அளித்தார்கள்.

இவர்கள் தமிழில் விருத்தம் பாடும்போது உருகாதார் எவரும் இல்லை. பாலக்காடு கே. வி. நாராயணசுவாமி சில ஆண்டுகளுக்கு முன்னர் திருநெல்வேலியில் கோவில்கொண்ட காந்திமதி பிள்ளைத் தமிழை இராகமாளிகை விருத்தமாகப் பாடி, "எப்போ வருவாரோ...'' என்ற ஜோன்புரி இராக பாடலில் முடித்தது நினைவுக்கு வருகிறது (இது குறுந்தட்டாகவும் வெளிவந்துள்ளது).

அபிஷேக் ரகுராம் என்றோர் இளைஞன் - மிருதங்க மேதை பாலக்காடு ரகுவின் பேரன் - ஆகா, என்னமாதிரி பாடுகிறான்! அசாத்திய குரல் வளம் - கற்பனை. இந்துஸ்தானி பாணியையும் கலந்து, துள்ளிப் புகுந்து வெளியே வருகிறான். ஆனால், ஆலாபனையை எப்படிக் கச்சிதமாக முடிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்ளவேண்டும். சங்கதிகளை அளவுக்கு அதிகமாகப் போட்டு, பாட்டையும் இராகத்தையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து அடித்துத் துவைத்து, உலர்த்திவிடுகிறான். பெரிய திறமை - ஆனால், அளவுக்கு மீறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.


சிக்கில் குருசரண் - இன்று எல்லா வகையிலும் நிறைவாக விளங்கும் கலைஞர் - இளைஞர். அடக்கமும் திறமையும் பளிச்சிடுகின்றன.

மற்றைய கலைஞர்கள் வழக்கம்போல பாடினார்கள். ரி. என். சேஷகோபாலனுக்கு - (அவர் சங்கீத சாகரம்) - கூட்டம் வருவதில்லை என்பது வருத்தமளிக்கிறது.

சிலர் புதிய புதிய இராகங்களைப் பாடினார்கள். புதுப் புதுக் கீர்த்தனைகள்.

அரியக்குடி இராமானுஜ ஐயங்காரிடம் ஒரு நண்பர், "நரசிம்மா...'' என்று தொடங்கும் பிலஹரி இராக கீர்த்தனையைப் பாடுங்கள் என்று கேட்டார். அவர் சொன்னார்: "இல்லை, என்னால் பாடமுடியாது - அதைக் கற்றுப்பாட எனக்கு ஆறுமாத அவகாசம் வேண்டும்'' என்று.

இன்றோ, புதிய கீர்த்தனைகளை ஒரே நாளில் பாடம் செய்து பாடுகிறார்கள். பாட்டை எழுதி, எதிரே அதைப் பார்த்துப் பாடுகிறார்கள். இது நல்ல முன்னேற்றமா - தெரியவில்லை. ■




# நிழல்

இரவில் நிலவொளியில் நிழல் ஒன்று நடந்துவந்தது.

நானும் அதனைப் பார்த்துக் கொண்டே வந்தேன். இரவுக்குள்தான் எத்தனை நிழல்கள்...! மனித நிழல் மரங்களின் நிழல்களைக் கடந்து வந்தது. அணில்களின் நிழல்கள் பல மரங்களின் நிழல்களுள் மறைந்துகிடக்கலாம்...

நிழல் மிதித்து நிழல் சாகப்போவதில்லை. நிழல் நடந்துசென்றது. பள்ளங்களிலும் மேடுகளிலும் அது வளைந்து நெளிந்து பயணித்தது. என்னால் அது முடியவில்லை. நான் அவற்றைக் கடந்து வந்தேன். நிழற்காடொன்றை அண்மித்தபோது, நடந்த நிழல் இன்னொரு நடக்கும் நிழலைக் கடக்கவேண்டி இருந்தது. கடக்கும்போது இரண்டு நிழல்களும் ஒட்டிக்கொண்டன. அடர்ந்த நிழற்காட்டில் கட்டிப் புரண்டன.

நிழலுக்குள் நிழலான சங்கமம் நிகழ்ந்துகொண்டிருந்தது. நிகழ்ச்சி முழுவதும் நிழலாகிக் கிடந்தது.

நான் நிழல்களை அடையாளப்படுத்த முயன்றேன். நிழல்களை அடையாளப்படுத்தும்போது அது நிழல்களின் கதையாக இருக்காதென்பதால் விட்டுவிட்டேன்.

ஆனால், நிழல்களுக்குள் குரல்கள் இருந்தன. அவை மனசின் துவாரங்களால் மட்டுமே நுகரக்கூடியனவாக இருந்தன. நான் நிழற்காட்டின் திகைப் பூண்டில் மிதித்தவனாய் கதை தேடிப் போனேன். அப்போது, இருட்டு மனித விழிகளைத் தின்னும் கோரச் சத்தம் எனக்குக் கேட்டது. வரவர ஒரு குரல்

என் அருகில் கேட்டது. 'என்னைத் தெரிகிறதா... என்னைத் தெரிகிறதா...' என்று அக் குரல் கேட்டது. நான் இல்லை என்று சொன்னேன். வேறெதுவும் சொன்னால் என் குரல் மாறிவிடும் என்ற அச்சம் ஒன்றும் என்னிடம் வைத்திருந்தவனாக...! குரல் தன் நிழலைக் காட்டியது. 'ஏதாவது தெரிகிறதா?' மீண்டும் 'இல்லை' என்றேன்.

என்மீது சிதறிக் கிடக்கும் குருதியை நீ காணவில்லை. என் நிஜத்தில் விழுந்த அடி காயங்களையும் கண்டல்களையும் உன்னால் காணமுடியாது. குருதியின் வர்ணம் உனக்குள் ஏற்படுத்தும் கிளர்ச்சியை என்னால் உருவாக்கமுடியாது.

ஆனால், குறைந்தபட்சம் சாம்பலின் வர்ணத்தால் ஏற்படும் ஒருவகை தத்துவார்த்த மனநிலையை ஏற்படுத்திக்கொள். இப்போதைக்கு என் பெயர் துரோகி என்றோ, விலைபோனவன் என்றோ வைத்துக்கொள். ஏனெனில், எனக்கு உயிர்தான் முன்னிலைப்பொருள். உனக்கோ கருத்தே முன்னிலைப் பொருள்.

**கடைசி நேரத்தில் தொலைந்துபோன என் கர்ப்பிணி மனைவியை நினைந்து அழுவதற்காகக்கூட நான் இப்போது விரும்பவில்லை. அவளது வயிற்றில் காதுவைத்து, பிறக்கப்போகும் எங்கள் குழந்தைக்காகக் காத்திருந்த காலம் இப்போது இல்லை. எங்கள் பிள்ளைக்கு 'விடுதலை' என்று பெயர்வைக்க எண்ணியிருந்தோம். அந்தப் பெயர்மட்டுமே இப்போது என் நினைவில் எதிரொலித்தபடி இருக்கிறது**

கேள்... என்னிடமும் கருத்து இருந்தது. அதன்மீது நம்பிக்கை இருந்தது. என் நம்பிக்கை விசுவாசமாகவும் மாறி இருந்தது. எனது துப்பாக்கி சுடுவதை நிறுத்தியபோது, நான் அவதாரங்கள் என்று நினைத்தவர்கள் தோல்வியின் கால்களில் நசிந்து கிடந்தார்கள். எனது கருத்து, நம்பிக்கை, விசுவாசம் எல்லாமே புழுதிபோலப் பறந்துபோயின. எங்கு தோல்வி தொடங்கியது என்பதை யோசிக்க உன்னைப்போல அவகாசம் எனக்கு இருக்கவில்லை. நம்பமுடியாத தோல்வி ஒரு ராட்சசனைப் போல என் முன்னே பல்லிளித்து நின்றது. வெற்றியாலும், வெறியாலும், செத்த பாம்படிக்கும் மனநிலையாலும் பாரமேறிய கைகள் என்னைப் பிடித்துக்கொண்டன. 'கருத்தாக' இருந்த நான் அப்போதுதான் என்னை உயிராக உணர்ந்தேன். என் முகம் சீரழிக்கப்பட்டது. என் உடல் வதைக்கப்பட்டது.

வழிந்த என் குருதிக்கு மேலால் உமிழ்நீர் படையொன்றும் நாறி வழிந்தது.

வீங்கிய கண்களின் சிறிய இடைவெளியால் என் உலகம் சுடுகாடாய்க் கிடப்பதைக் கண்டேன். யுத்த விமானம் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தபோது ஓர் ஓலைப் பாய்க்குள் ஒளிந்து கொண்ட ஒரு குழந்தையைப்போல என் உயிர் என் உடலுக்குள் இருந்தது. என் எதிரே என்னைப் போன்றவர்களின் தலைகள் சிதறிக்கொண்டிருந்தபோது நான் என் உயிரைக் காப்பாற்றும் உத்தியின் சாத்தியங்களை யோசிக்கலானேன்.

தோல்வியடைந்த என் கருத்துக்காக என் உயிரை இழக்க என்னால் முடியவில்லை. அந்தப் பொழுதுகளில் புத்தனோ, இயேசுவோ ஏனைய சிந்தனையாளர்களோ தோற்றுவித்த கருத்துநிலைகள்கூட தோற்றுக்கிடந்தன. இதோ துரோகி என்று உன்னால் சொல்லப்படத்தக்க ஓர் உயிர் பல 'துன்பியல் அநுபவங்களுடன்' வாழ்ந்துகொண்டிருக்கிறது.

என்னை வென்றவர்கள் ஒரு திசைகாட்டும் கருவியைப்போல எனைப் பயன்படுத்துகின்றனர். என்னை வென்றவர்களுக்குள் இருக்கும் உயிர்ப்பயம் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலைகளைச் செய்யத் தூண்டுகிறது... நான் அவர்களுக்குள்தான் என் கடவுளைத் தேடுகிறேன்.

... என் விடுதலையின் கடவுள் அவர்களுக்குள்தான் இருக்கிறார் என்று இப்போது தோன்றுகிறது. என்னை குறைவாக அடிப்பவரை நான் புனிதமான சம மனசுகளின் பட்டியலிலும் சேர்க்கத் தயாராக இருக்கிறேன். எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் ஆறுதல், கொஞ்சம் உணவு, கொஞ்சம் பரிவு.

... கடைசி நேரத்தில் தொலைந்துபோன என் கர்ப்பிணி மனைவியை நினைந்து அழுவதற்காகக்கூட நான் இப்போது விரும்பவில்லை. அவளது வயிற்றில் காதுவைத்து, பிறக்கப்போகும் எங்கள் குழந்தைக்காகக் காத்திருந்த காலம் இப்போது இல்லை. எங்கள் பிள்ளைக்கு 'விடுதலை' என்று பெயர் வைக்க எண்ணியிருந்தோம். அந்தப் பெயர் மட்டுமே இப்போது என் நினைவில் எதிரொலித்தபடி இருக்கிறது.


என்பக்க நியாயங்களை உங்களுடன் சொல்கிறேன். உங்களுக்கு இது பொருந்தும் என்று நான் சொல்லவில்லை. நாங்கள் இன்னமும் தோற்கவில்லை. இது ஒரு பின்னடைவு என்றும், எங்களுக்கான உரிமையை வேறு வழிகளில் பெறமுயல்வோம் என்றும் முனைவீர்கள். இன்னும் சிலர், தலைவன் வழியிலே மீண்டும் தொடர்வோம் என்றும் சொல்லித் திரியலாம். என்னை வென்றவர்களுடன் குசுகுசுத்தவர்களும் உங்களுக்குள்தான் இருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்களும் உங்களுடன் வித்தியாசமான கோணத்தில் வந்து மோதுவதை நீ கருத்தில் கொள்ள வேண்டும்.

பல்வேறுபட்ட கருத்துக்கள் குவிந்துகிடக்கும் உங்கள் சூழலில் நீ எந்தப் பக்கம் என்பதை எப்படி முடிவுசெய்கிறாய்? எது சரி, எது தவறு என்பதை அறிய நீ பயன்படுத்தும் தரவுகளும் கருத்துக்களும் சுத்தமானவைதானா?

ஓ கதைதேடி வந்தவனே, காலம் எழுதும் கதையில் நீயும் ஒரு பாத்திரம் என்பதை மறந்துவிடாதே... இப்போது நீ போ... வெளிச்சத்துக்குப் போ.

... நீ கருத்துக்கள் நிறைந்த இந்தச் சூழலில் உன் மனசாட்சிக்கு எட்டிய வரையில் நீதியான முடிவு எடுக்கிறாயா அல்லது ஒரு பக்கம் தலையும் மறுபக்கம் வாலும் காட்டி, உனக்கான புகழைச் சம்பாதிக்கும் வழிக்கு குந்தகமின்றி நடந்துகொள்கிறாயா என்பதைக் காலம் பார்த்துக்கொண்டே இருக்கிறது. ... நீ எழுதும் கதையின் பாத்திரமாய் நீயே முதலில் இருந்துபார்... என்று சொல்லி முடித்தது அந்தக் குரல்.

பின்னர், அந்த நிழற்காடு முழுதும் பெருத்த அமைதி நிலவிக் கிடந்தது. நான் நிழல்களையும் மிதியாமல் நடக்கத் தொடங்கினேன். அரசியல் சூழலின் அவசரமான திருப்பங்களில் தன் இயக்க சக்தியை இணைத்துக்கொள்வதற்கும் அப்பால், விடுதலையின் விரிதளமென்ற பெரும் பரப்பு பற்றிய உள்ளுணர்வில் இயங்குபவனே ஆரோக்கியமான எழுத்தாளன். அந்தப் பெரும் தளத்தில் நின்றபடியே சமூக, அரசியல் விடுதலையையும் அவன் பொருத்திக் கொள்ளவேண்டும். அதனை முதலில் இந்தச் சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும். அரசியல் ரசனை, இலக்கிய ரசனையாக மாறி நிற்கும் காலத்தை முதலில் கடந்தாகவேண்டும். இலக்கியவாதிகளுக்கு சட்டம்பிவேலை பார்க்கும் அரசியல் புத்திசீவிகளின் முகத்தில் அறைய எழுத்தே சிறந்த ஆயுதம் என்று எண்ணியபடி நடந்துகொண்டிருந்தேன். எனது நிழல் வரவர தேய்ந்து போய்க்கொண்டிருந்தது. ■



சினிமா | விமர்சனம்

# ஆடுகளம்

எழுத்து - இயக்கம்: வெற்றி மாறன்
நடிப்பு: தனுஷ், வ.ஐ.ச. ஜெயபாலன், கிஷோர், தப்ஸி
இசை: ஜி. வி. பிரகாஷ் குமார்
ஒளிப்பதிவு: வேல்ராஜ்

தனித்த ஆளுமை கொண்ட இயக்குநராக முதல் படத்திலேயே (பொல்லாதவன்) தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட வெற்றி மாறன், தன் இரண்டாவது படத்திலும் அதை நிலைநாட்டியிருக்கிறார். பொழுதுபோக்கு என்ற பெயரால் பார்வையாளர்களின் மூளையையும் சொரணையையும் இழிவுபடுத்துபவர்களுக்கு மத்தியில், பார்வையாளர்களை மதிக்கும் இயக்குநராக வெற்றி மாறன் வெளிப்படுகிறார். தேர்ந்துகொண்ட களத்துக்கும் கதைக்கும் நேர்மையோடு செயல்படும் இயக்குநராக அவர் உருவாகிவருவதை அவரது இரண்டாம் படமான ஆடுகளம் உணர்த்துகிறது.

மதுரையில் சேவல் சண்டையில் ஈடுபடும் குழுக்களைப் பின்னணியாகக் கொண்டு மனிதர்களுக்குள் உள்ளார்ந்து நின்று அவர்களை இயக்கும் விலங்குத் தன்மைகளைக் காட்டியிருக்கிறார் வெற்றி மாறன். சேவல் சண்டையின் இயல்புகளை நுட்பமாகவும் துல்லியமான விவரங்களுடனும் ஆவணப்படுத்துகிறார். படத்தின் தொடக்கம் சேவல் சண்டை என்னும் வித்தியாசமான ஆட்டத்தைப் பார்வையாளர்களுக்கு விரிவாக அறிமுகப்படுத்துகிறது. சற்று அஜாக்கிரதையாக இருந்தாலும் ஆவணப் படமாக மாறிவிடக்கூடிய இந்தப் பகுதி, மனித இயல்புகளின் சித்தரிப்புகளுடன் காட்சிப்படுத்தப்படுவதால் ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. சேவல் சண்டையில் யாராலும் வெல்ல முடியாத பேட்டைக்காரர் (ஈழக் கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன்) என்ற பெரியவரின் குழுவுக்கும், உள்ளூர் காவல் துறை அதிகாரி ரத்தினத்தின் குழுவுக்கும் சேவல் சண்டைக் களத்தில் ஜென்மப் பகை. பேட்டைக்காரரைத் தோற்கடிக்கமுடியாத ரத்தினத்தின் ஆத்திரத்தை அவரது அம்மாவின் ஆதங்கம் - சேவல் சண்டையில் வென்று குடும்ப மானத்தைக் காப்பாற்றும் வேட்கை - மேலும் கொழுந்துவிட்டு எரியச் செய்கிறது. வரவிருக்கும் சண்டையில் எப்படியாவது வெல்லவேண்டும் என்று ரத்தினம் குழு எல்லாவிதமான முயற்சிகளிலும் இறங்குகிறது.

பேட்டைக்காரரின் குழுவில் கறுப்பும் (தனுஷ்) துரையும் (கிஷோர்) முக்கியமானவர்கள். சேவலை வளர்ப்பதிலும் அதைச் சண்டைக்குத் தயார்ப்படுத்துவதிலும் பெரியவரிடம் நன்கு பயிற்சி பெற்றவர்கள். கறுப்பு தனிப்பட்ட முறையில் வளர்த்துவரும் சேவல், பந்தயத்தில் ஜெயிக்காது என்று பேட்டைக்காரர் கணிக்கிறார். ஒரு சோதனையில் அது தோற்றுவிடும்போது, சேவல்சண்டை உலகின் நியமப்படி அதைக் கொன்றுவிடும்படி பெரியவர் சொல்கிறார். ஆனால், அந்தச் சேவல்மீதுள்ள ஈடுபாட்டின் காரணமாக அதைக் கொல்லாமல் ரகசியமாக வளர்கிறான் கறுப்பு. இதற்கிடையில், தற்செயலாக அவன் கண்ணில் படும் ஆங்கிலோ-இந்தியப் பெண் ஐரின் (தப்ஸி பன்னு) மீது காதல் வயப்படுகிறான்.

ரத்தினத்துக்கும் பேட்டைக்காரருக்கும் நடக்கும் சேவல் சண்டையில் கறுப்பு, குருவை மீறித் தன் சேவலைக் களமிறக்கி ரத்தினத்தைத் தோற்கடித்து, பேட்டைக்காரரின் மானத்தைக் காப் பாற்றுகிறான். இதனால் சந்தோஷப்படுவதற்குப் பதில், குரு ஆத்திரம் அடைகிறார். கர்வ பங்கத்தால் எழும் அவமானம் அவரைப் பொசுக்குகிறது. போட்டியில் வென்று மூன்று லட்சம் பரிசாக வெல்லும் கறுப்பு, அந்தப் பணத்தை அவர் காலடியில் சமர்ப்பிக்கிறான். அவமானத்தில் புழுங்கும் குருவின் ஆத்திரம் இந்த தட்சணையைப் புறக்கணிக்கிறது. கறுப்பு அவரிடம் தொடர்ந்து விசுவாசமாகவே இருந்தாலும், அவரது போக்கு மாறுகிறது.

இடையில் கறுப்பின் காதல் மெல்ல மெல்லக் கனிகிறது. குருவின் ஆத்திரமும் கூடுகிறது. அவரது ஆளுமையில் ஏற்படும் மாற்றம் குழுவைச் சின்னாபின்னமாக்குவதுடன் கறுப்பின் அமைதியையும் குலைக்கிறது. சேவல்களை வைத்துச் சண்டை போடும் மனிதர்கள் தாங்களே சண்டைச் சேவல்களாக மாறி பரஸ்பரம் கொத்திக்கொள்கிறார்கள். ஐரினின் வீட்டில், காதலுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இந்தக் காதலும் குழுவுக்குள் நடக்கும் மோதலும் மீதிக் கதையின் போக்கைத் தீர்மானிக்கின்றன. பொறாமையும் மித்திர பேதமும் ரத்த ஆவேசமும் நிரம்பிய மனித இயல்பின் பரிமாணங்கள் வெளிப்படுகின்றன.

களத்தை வலுவான முறையில் திரையில் கட்டமைத்திருப்பது வெற்றி மாறனின் முதல் வெற்றி. அந்தக் களத்தின் பின்னணியில் மனித வாழ்வின் அசைவுகளை இயல்பாகச் சொல்லமுடிந்திருப்பது படத்தின் வலுவைக் கூட்டுகிறது. சேவல் சண்டையின் நுட்பங்களின் சித்தரிப்பில் மனித வாழ்க்கையின் அசைவும் கலந்திருபதால் சண்டைக்கான தயாரிப்பு குறித்த விவரணங்களை அலுப்புத்தட்டாமல் பார்க்க முடிகிறது. பேட்டைக்காரர், அவரது குழுவினர், கறுப்பின் அம்மா, பேட்டைக்கார

ரின் மனைவி முதலான பாத்திரங்களைக் கவனமாக வடிவமைத்திருக்கிறார். சம்பவங்களைப் பெருமளவில் சுவாரஷ்யமாக அமைத்திருக்கிறார். ஜெயபாலன், தனுஷ், கிஷோர் ஆகியோரின் நடிப்பும் தப்ஸியின் தோற்றப் பொலிவும் ஜி. வி. பிரகாஷ் குமாரின் இசையும் உரையாடல்களின் தன்மையும் படத்தோடு நம்மை ஒன்றச் செய்கின்றன. இடைவேளைக்கு முன்பு நடக்கும் சேவல் சண்டையில் நாயகனின் சேவல்தான் வெல்லும் என்பது எளிதில் யூகித்துவிடக்கூடியதுதான். ஆனால், அந்த முடிவை நோக்கி நகரும் மணித்துளிகளை விறுவிறுப்பாகக் காட்சிப்படுத்தியிருப்பதுதான் முக்கியம்.



## வணிக எல்லைக்குள்
# சாத்தியமாகும் ஒரு நேர்த்தி

ஜெயபாலன் படத்தின் தூணாக அதைத் தாங்குகிறார். மிக அநாயாசமாக அந்தப் பாத்திரத்தைக் கையாள்கிறார்

எல்லா உணர்ச்சிகளுக்கும் அவரது கண்களும் முகபாவங்களும் ஈடுகொடுக்கின்றன

கறுப்பின் அம்மா சாகும் தருணம், பெரியவரின் மனமாற்றம் ஆகியவை நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், ஐரினின் மனம் கரையும் விதம் அவ்வளவு நம்பகத்தன்மையுடன் உருப்பெறவில்லை. ஆங்கிலோ-இந்தியக் குடும்பச் சித்தரிப்பும் வலுவாக இல்லை. முதல் பாதியில் சேவல் சண்டையின் நுட்பங்களைச் சொல்ல இயக்குநர் அதிக காட்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறாரோ என்று தோன்றுகிறது. இரண்டாம் பாதியில் பெரியவரின் பிடிவாதமும் கறுப்பின் கண்மூடித்தனமான விசுவாசமும் சற்று மிகையாகவே தெரிகிறது. யூகிக்கக்கூடிய விஷயங்கள் பிற்பகுதியில் அதிகமாக இருப்பதைத் தவிர்த்திருக்கலாம். பெரியவரின் மனக் குளம் கலங்கியது காட்டப்பட்ட பிறகு, படம் இன்னமும் வேகமாக உச்சத்தை நோக்கி நகர்ந்திருக்கலாம்.

பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் நிஜ சேவல்களைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை என்பதால் சேவல் சண்டையில் கணனி வரைகலை ஆதிக்கம் செலுத்துகிறது. வரைகலையின் நுட்பங்கள் ஆகச் சிறந்த விதத்தில் பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை என்றாலும், காட்சியின் உணர்ச்சிப் பரிமாணம் அதைக் காப்பாற்றிவிடுவதில் இயக்குநருக்கு வெற்றிதான். சண்டையின்போது பரிமாறிக்கொள்ளப்படும் சவடால்களும் ரசிக்கும்படி இருக்கின்றன. வசனங்களில் கூர்மையும் இயல்பும் கூடியிருக்கின்றன. ஊரின் பொதுப் புத்தியில் உறைந்திருக்கும் பெரியவரின் படிமத்துக்குப் பாதிப்பு வரக்கூடாது என்பதால், கொலைப் பழியைச் சுமந்து கொண்டு கறுப்பு கிளம்பிச் செல்லும் இடம் கனமாக உள்ளது.

கதாநாயகனாக தனுஷ் மிகவும் உழைத்து, கறுப்பு பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார். மதுரை வழக்கைப் பெருமளவில் நம்பகத்தன்மையோடு பேசியிருக்கிறார். கண்மூடித்தனமான விசுவாசம் காட்டும் அப்பாவித்தனம், தப்ஸியிடம் ஏற்படும் ஈர்ப்பு, சண்டைக் களத்தில் தெனாவட்டு ஆகியவற்றில் இயல்பாக வெளிப்படுகிறார். அம்மா இறக்கும்போதும் பெரியவரின் நிஜ முகத்தைத் தரிசிக்கும்போதும் உணர்ச்சி நடிப்பில் முத்திரை பதிக்கிறார்.

தப்ஸியின் தோற்றமே படத்தில் அவரது பங்கு என்பதால் அவருக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. இயல்பான அழகு கொண்ட இவர் இயல்பாகவே நடமாடிப் பார்வையாளர்களைக் கவர்கிறார். அதற்கு மேல் அவருக்குச் செய்வதற்கு ஒன்றுமில்லை. நமக்கும் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

பேட்டைக்காரராக நடித்திருக்கும் ஜெயபாலன் படத்தின் தூணாக அதைத் தாங்குகிறார். மிக அநாயாசமாக அந்தப் பாத்திரத்தைக் கையாள்கிறார். தன்னம்பிக்கை, மிடுக்கு, பொறாமை, அவமானம், சந்தேகம், வன்மம் ஆகிய எல்லா உணர்ச்சிகளுக்கும் அவரது கண்களும் முக பாவங்களும் ஈடு கொடுக்கின்றன. அவருக்குக் குரல்கொடுத்திருக்கும் ராதா ரவிக்கும் பாத்திரத்தை நிலைநிறுத்துவதில் கணிசமான பங்கு இருக்கிறது.

பிரகாஷின் இசையில் துள்ளலான 'யாத்தே' பாடல் ரசிக்கும்படி இருக்கிறது. 'அய்யய்யோ...', 'ஒத்த சொல்லால...' ஆகிய பாடல்களும் கேட்க நன்றாக இருக்கின்றன. ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் காட்சிகளின் காலப் பின்னணியைக் கச்சிதமாகப் புலப்படுத்தியுள்ளார். இரவுக் காட்சிகள் படமாக்கப்பட்டிருக்கும் விதம் அற்புதம். மதுரையின் சந்து பொந்துகளைக் காட்சிப்படுத்தியுள்ள விதமும் அருமை.

ஆடுகளம், வணிகத் திரைப்படத்தின் எல்லைக்குள் நின்று உருவாக்கப்பட்டுள்ள நேர்த்தியான படம். தேர்ந்து கொண்ட களத்துக்கும் வாழ்நிலைக்கும் நேர்மையாக இருப்பதும் பார்வையாளர்களை மதிப்பதும் குறைகளை மீறி இந்தப் படத்தை முக்கியமானதாக ஆக்குகின்றன.

– தாமரை

# கால நதி

கௌரவம்

## லஷ்மி ஹோம்ஸ்ரோம்



பிரிட்டிஷ் தமிழ் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான லஷ்மி ஹோம்ஸ்ரோம், அவரது இலக்கிய பணிக்காக மகாராணியின் கடந்த ஆண்டுக்கான 'பிரிட்டிஷ் பேரரசு மாண்பாளர்' (எம்பிஈ) கௌரவ விருதைப் பெற்றிருக்கிறார். சென்னையில் பிறந்தவரான லஷ்மி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்று, பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பிரபல இந்திய எழுத்தாளர் ஆர். கே. நாராயணனைப்பற்றிய ஆய்வை மேற்கொண்டார். இங்கிலாந்திலேயே வாழ்ந்துவருகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஏராளமான தமிழ் நாவல்களையும் கவிதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள இவர், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களையும் மொழிபெயர்த்திருக்கிறார். புதுமைப்பித்தன், மௌனி, சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், ந. முத்துசாமி போன்றவர்வர்களை ஆங்கிலத்தில் அறிமுகம்செய்தவர்.


இவர் மொழிபெயர்த்த பெண்ணிய எழுத்தாளர்களான அம்பையின் 'காட்டில் ஒரு மான்' (2006) சிறுகதைத் தொகுப்பு, பாமாவின் 'கருக்கு' (2000) நாவல் என்பன இந்தியாவின் 'புக்கர் பரிசு' என மதிக்கப்பெறும் 'ஹச் குறொஸ்வேட்' புத்தக பரிசைப் பெற்றன.

பதினாறு ஈழத் தமிழ்க் கவிஞர்களும் உள்பட, முக்கியமான கவிஞர்களின் மொழிபெயர்ப்பாக வெளிவரும் *Penguin Book of Tamil Poetry* என்ற கவிதைத் தொகுப்பு, நவீன தமிழ்க் கவிதையை சர்வதேச அரங்கில் அறிமுகப்படுத்துகிறது.

பிரிட்டனில் வாழும் தெற்காசிய இனத்தவர்களின் இலக்கிய, கலைப் படைப்புகளுக்கான காப்பகம் ஒன்றையும் இவர் நிறுவியிருக்கிறார். கனடா தமிழ் இலக்கிய தோட்டத்தின் வாழ்நாள் சாதனைக்கான 'இயல் விருது' 2007இல் இவருக்கு வழங்கப்பட்டது.

கௌரவம்

## ஆ. தேவராஜன்



நியூசிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழர் திரு ஆ. தேவராஜன் அங்குள்ள தமிழ் சமூகத்துக்கு ஆற்றிய சேவைக்காக பிரிட்டிஷ் மகாராணியின் கடந்த ஆண்டு 'மகாராணி சேவை பதக்கம்' விருது பெற்றுள்ளார்.


கலை, இலக்கிய ஆர்வலரான திரு தேவராஜன், புதைபொருள் ஆய்விலும் ஈடுபாடுகொண்டவர். இலங்கையில் பிராமி எழுத்துக்கள் பற்றிய கற்கையை மேற்கொண்டவர். பல தமிழ், ஆங்கில கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இலங்கையில் இருந்த காலத்தில் ஆறுமுக நாவலர், 'சதாவதானம்' கதிரைவேற்பிள்ளை, தனிநாயக அடிகளார் தொடர்பான பலவேறு பணி முயற்சிகளில் ஈடுபட்டவர்.

யாழ்ப்பாணம், புலோலியைச் சேர்ந்த இவர், ஹாட்லி கல்லூரியில் பயின்றவர். 1997இல் நியூசிலாந்து சென்றார்.

கௌரவம்

## செ. யோகமூர்த்தி



போக்குவரத்து திணைக்களத்தில் ஆற்றிய சிறந்த பணிக்காக இலங்கையரான திரு செ. யோகமூர்த்தி, மகாராணியின் 'பிரிட்டிஷ் பேரரசு மாண்பாளர்' (எம்பிஈ) கௌரவ விருதைப் பெற்றிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக சிவில் பொறியியலாளரான இவர், 1972இல் இங்கிலாந்து வந்தார். நெடுஞ்சாலைகள் நிர்மாணத்தில் பணியாற்றி, பின்னர் 1987இல் பர்மிங்ஹாமில் போக்குவரத்து திணைக்களத்தில் அளவை மதிப்பீட்டாளராக இணைந்து தலைமைப் பதவியை அடைந்தார்.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், பர்மிங்ஹாமில் தமிழ்ப் பாடசாலை ஒன்றையும் 1986இல் ஆரம்பித்தார்.

மறைவு

### கா. பொ. இரத்தினம்

ஆன்ற தமிழ் அறிஞராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவரது 96ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டத்துடன் லண்டன் பல்கலைக்கழக பட்டதாரியாகவும், சிறந்த தமிழ் அறிஞராகவும் தமிழ் விரிவுரையாளராகவும் விளங்கிய பண்டிதர் இரத்தினம், திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அழைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் அரசியலில் இணைந்தார்.

1965இல் கிளிநொச்சி தொகுதியிலும், பின்னர் 1970, 1977



தேர்தல்களில் ஊர்காவற்றுறை தொகுதியிலும் தெரிவாகி, 1983இல் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி துறக்கும்வரை 18 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த கா. பொ. இரத்தினம் செயல்திறன் மிக்க, மிகச் சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக திகழ்ந்தார். 1970 பொதுத் தேர்தலில் திரு அ. அமிர்தலிங்கம், திரு மு. சிவசிதம்பரம் ஆகியோர் தோல்வியுற்றவேளையில், சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் இலங்கையில் புதிய குடியரசு அரசியலமைப்பைக் கொணர்ந்தபோது, அவ்வேளையில் தமிழர்களின் அரசியல், மொழி உரிமைகளுக்காக பாராளுமன்றத்தில் வாதிட்டதில் பண்டிதர் இரத்தினத்துக்கும் முக்கிய பங்கு உண்டு.

மறைவு

### எஸ். சிவநாயகம்



யாழ்ப்பாணத்தின் உயர்ந்த 'கல்விச் சிந்தனை' மரபின் வாரிசு ஒருவராக விளங்கிய திரு எஸ். சிவநாயகம், இலங்கையின் புகழ்வாய்ந்த பத்திரிகையாளர்களுள் ஒருவராக திகழ்ந்தவர்.

தனக்கென்று ஓர் அடையாளத்துடன், கொழும்பில் 'டெய்லி நியூஸ்', 'டெய்லி மிறர்' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர், இலங்கையில் ஏற்பட்ட ஒரு பெரும் அரசியல் மாற்ற காலத்தில், 1982இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'சற்றர்டே றிவியூ' வார பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரானார்.

இலங்கைத் தமிழர்களின் அரசியலில் தீவிரவாதமும் ஆயுத போராட்டமும் ஆரம்பித்த அக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான அப் பத்திரிகை பெரும் கவனத்தை ஈர்த்தது. அரசின் கண்காணிப்புக்கும் உள்ளானது. ஈற்றில், பத்திரிகை தடைசெய்யப்பட்டு, காரியாலயம் அரசாங்கத்தால் 'சீல்' வைக்கப்பட்டபோது, திரு சிவநாயகம் இரவோடிரவாக இந்தியா சென்றார்.

சென்னையில், தமிழ் தகவல் நடுவத்துக்காக பணியாற்றிக் கொண்டிருக்கையில், ராஜீவ் காந்தி கொலையையடுத்து 'தடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். ஒரு பத்திரிகையாளனாக, நோயுமுற்றநிலையில் திரு சிவநாயகத்தின் இந்த சிறைவாழ்வு துயரமானது.

பின்னர், பிரான்சிலும் இங்கிலாந்திலும் சிறிதுகாலம் வாழ்ந்த இவர், அக் காலத்தில் 'ஹொட் ஸ்பிரிங்' சஞ்சிகையின் ஆசிரியராகவிருந்தார்.


*Pen and the Gun, Sri Lanka: Witness to History* என்று இவர் எழுதிய இரண்டு நூல்களும் இலங்கை அரசியல் தொடர்பான வரலாற்று ஆவணங்களாக முக்கியம் பெறுபவை.

நோயுற்ற நிலையில் கொழும்பு திரும்பிய இவர் அங்கும் புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்புடனேயே வாழ்ந்துவந்தார்.

தன்னுடைய சட்டப்படிப்பை இடைநிறுத்தி, பத்திரிகைத்துறையுள் புகுந்த திரு சிவநாயகம், அவருடைய 80ஆவது வயதில் காலமானார்.

மறைவு

### எஸ். பேரின்பநாதன்




பிரிட்டனில் தமிழர்களின் கலாசார அடையாளத்தை உரியவிதத்தில் பேணுவதிலும் நிலைகொள்ள வைப்பதிலும் தெளிவுடன், பல்வேறு ஆக்க பணிகளிலும் முயற்சிகளிலும் பின்புலத்தில் ஆர்வத்துடன் செயல்பட்டுக்கொண்டிருந்த அரிதான ஒரு மனிதர் 'பெரி' என்று லண்டன் சமூகத்தில் நடமாடிய திரு. எஸ். பேரின்பநாதன். தமிழர் நலன்சார்ந்த அனைத்திலும் அவரின் கரிசனை இருந்தது.

அதேவிதமாகவே, இலங்கையில் தமிழர்களின் அரசியல் பிரச்னையிலும் யதார்த்தத்தில் நியாயமான உரிமையை விரும்பி, இயன்றவிதத்தில் முயன்றார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்ற இவர், 1970இல் லண்டன் வந்து பொறியியலாளரானார். லண்டனில் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தையும் இவர் ஆரம்பித்தார்.

சிறிதுகாலம் சாம்பியாவிலும் பணியாற்றி லண்டன் திரும்பியவர், பின்னர், நிதி முகாமைத்துவ நிறுவனம் ஒன்றை நிர்வகித்துவந்தார். 65 வயதான திரு பேரின்பநாதன், மாரடைப்பால் திடீரென்று காலமானார்.


Kumaran Silks
since 1955
PANAGAL PARK, CHENNAI - 17
TAMILNADU, INDIA.
www.kumaransilks.net
CUSTOMER CARE
(044) 4222 0077
12,Nageswaran Road,Panagal Park,T.Nagar,Chennai-17.Ph:(044)-24343544 / 3727 / 3757.



இலண்டனில்
தரமான
தங்கத்திற்கு
Lakshmis
Jewellers
276 High Street North London E12 6SA UK Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

Traditional Sri Lankan and other Asian cooking adapted for modern living in the West

# Rice & ~~Curry~~ Kari

by

## Sivakamy Mahalingham

**A must have book for all those interested in easy preparation of authentic Sri Lankan/Asian dishes**

**தமிழர் பாரம்பரிய சமையல் முறைகளை எங்கள் புதிய தலைமுறையினர் சமைத்துப் பழக ஓர் அரிய நூல்**




570 Pages... Over 400 Recipes...

**Price £24.50**

கிடைக்குமிடங்கள்

**Available at**

**EASTHAM:**

**Sri Murugan Temple** (Veg. only)
0208 478 8433

**Seelan Super Stores**
0208 471 5733

**Station Super Stores**
0208 503 4711

**HARROW:**
0208 933 3498

**NEW MALDEN:**
0208 949 8876

**WATFORD:**
01923 238 062

**CAMBRIDGE:**
01223 214709

sivakamy@gmail.com
sivakamy@talktalk.net

All profit from this edition to be donated to Cambridge Addenbrooke's NHS Trust Oncology Unit, Great Ormond Street Hospital for Children and the London Sri Murugan Temple

# MORELAND
International

M

**ATTENTION OWNERS/LANDLORDS**

**WE URGENTLY NEED MORE PROPERTIES**

**FOR SALES AND LETTINGS IN**

**EDGWARE, BURNT OAK, CANONS PARK, COLINDALE, KINGSBURY, KENTON, QUEENSBURY, STANMORE, MILL HILL, HARROW**

**SPECIAL OFFER FOR ALL READERS**
**1% SALES COMMISSION**

morelanduk.com

info@morelanduk.com

**DISCOVER THE DIFFERENCE call us on 0208 238 5840**

# GLOBAL TOWERS HOTEL –SRI LANKA

**Offers Special rates for Two & Three bedroom apartments**

**Our Facilities**

24hour In-room dining
Restaurant & Bar
Internet Broadband with Wi Fi Facility
Indoor Swimming Pool
Laundry Services, Hair & Beauty Salon
Business Centre
Extensive rooftop Banquet & Conference Facilities
Wellness Spa/Jacuzzi/Stream Room
Gift Shop,
Travel & Tour office

SGL OR DBL Room only - US $ 57 Incl of taxes
SGL OR DBL Studio (Living & Room) - US $ 75 incl of taxes

2 BR Apt. (Maximum 5 persons) - US $ 135 Incl of taxes
3 BR Apt. (Maximum 7 persons) - US $ 175 Incl of taxes

Breakfast per person - US $ 7 Inclusive of all taxes.







**Tel:** 0094 11 259 1000
**Emails:** nalin@globallanka.com or info@globallanka.com
**Address:** No. 11, Station Avenue (Marine Drive) Colombo 06, Sri Lanka.
**UK Office:** 02082385840 – info@morelanduk.com




**COMPLETE FLOORING · SALES AND SERVICE**

Hardwood Laminate Carpet Tile Granite Marble Vinyl Cork
Marmoleum Kitchen cabinets Countertops Vanities Medallion

**IDEAL**
Flooring Centre
Custom Kitchens & Vanities

**www.myideal.ca**

10 Milner Business Court, Suite 400,Scarborough, ON, M1B 3C6
Phone: 416-754-3500 Fax: 416-754-3537